# காற்றுவெளி

ஆவணி - 2023



**காற்றுவெளி**
கலை இலக்கிய இதழ்

ஆவணி - 2023

படைப்புக்கள் அனுப்ப :
Neythal34@gmail.com
Mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


# வணக்கம்

காற்றுவெளியின் ஆவணி மாத மின்னிதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.

கடந்த மாத நம்மவர்களின் கதைகளின் சிறப்பிதழுக்கு படைப்பாளர்கள்,வாசகர்கள் தந்த ஆதரவிற்கு நன்றி. அச்சில் கொண்டுவர முடியவில்லையே எனும் ஆதங்கம் என்றுமுண்டு.அச்சகச் செலவு,தபாற்செலவு என நிறையவே உண்டு.புலம்பெயர் நாடுகளில் அதிகமான இதழ்கள் இலவசமாகவே வருகின்றன. அதைப் போலவே காற்றுவெளியும் வரட்டுமே என்கிற மனப்பான்மை பலரிடமுண்டு.கண்காட்சியில் நாம் அறிமுகம் செய்தபோது பலரிடமிருந்து இது உணரப்பட்டது.ஒவ்வொரு பத்திரிகை,சஞ்சிகைகளுக்குப் பின்னே பலரின் உழைப்பும்,கனவுகளும் உண்டென்பதை யாரும் உணர்வதில்லை.விளம்பரங்கல் எளிதில் கிடைப்பதில்லை.அப்படியே கிடைத்தாலும் அதற்கான பணத்தைப் பெற நடையாய் நடக்கவேண்டும். காற்றுவெளி இதுவரை இரண்டு விளம்பரங்களைப் போட்டும் இருபது வருடங்களுக்கு மேலாகியும் பெறமுடியவில்லை.அதனால் விளம்பரதாரர்களை நாடுவதில்லை எனும் முடிவுக்கு வந்தோம் என்பதே உண்மை.

நூல் அறிமுகத்திற்கான பகுதியை ஆரம்பிக்கலாம் எனும் அறிவித்தல் தந்தும் யாரும் கரிசனை காட்டாததால் அப்பகுதி ஆரம்பிக்கப்படவில்லை. படைப்புகள் அனுப்பும் படைப்பாளர்கள் லதா எழுத்துருவிலும்,எழுத்துப்பிழைகளின்றியும் அனுப்புங்கள்.காலதாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.காற்றுவெளி நிறுவனமல்ல. தனித்த உழைப்பில் நடத்தப்படுவது.சிரமங்கள் அதிகம். புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறோம். காற்றுவெளியின் அடுத்த இதழ் ஈழத்து எழுத்தாளர்.செம்பியன்செல்வன் அவர்களின் ஞாபகார்த்த சிறப்பிதழ்.அவ்விதழுக்கான படைப்புக்களை 18/08/2023 இற்கு முன்னர் அனுப்பி உதவுங்கள்.

ஈழத்தமிழர் பிரச்சினை பல காலங்களாக தீர்க்கப்படாமல்,அகிம்சை,ஆயுத வழிகளில் முயன்றும் இன்னும் ஆரோக்கியமான சூழல் அமையவில்லை. திம்புக்கோட்பாடு,அதன் பிறகு எத்தனை ஒப்பந்தங்கள்,பேச்சுவார்த்தைகள்,தீர்வுப்பொதிகளென காலம் கடத்துவதிலேயே பலரும் முனைப்புக்காட்டுவதாகவே புலப்படுகிறது.தங்கள் இருப்பை நிலைநிறுத்திக்கொள்ளவே அரசியல்வாதிகளும்,பிராந்திய நாடுகளும் முனைப்புக் காட்டுவதால் காலத்துக்குக்காலம் தமிழ்மக்கள் ஏமாற்றமடைந்தே வருகிறார்கள்.மண்ணில் மடிந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்காகவும்,நமது மாவீரர்களுக்காவும் எதிர்காலத்தில் என்ன பதில் வைத்திருக்கிறோம்.அனைவரும் சிந்திப்போம்.

உலகில் ஏற்பட்டுள்ள நோய்த்தொற்றுகள்,யுத்த அச்சுறுத்தல்கள்,அவலங்கள் நீங்கி சுபீட்சமான வாழ்வை ஒவ்வொருவரும் பெறவேண்டும் என்பதே காற்றுவெளியின் பிரார்த்தனை.

நம்பிக்கையுடன் பயணிப்போம்.

அன்புடன்,
சோபா
*01.08.2023*

# படைப்பாளர்கள்

## கவிதைகள்

1. பாரியன்பன் நாகராஜன் (பாரியன்பன் நாகராஜன் – கவிதைகள்)
2. ஜெயா ஸ்ரீ( முகமூடி  மனிதர்கள்)
3. எஸ். ஜெயப்பிரகாஷ்(சொந்த வீடு)
4. - லைலா (பட்டாம்பூச்சி நடுங்கும்...)
5. வட்டக்கச்சி வினோத் (ஊரெல்லாம் திருவிழா...)
6. வில்லரசன் (இலங்கை) (வில்லரசன் கவிதைகள்)
7. கவிஞர் சே கார்கவி(தன்முனைக்கவிதைகள்)
8. மகிழை.சிவகார்த்தி (வெட்கம்)
9. அம்பலவன்புவனேந்திரன்.. (யேர்மனி).(சத்தியமும் சாத்தியமும்)
10. மு.முபாரக் (நேற்றுவரை...)
11. பாக்யபாரதி... (கனவாய்ப் போன முதற்காதல்)
12. மலர்மகள் (குறும் பாக்கள்)
13. இரா.மதிராஜ் (ஒரு மரத்தை வளர்ப்பதால்....)
14. ச. இராஜ்குமார்  (வெறுமையாய் கிடக்கிறது தெருக்கள்)
15. இளையவன் சிவா (வண்ணத்துப்பூச்சி பூவின்...)
16. பெ. விஜயலட்சுமி (துளிப்பாக்கள்)
17. பா.சிவகுமார்(வண்ணத்துப் பூச்சி விளைவுகள்)
18. காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்(இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு)
19. DR.ஜலீலா முஸம்மில்  (மூர்ச்சை அடைந்த புல்லாங்குழல்...)
20. சங்கர சுப்பிரமணியன் (எப்போது எழத்தாளன்?)
21. தங்கேஸ் (தங்கேஸ் கவிதைகள்)
22. வளவ துரையன் (புதுவெள்ளம்)
23. ஜனனி வேணுகானன் (எழுதலின் விதிகள், சலித்துப் போன பகலும் சில நினைவுகளும்

## சிறுகதைகள்

1. அங்கையன் கயிலாசநாதன்(அலையைத் தாண்டி)
2. நௌஷாத் கான் லி (உசுரு ...)
3. கே.எஸ்.சுதாகர்(ஆர்வம்)
4. விஸ்வகாந்தி(கம்பிகளுக்குப் பின்னால்)
5. தி.வள்ளி (சஞ்சலம் ஏன் சஞ்சனா ???)
6. அ.முத்துவிஜயன்(பொஸ்போனத்தம்மா)
7. யாழ்ராகவன்...பெரியோர்களே தாய்மார்களே.
8. சொக்கன்(இலங்கை) (கடல்)

## கட்டுரைகள்

1. பிரேமா இரவிச்சந்திரன் (சென்னை)(நூல் வாசிப்பனுபவம்:பாரதி விஜயம்(கடற்கரய் மத்தவிலாச அங்கதம்)
2. மைத்திரிஅன்பு (புதுக்கவிதையில் கோட்பாடுகள்)
3. முனைவர் .சு.சோமசுந்தரி(ஈழத்துச் சிறுகதைகளில் சமுதாயச் சித்தரிப்பும் பேச்சுமொழி வழக்கும் )

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

பின்னால் ஒளிரும் விளக்கு
முன்னுக்குத் தள்ளுகிறது
நிழலை.

௬

உழத் தெரிந்தவனையும்
உயரத் தெரிந்தவனையும்
அருகில் சேர்த்துக் கொள்கிறது
நிலம்.

௬

கவிதை புனைய
விருப்பமென்பது உண்மைதான்.
அதற்காக இரவு நேரத்திலும்
என்னை உறங்க விடாமல்
தொந்தரவு செய்கிறது
கவிதை.

௬

மண் எவ்வளவு விருப்பமோ
அதே விருப்பத்தில்
மொத்தமாய் தின்னும் மண்.

௬

நான் மௌனவிரதம்
உங்களிடம் ஓய்வறியாது
பேசிக்கொண்டு இருக்கிறது
எனது கவிதைகள்.

௬

புனையாத கவிதைக்கு
கருப்பொருளைத் தருகிறான்
தற்செயலாய் அகப்படும்
வழிப்போக்கன்.

௬

நேற்று-
உணவு பொட்டலத்தில்.
இன்று-
குடிநீர் ஞெகிழிபாட்டலில்.
நாளை-
ஆக்ஸிஜன் குப்பியில்...

௬

எழுத முயன்று முயன்று
தோற்றுப் போனேன்.
இறுதி வரையில் வரவில்லை
கவிதையில் பூவின் வாசம்.

௬

நிலத்தை
முள்ளாய்த் தைக்கிறது
முதலில் விழுந்த தூறல்.

௬

வழக்கத்தை விடவும்
கூடுதல் அழகாய் ஜொலிக்கிறது
என்னவள் பறித்த ரோஜா.

௬

அன்றொரு நாள்
என்னிடமிருந்து சில சொற்களை
கொண்டு போனவன்
பின்னொரு நாளில்
என்னைச் சந்திக்க வருகையில்
கவிதைகளோடு வந்தான்
அந்தக் கவிதைகள் அனைத்திலும்
எனது சாயல்.

ஜெயா ஸ்ரீ

## முகமூடி மனிதர்கள்




முகமூடி மனிதர்கள்
முன்னுக்குப் பின்
முரணாய் பேசுவர்
முழுவதும் பொய்யே
ஆசை காட்டி
ஆளை ஏமாற்றுவர்
அன்பற்ற மிருகங்கள்
அருமை தெரியாதவர்கள்
நேரத்துக்கு நேரம்
மாறும் பச்சோந்திகள்
பணக்காரர் போல்
பகட்டாய் வாழ்வர்
வஞ்சகம் பொறாமையுடன்
வஞ்சனை செய்வர்
நல்லவர் வேடமிட்டு
நாட்டையே கெடுப்பர்
அப்பாவிகளை நம்பவைப்பர்
அரிதாரம்பூசிய நடிகர்கள்
இனிக்கப் பேசியே
இயல்பாய் மயக்குவர்.



எஸ். ஜெயப்பிரகாஷ், சேலம்

## சொந்த வீடு

அந்த வழியாக
செல்லும் போதெல்லாம்
தலைகுனிந்து செல்வேன்...
சிலசமயம்
எங்கோ பார்த்துக் கொண்டே
கடந்து செல்வேன்...
சிலசமயம்
பார்த்தும்
  பார்க்காதது போல்
நடந்து செல்வேன்...
எப்படி சென்றாலும்
கண்ணீரை மட்டும்
அடக்க முடியவில்லை
கடனில் இழந்த
சொந்த வீட்டை
கடந்து போகையில்...



லைலா


## பட்டாம்பூச்சி நடுங்கும்

கண்ணாமூச்சி விளையாட்டின் போதுதான் கதை சொல்ல ஆரம்பித்தாள்
ஆழமான மௌனத்தின் சூல் விட்டு அப்போது தான் வெளிவந்தாள்
என் கலங்கமற்ற ஆரம்பம் அவள்
ஒரு சொல்லிலிருந்து இறங்கி விரிந்து பருவடிவம் கொண்டு ஓசையிட்டு நகர்வாள்
கானல் நீரின் ஜீவ ஊற்று கொதித்து அதையும் தாண்டி ஒரு முறை கொதிக்கும்

ஒரு பெரிய அமைதியால் என்னை வெல்லும் அவள்தான்
வார்த்தைகளை விட உரக்கப் பேசுவாள்
இருட்டு ஒன்றின் ஓசையை இன்னொன்றாக மாற்றிக்காட்டுகிறாள்

முடிந்து விட்டது என நினைக்கும் இடத்தில் தான்
ஒரு புதிய மௌனத்தை ஆரம்பம் செய்வாள்
உலகில் சொல்ல முடியாத மௌனக் கதைகள்
இருக்கும் வரை இவள் கதை வளர்த்துக் கொண்டே இருப்பாள்

இப்போது நாணிய இமைக்குள் மூழ்கிக் கொண்டே இருக்கிறாள்
தூரத்தில் குலவை ஒலி
காட்டின் நிசப்த இருளில் அவளின் மூக்குத்தி ஒளி
இவள் அவளே தான்.



**வட்டக்கச்சி, வினோத்**

ஊரெல்லாம் திருவிழா
தேரோட்டப் பெருவிழா
பொருளாதார திண்டாட்டம்
எப்படி தேரோடும்
தினம் தினம் கொண்டாட
அடிமைக்கு எங்கே மூலதனம்
இது எரித்தாலும் எழும்
உழைத்தே முன்னே வரும்
பண்பாட்டின் வழி வாழும்
பண்பான பழம்பெரும் இனம்
ஓவ்வொரு விழாவிலும் பலருக்கு வருமானம்
கச்சான் கடை தொடங்கி கற்பூரக் கடைவரை கூடும் கூட்டம்
பூசாரி பையில் நிறையும் பணமும்
கலைஞர் முகத்தில் சிரிப்பு எழவும்
பதுக்கும் பணத்தால் வருகின்ற கேடும்
விழாக்கள் தோறும் கரையும் செல்வம்
ஏழை கையில் உழைப்பில் சேரும்
ஏழையின் சிரிப்பில் உலகை பாரும்
வாழ்க்கை ஒரு கொண்டாட்டம்
தினம் தினம் கொண்டாடும்
எல்லோரையும் சேர்த்தாகும்
எதிர்காலத்தின் நல் விதையாகும்.

# வில்வரசன் கவிதைகள்

## நவயுக வகுப்பறை

ஒவ்வொரு நாளும்
வகுப்பறைக்குள் நுழையும் போதெல்லாம்
கண்கள் தேடுகின்றன
எனது பிரதியை

இறுதியும் முதலுமற்ற
ஆசனத்தில் பௌவியமாய்
வால் மடக்கி உட்கார்ந்திருந்த
எனது பிரதிகள்
இப்போதெல்லாம்
கூர்படைந்திருந்தனர்

சட்டைக் காலர்களை மடக்கி
வாரி இழுக்காத தலைகளுடன்
ஒற்றை கொப்பியுடன்
ஒய்யாரமாய் பள்ளிக்கு வரும் அவர்கள்
பிரம்பின் சொடுக்குகளுக்கு
பயந்து சொற்கள் உதிர்க்கும்
எனது தலைமுறையின்
பிரதிகளாய் இப்போதில்லை..

ஒவ்வொரு காலையிலும்
கோபமாய் நீளும் அறச்சொற்பொழிவுக்கு பிறகு
கொஞ்சம் அமைதியாய் இருக்கும் அந்த
வகுப்பறையில்
மீண்டும் மீண்டும்
நினைவில் அசைகின்றன
என் வாத்தியார்களின் கோபக்குரல்கள்

## தினசரி அட்டைகள்

எப்போதும் பயந்தபடி தான்
இருக்கிறேன்
சலனமில்லாமல் உடல் தழுவிக்
குருதியை உறிஞ்சும்
அட்டைகளைக் குறித்து

காற் செருப்புடன்
நீண்ட தூரம் காவி வந்து
குருதி விருந்து
கொடுத்த பிறகு தான்
கண்டுபிடிக்கிறேன்
ஒவ்வொரு அட்டைகளாய்

குடித்து முடித்து
என் உதிரத்தில் உடல் உப்பி
அசையாமற் கிடக்கும் அவ்வட்டைகளை
அவ்வளவு லேசில்
நசித்து விட மனமில்லை

பரிதாபம் எதுவுமில்லை
பிழைத்துப் போகட்டுமே
அவ்வளவு தான்.

கவிஞர் சே கார்கவி, நாகப்பட்டினம்

# தன்முனைக்கவிதைகள்

ஆசை பிறந்தவுடன்
புத்தன் மறைகிறான்
நிலாவை கேட்கிறது
ஒற்றைக்காலில் குழந்தை

ல

நான்கு கால்கள்
பற்றாமல் போய்விடுகிறது
தன்னம்பிக்கை இழந்த
மர நாற்காலிக்கு

ல

விரல் உரசிடம்
பட்டம் ஏற்றுகிறேன்
இறகு உதிர்ந்தால்
உயரம் பறக்கிறது பறவை

ல

நடுவாகில் நான்
மிதத்த நாட்கள் அது
இடை தள்ளிட நடனமாடும்
என்னவளின் பாத அழுத்தங்கள்

ல

காற்றடைத்த பெட்டிக்குள்
என்னவெல்லாம் தேடுவீர்
உள்ளேயும் வெளியேயும்
நிறைந்தால் மட்டுமே உயிர்

ல

வானம் பார்த்ததும்
அப்பா சிரிக்கிறார்
வாசல் பார்க்கிறேன்
அம்மா புன்னகைக்கிறாள்

ல

ஒரு விதை நடுகிறேன்
சிறு நீர் ஊற்றுகிறேன்
மண்ணை காணவில்லை
மனிதர் உருவில் மரம்

ல

நன்றி செய்தவரை
நலமா என்றது வாழ்வு
நடுங்கிக் கொண்டே
எதிரெதிரே மழையும் பூனையும்

ல

வனம் தேடினேன்
விதை என்னுள்
தாத்தாவின் சாயலில்
நானும் அண்ணனும்

ல


வளைய நிழல் தேடி
மரம் கீழ் நிற்கிறேன்
வளைந்த மனம் தேடி
நகர்கிறது மெல்ல

ல

ஏளனமாய் சிரித்தவனுக்கு
ஒன்று மட்டும் பரிசு
சிரித்தவன் முன்னால்
மௌனம் கொண்டவன் வெற்றி

ல

தினம் விடியல் என்பது
ஒருவனின் எதிர்பார்ப்பு
வண்ணங்களை மட்டும்
தந்து செல்கிறது பட்டாம்பூச்சி.



மகிழை.சிவகார்த்தி

## “வெட்கம்”

இரவில் அவளுக்குள்
ஒளிந்து கொள்ளும்!
பகலில் முன் வந்து
நாட்டியமாடும்
"வெட்கம்"..!

൭

அவள் வெட்கத்தை
இருக்க மூட்டைகட்டி
தான் வைத்தேன்
அப்படியும் எப்படியோ
வந்து விட்டது
அவளுக்குள்!
ஆம்...
அவள் முந்தானை
விலகியிருக்க கூடும்!

൭

வெட்கம் வரட்டும்
பரவாயில்லை!
அதற்காக ஆடை
துறந்த பின்னும்
முகத்தை மூடுவது
என்பது
என்ன ஞாயம்..!

൭

சாமத்திற்கும்
காமத்திற்கும்
இடையிலான
பெண்டுலம்
அவளுக்கு
"வெட்கம்".. !

൭

கதவை திறந்து விட்டு
வெட்கத்தை மூடினாய்!
ஆடைகளை களைந்தேன்
முகத்தை மூடினாய்!
இருதியாய் வெட்கமே
திறந்து வைக்கிறது
நம் காமத்திற்கான
கதவை!

@

ஏவாலுக்கு
ஆப்பிளில்
வெட்கம் விளைந்தது!
உனக்கு எதனில்
காதலிலா
காமத்திலா!




அம்பலவன்புவனேந்திரன், யேர்மனி.


# சத்தியமும் சாத்தியமும்

எழுதித் தீர்ந்தி;டா இரணங்களின் வலிகள்
எளிதில் தீர்ந்தி;ட வழிகள்தான் உள்ளதோ
பழுதாய் போகிற பண்பாட்டு முறைமையில்
பழிகளைக் களைந்திடப் பலர் பாராமுகமோ
அழுதே புலம்பிடும் அன்றாட வாழ்வினை
அழித்து திருத்திடல் இனிச் சாத்தியமாமோ
மழுவாய் இறங்கிடும் மனதுக்குள் போதையை
மழித்திடும் காலமினி மலர்ந்தான் வரும்மோ
புழுவெனத் துடித்தே பொருதிடும் வாழ்வினை
புழுதியில் தள்ளிடல் புரைதனைத் நீக்குமோ
கழுதையின் முதுகாய்க் கனத்தினை களைந்து
களித்திட இளையோர்க்கு கல்வி கைதருமோ
விழுதாய் இறங்கும் வேற்றுக் கலாச்சாரத்தை
விழிகளின் கனல்கள் வேரோடு அறுத்திடுமோ
தொழுதிடும் கரங்கள் தொண்டென்ற பேரில்த்
தொழிலாய்ப் பண்ணிடும் சூழ்ச்சிகள் அறமோ
உழுது வாழ்வோர்க்கு உரமூட்டும் வகையில்
உளிகள் கொண்டு உரிமையை செதுக்குவீரோ
கழுவியே எடுத்துக் கறைகளெலாம் நீக்கியே
கழிந்திட்ட காலத்தின் கண்ணீரை மாற்றுவோம்
நழுவிடாத வாய்ப்பினில் நலம்பல படைத்திட
நலிந்திட்ட வர்க்கத்துக்கு நல்லுரம் ஏற்றிவோம்
தழுவிடும் ஞானத்தை தகைமையாய் ஆக்கியே
தமிழின் உயர்வால் தரணிக்கே உணர்த்துவோம்.

மு.முபாரக்


# நேற்றுவரை

எனக்கென எத்தனையோ உறவுகளும்
நட்புகளுமிருந்தன,
பேசுவதற்கும் ரசிப்பதற்கும் எத்தனையோ
கதைகளுமிருந்தன,
விடுமுறை நாட்களை
விடுமுறையில்லா நாட்களாய்
மாற்றிய நினைவுகள் மட்டுமே
இப்போதிருக்கின்றன...
காலத்தின் ஓட்டத்தின் கானலானது
உறவுகள்
காசின் ஓட்டத்தில் காணாமல் போனது
நட்புகள்,
அலைபேசி அழைப்புகளுக்கு காசிருக்கும் போதே
மணிக்கணக்கில் பேசியவர்கள்,
எவ்வளவு நேரம் பேசினாலும்
இலவசமென்ற காலத்தில் மௌனமாய்
தொலைகிறோம்,
நீயின்றி நானில்லையென சொன்னவர்கள்
கண்டும் காணாமல் கடந்துபோகிறார்கள்...
எல்லாமே கடந்து போகும் வாழ்வில்
எதையும் மறந்து போகாத வலிகளை
தந்திருக்கிறது காலம்...
இப்போது யாருடனும் பேச
விருப்பமில்லையென்றாலும் நினைவுகளுடன்
கடந்துகொண்டிருக்கிறேன் இவ்வாழ்க்கையை,
நட்புகளும் உறவுகளும் தராத ஆறுதலை சோட்டா
பீமிடமும் காலியாவிடமும் கொஞ்சம் கொஞ்சம்
கடன் வாங்கி!



பாக்யபாரதி...

# கனவாய்ப் போன முதற்காதல்



என்
மழலைப் பருவத்தில்
புன்னகையாலும்
சிரிப்பாலும்
அனைவருக்கும்
பிடித்தவனானேன்!
மாணவப் பருவத்தில்
பழகும் விதத்தால்
மற்றவர்களுக்கும்
பிடித்தவனானேன்!
பள்ளிப் பருவத்தில்
படிப்பில் முதலிடம்
பெற்றதால்
ஆசிரியர்களுக்கும்
பிடித்தவனானேன்!
கல்லாரி சாலையில்
கால் பதித்த நேரம்
கலையரங்க நிகழ்வுகளில்
ஆர்வம் அதிகரிக்க
படிப்பிலோ சரிவு...
இருந்தாலும்
பாடல், கவிதை
நடனத்திலென நான்
களம் இறங்கியதால்
பெண்களுக்கும்
பிடித்தவனானேன்!
அதுவரை
பெண் வாசம்
நுழையாத
என் மனதிற்கு
உடன் பயின்றவளைப்
பிடித்துப் போனது!
உருகி உருகி
காதலிக்கத் தொடங்கினேன்!

அவள் செல்லும்
இடங்களிலெல்லாம்
பின் தொடர்ந்தேன்!
அவளின்
விரல்களும் இதழ்களும்
தீண்டிய
பொருட்களையெல்லாம்
சேகரித்து வைத்தேன்!
கொஞ்சம் கொஞ்சமாக
மெல்ல நெருங்கி -என்
செல்லக் காதலை
அவளிடம் சொன்னேன்!
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும்
பிடித்துப்போன என்னை
ஏனோ - அவளுக்கு மட்டும்
பிடிக்காமல் போயிற்று!
காரணம் தெரியாமலேயே
எந்தன் முதற்காதல்
கனவாகவே போனது..!



# அலையைத் தாண்டி பார்வதி கலங்கிப்போனாள்!

அங்கையன் கயிலாசநாதன்

யுகத்தின் கணவேகச் சுழற்சியில் ஒன்றுமே அறியாத சிசுவைப் போல, விழி பிதுங்கி அழுதாள். அவளைத் தேற்ற அப்பொழுது ஒருவருமில்லை.

மற்றையவர்கள் அழுவதைப் பார்த்துச் சிரிப்பதும், சிரிப்தைப் பார்த்து எரிவதுந்தானே இந்தப் பிறப்பு எடுத்து எல்லோரும் கண்ட அனுபவம்?

அவளுடைய குழந்தைகள் மூன்றும் கதிகலங்கிவிட்டன! நான்காவது என்று மூச்சற்றுப் பேச்சற்று வயிற்றிலேயே உருவாகிக் கொண்டிருந்த அடுத்த குழந்தையை அடித்து அழவைத்தாள் பார்வதி.

வயிற்று நோவுடன் தன்னையே தான் வருத்திக்கொண்ட வலி வேறு அவளைப் போட்டுச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

"அட! பாவியளே! நீங்கள் நல்லாயிருப்பியளா எப்படி வாழ்ந்த எங்கடை குடும்பத்தை வேரோடை சாய்க்கப் பாக்கியறியயேன்!"

"இந்த மூண்டு குஞ்சோடை, நாலாவதையும் வைச்சண்டு என்னை என்ன செய்யச்சொலுறியள். கடவுளே! இவங்கடை அக்கிரமத்தைச் சகியாமல் நீயும் தூரப் போயிட்டியே! கண்கெட்டவங்கடை காரியங்களுக்கு எட்ட நின்டு கொண்டு ஒத்தாசை புரியிறையோ?... ஐ...யோ!

பார்வதி யாரையோ அப்படித் திட்டிக் கொண்டிருந்தாள். உலர்ந்து வற்றிப்போன அவளுடைய முகம் கண்ணீர்க் கறைகளால் நிரம்பிக் கறுத்துவிட்டது.

அவள் அழுதுகொண்டேயிருந்தாள். பிறந்தது முதல் இன்று வரை தேவைக்காகப் பார்வதியின் முகத்தைப் பார்த்த அந்த மூன்று குழந்தைகளுக்கும், அவள் ஏன் அழுகின்றாள் என்பது விளங்கவில்லை.

'அய்யாவுக்கு எதாச்சும் நடந்திருக்குமோ? மனத்திலும் உணர்வுகள், நினைவுகள் தோன்றும் என்பதை மொழியால் அறியாத அவருடைய மூத்த மகன் நினைத்தான்.

தன்னையே கேட்டுப்பார்த்தான். தம்பியையும், தங்கையையும் ஏக்கத்தோடு பார்த்தான். ஏன்? என்பது தெரியாமல் அவர்களும் அழுது கொண்டிருந்தார்கள்.

"ஏன் மணி அழுறே?" அவன் தம்பியைக் கேட்டான். "அம்மா அழுறா" அந்த மூன்று குழந்தைகளும் காரணம் தெரியாமலேயே அழுது கொண்டிருந்தார்கள்.

அலைகள் வந்து கரையிலே மோதி மடிந்தன. சிலாபத்தின் மாண்புமிக்க காட்சிகளைக் காணமுடியாமல், இந்து சமுத்திரத்தைத் தாண்டி வந்த மயக்கத்திலும், களைப்பிலும் அவை மடிந்து விட்டன.

இந்துமகா சமுத்திரத்தை நீந்தி வருபவையெல்லாம் சிலாபத்திலே மாண்டு போக வேண்டும் என்பது இயற்கையின் நியதியா? என்ன?

கதிரேசன் தன்னுடைய இடுப்பில் கட்டியிருந்த நீளமான 'தேடாவளையத்தை' அவிழ்த்துத் தோணியின் அணியத்திலே போட்டான்.

அவன் அப்பொழுதுதான் கடலுக்குக் கீழே போய் மீண்டு வந்திருந்தான்.

"கதிரேசு" இன்னொருக்கா போய்ப் பாத்திட்டு வா' ஏதாவது பிளைப்புக்குக் கிடைக்கலாம்" தோணிக்குள்ளே இருந்தவர்களுள் ஒருவர் கூறினார்.

"என்னப்பா' இப்பக் கொஞ்சம் முந்தித்தானே போயிட்டு வந்தான். பேந்தும் போகச் சொன்னா..... நான் என்ன பண்ண முடியும்?"

கதிரேசனுக்கு அலைகளோடு பொருந்திய களைப்பு, அப்படி அலுக்க வைத்தது விட்டது.

அவனை அப்படிக் கேட்டவர் முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

"இந்தா எத்தினை வருசமா இந்தத் தொழிலை மனிசன் செய்யிறான். ஏதோ சங்கம் நடத்துறாங்களாம் அதாலை எங்களுக்கு என்ன நன்மை கிட்டிப் போச்சுது"

"மனிசனாப் பிறந்து மனிசன் படுற வேதனை கொஞ்ச நஞ்சமல்லப்பா! சங்கு குளிக்கிறதெண்டு கீழே போற போதாவது மூச்சுப் பறியதா கை, தானாகவே கயிற்றைப் பிடிச்சு ஆட்டுதில்லே,"

கதிரேசனுக்கு இருந்த வெறுப்பு வார்த்தைகளில் கோலமிட்டது.

"ஏம்பா அப்பிடிச் சொல்லுறே! நீ வாழற மனிசனாச்சே! உன்கிட்டேயே துணிச்சல் இல்லாட்டி வேறை யாருகிட்டே அதை எதிர்பார்க்கமுடியும்?"

முன்பு பேசியவரே, மீண்டும் சொன்னார்; "சங்கு சங்குன்னு குளிக்கிறமே...... மழையெண்டு கிடக்கிதா! வெயிலெண்டு பாக்கிதா....... எல்லாம் எங்களுக்கெண்டு சமுத்திரத்திலே பாய்ஞ்சு தேடுறம்.... கூப்பன் எடுக்கிறதுக்கே மனிசனுக்குப் பெரும்பாடு....... சேச்சே! வீட்டை மனிசி, குழந்தை குட்டியளுக்கு வயிறுரச்சோறு போட முடியாத நமக்கு எதுக்கையா வீண்பேச்செல்லாம்"

கதிரேசன் தேடாவளையத்தை ' எழுந்து மறுபடியும் கூட்டியபடி, சங்குப்பையையும் தூக்கினான்.

கடலில் குமிழிகள் சலசலத்தன. கதிரேசன் கீழே போய்விட்டான்.

★★★

இருட்டி விட்டது! பகலெல்லாம் இந்த வையத்தைப் பார்த்து ஒளிந்து கொளுத்திவிட்டு இளைப்பாறத் தொடங்கினான் சூரியன். வெய்யிலின் கொடுமையைச் சொல்வது போல் காற்று வீசத்தொடங்கிவிட்டது.

நீரோடு சேர்ந்த குளிர்! உடல் வெடவெடக்க வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான் கதிரேசன்.

கடல் நீரில் நனைத்துவிட்ட அவனுடைய அரைத்துண்டு அப்படியோ இடுப்பில் ஒட்டியிருந்தது. சாரத்தை தலையில் சுற்றிக் கட்டியிருந்தான் கதிரேசன். அதன் மடிப்புக்களில் ஒன்றில் இரண்டு ரூபாத் தாள் சொருகப்பட்டிருந்தது.

அதை நம்பி எதிர்பார்த்திருக்கும் நான்கு உயிர்களுக்காக, தென்னைந் தோப்புக்களையும் மணற்பெருவெளியையுங் கடந்து வந்து கொண்டிருந்தான் அவன்.

“போன கிழமைக் கூப்பனிலை விட்ட அரிசி இரண்டு கொத்தையும் வாங்கினா அம்பது போயிடும்…… மிச்சம் ஒன்றரைக்கும் கறியைப் புளியை வாங்கலாம்………. பொழுது போயிடும்…….”

‘என்ரை கடைசியாள்…… கையையே பார்த்தண்டிருப்பாளே……… ஒரு பெண்குஞ்சு……. அதுக்கு ஏதும் வாங்க வேணுமே…………

கதிரேசன் சாரத்தை அவிழ்ந்து, காசை எடுத்துக் கொண்டான். ஈரத் துண்டை மீண்டும் ஒரு முறை பிழிந்துவிட்டு, தோளில் சால்வையாகப் போட்டான்.

கூப்பன் கடையை நோக்கி அவனுடைய கால்கள் போய்க் கொண்டிருந்தன.

அவனுக்குள் திக்கென்றது! கடை பூட்டப்பட்டிருந்தது. ‘என்ன அநியாயம்? ஆறு மணியும் ஆகயில்லை கடையைப் பூட்டிப் போட்டாங்கள் பாவியள்.”

நினைத்துக் கொண்டு ஏமாற்றத்தோடு திரும்பியவனுக்கு சந்தியின் ஒருமூலையில் வெளிச்சம் விழுகிறது தெரிந்தது.

‘சுப்பையாரை கடை திறந்திருக்கு………. சரி மாவையாவது வாங்கிக் கொண்டு போவம்…….!’

உள்ள பணத்திற்கு ஒரு சதம் மிச்சம் இல்லாமல், மாவும், சனியும் மகளுக்கு மிட்டாயும் வாங்கிக் கொண்டான்.

நிலைகள் வீட்டிற்குச் சென்று விட்டன. ‘பார்வதிதான் பாவம் எங்கையோ கூடுவிட்டு கூட வந்த எனக்கு அடைக்கலந்தந்து …… என்னையே முடிச்சிட்டி……. ஆனா, ஒரு சுகத்தையும் இன்னும் காணயில்லை’

‘போதாக் கஸ்டத்துக்கு மூண்டு….நாலு குழந்தையள்’

“பார்வதி!”

அவனுடைய அழைப்பைக் கேட்டு வழமையில் குழந்தை போல ஓடிவந்து அவளை வரவேற்கும் பார்வதியை அவன் காணவில்லை. என்றும் போல மகள் வந்து மிட்டாயை பெற்றுக் கொண்டாள்.

அணையப் போகும் வாழ்வில் ஒளியை மினுங்கி மினுங்கிக் காட்டிக்கொடுத்தது கைவிளக்கு.

“பார்வதி!” கதிரேசனுடைய குரலில் ஒரு வித நடுக்கம் ” என்ன…… ஏன் பேசமாட்டியா என்ன நடந்தது. சொல்லன் பிள்ளையாள் எங்கை…….

“நித்திரை” – துக்கம் வந்து அடைத்து இறுக்கியிருந்த அவளுடைய அதரங்கள் பிளந்தன.

“நீ இன்னும் தூங்கவில்லியாம்மா!” மகனைப் பார்த்துக் கேட்டபடியே அவனின் நாடியைப் பற்றினான் கதிரேசன்.

புலன்களில் மலர்ச்சி!

கதிரேசன் தோளில் இருந்த ஈரத்துணியை வெளியே கட்டியிருந்த கம்பியிற் காயப்போட்டான். பார்வதி கணவன் கொடுத்தவற்றை வாங்கிக் கொண்டு குசினிக்கு கிட்ட சென்று விட்டாள். அடுப்புப் புகையத் தொடங்கியது! கதிரேசன் அறிந்து கொண்டான். அவளுடைய நெஞ்சம் கருகியது; அதை அவனால் உணரமுடியவில்லை.

மகளைத் தூக்கி நெஞ்சில் இருத்தியபடி முற்றத்திற் கிடந்த தென்னோலைப் பாயில் சாய்ந்தான்.

மழலை இன்பம் அவனுக்கு பொழுதைக் கழித்தது. சமையலும் முடிந்துவிட்டது.

வயிறுகள் நிரம்பின. ஒரு சாண் வயிற்றை நிரப்ப எத்தனையோ மைல்கள் கடந்து வந்தான். அவருக்குத் தப்பி, இவரிடம் பிழைத்து அவன் வந்து கண்டதென்ன?

அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதைத்தான் கண்டான். இந்த உண்மையை ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன் அவன் அறிந்து விட்டபோதிலும், இதமான இல்லறத்தை விட்டு அவனால் பிரிய முடியவில்லை.

‘எத்தினை பேர் கலியாணம் முடிச்சுப் பிள்ளையளும் பெத்துப் போட்டு, விட்டுட்டு ஓடியிட்டாங்க …. பார்வதியையும் என்றை குஞ்சுகளையும் தவிக்க விட்டுப் போட்டு நானும் போக மடையனே!’

கஷ்டங்களின் ஊடே மனித நிலையை அவன் மறந்ததுண்டு. பின் அவனுடைய உள்ளத்தில் ஊறிய

அன்பு வெள்ளம் வந்து கெட்ட எண்ணங்களைக் களைந்து விடும்.

கதிரேசன் மனிதனாக மாறிய வேளைதான் அடுத்தவர்கள் மிருகமானார்கள்.

"பார்வதி! ஏன் ஒரு மாதிரி இருக்கிறே" ஏப்பம் விட்டபடி கேட்டான் கதிரேசன்.

அவள் விம்மத் தொடங்கினாள். "நம்மளை அனுப்பப் போறாங்களாம்!"

"எங்கை?" – திகைப்பு.

"இந்தியாவுக்கு..." – சுருக்கம்.

"உன்னையுமா?" – சிரிப்பு.

"உங்க ளை..." – ஏக்கம்.

கதிரேசனுக்கு தலை சுழன்றது. "நடராசாவின்ரை வேலையா இது?" உணர்ச்சியற்ற மரக்கட்டையாய் நின்ற கதி ரேசனின் வாயிலிருந்து உதிர்கின்றன இவை.

"அவன் நல்லாயிருப்பானா?"

"காட்டிக் கொடுக்கின்ற கயவர்கள் எங்க மத்தியில் தான் அதிகம்...பெரியவை சொல்லுவினம்...சரித்ரத்திலேயும் இது தான் அதிகம் எண்டு"

"பார்வதி...நான் ஒண்டு சொல்லுறன் நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை! முனீஸ்வரன் நம்மளைக் கைவிடமாட்டான்... நம்மடை நாலு பிஞ்சுகளையும் காயவிடமாட்டான். நம்பு..... என்னை நம்பாட்டாலும் அவனை நம்பு!"

"கடவுளே!...ம்"

இருவருடைய நெஞ்சங்களும் பொருமின; அவற்றிலிருந்து புறப்பட்ட மூச்சுக்கள் ஒன்றுடன் மற்றொன்று காற்றோடு கலந்தன.

ஒரு வருடமாகி விட்டது!

கதிரேசன் சங்கு குளிப்பதை நிறுத்தவில்லை. முனீஸ்வரன் மீது பழியைப் போட்ட பின்பும் அவனுக்கு என்ன வந்துவிடபோகிறது?

ஆனால்...ஒரு நாள் திடீரென்று பொலீசார் அவனுடைய வீட்டைச் சோதனை போட்டார்கள். அவன் திருடவில்லை. 'கள்ளத்தோணி' அந்தப் பட்டம் பெற்றுவிட்டான். அது தான் அவன் செய்த குற்றமா? சக வர்க்கமும் சதா கேட்கும் பெயர் இது தானே?

கதிரேசனால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. சுங்க இலாகாவினரைப் போல அவனும் படித்திருக்கிறானா குறுக்குக் கேள்விகளை அள்ளி வீசி, வழி தெரியாமல் அனுப்பிவைப்பதற்கு.

நெஞ்சிலே வலி பொங்க, மிரள, மிரள விழித்தான்.

"ஓய்...உன்ரை பாஸ்போஸ்ட் எங்ஹே?" ஒரு பொலிஸ் வீரன் தமிழ் பேசினான்.

"அது எனக்கெதுக்கு வேணுமாம்?"

"யாரை ஓய் கேக்கிறே? கூப்பனும் இல்லை?"

இந்த வீரன் விழுந்து கிடந்த தென்னங் குற்றியில் தனது பூட்ஸ்' காலால் உதைத்தான். கதிரேசனுக்கு விழுந்திருக்க வேண்டியதை அந்தக் குற்றி தானே வாங்கிக் கொண்டு, தியாகியாகி விட்டது.

"அதுவும்...கடையிலே..."

கொண்டு காவும் பஞ்சியைப் பார்த்து கூப்பன்கள் அத்தனையையும் கடையிலேயே வைத்திருந்தான் கதிரேசன்.

ஞாயிற்றுக்கிழமை கடையைத் திறக்கவும் மாட்டார்கள். கதிரேசனால் நிலைகொள்ள முடியவில்லை.

பார்வதி மூலையில் நின்று அழுதுகொண்டிருந்தாள். அவள் விசும்பல் எங்கும் பரவியது.

'நீ எங்களுக்கு டிமிக்கி குடுக்கிறே? ஏறுடா வான்லே"

அதே வீரன் கதிரேசனைப் பின்னால் பற்றித் தள்ளிவிட்டான். நிலை தடுமாறி நிலத்தில் வீழ்ந்தான் அவன்.

"ஐ...யோ. என்ரை ராசா..." என்று அலறியபடி அவன் மீது வீழ்ந்தாள் பார்வதி. குழந்தைகள் மூன்றும் கண்களைப் பிசைந்தன.

மூத்தவன் "ஐ...யா!..ஆஆஅ..." என்று அழத்தொடங்கினான். அவனுக்கு அழத்தெரியும். மற்றக் குழந்தைகள்...

"பா...தி! என்ரை செல்வங்கள்!...ஐ...யோ!.... முனீஸ்வரா?..."

தென்னந்தோப்பினூடே பறந்து கொண்டிருந்த போலிஸ் வண்டியிலிருந்து இந்த வார்த்தைகள் மிதந்து, தேய்ந்து, அழிந்து கொண்டிருந்தன.

– நன்றி:அங்கையன் கதைகள் (சிறுகதைத் தொகுதி),

சிறுகதை இணையம்

இரா. மதிராஜ்

# ஒரு மரத்தை வளர்ப்பதால்....

ஒரு கோடை முடிந்து பூத்துக் காய்க்கும் போது
இந்த வேப்ப முத்துக்களை பொறுக்கி அந்த
மூதாட்டியால் தன் வாழ்க்கையை கடத்த முடியும்
வடை சுட நேரிடுகையில் அந்த பூவரசு இலைகள்
உள்ளங்கையில் உபயோகப்படுத்தப்படலாம்
வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்க உயிரினத்துக்கு
ஒரு உறைவிடமாய் அமையலாம்
அஃறிணைளுக்கு பசுந்தாள் தீவனங்கள்
கிடைக்கலாம்,
இலைகளை இழந்த இதன் துரும்புகள்
கூடப் புறாக்கள் கூடு கட்ட உதவலாம்
முட்செடியாய் இருந்தால் கூட
காய்ந்த பின்
கால் வயிறு கஞ்சிக் காய்க்க விறகாகலாம்
ஓரிரு மரங்கள் அருகே வளர்த்தால்
பூமி தன் பழைய படிமமானக் காட்டை
நினைவு கூறலாம்,
வேர்களைப் பற்றி ஒன்றும் யாரும்
பார்க்க வேண்டியதில்லை,
அவைகள்
ஒன்றாய் தான் இணைந்திருக்கும்
எப்பவுமே....



ச. இராஜ்குமார்

# வெறுமையாய் கிடக்கிறது தெருக்கள்

ஒன்றாய் கூடி ஓடியாடி அம்மாவின் தொள்களில்
பல கதைகள் கற்றோம்.
சொந்தங்கள் கூடி புன்னகைத்த நாட்கள் எங்கே
போனது..
தெருவெங்கும் கூட்டமாக விளையாடிய சிறுவர்கள்
எங்கே போனது.
வெறுமையாய் கிடக்கிறது எனது தெருக்கள்.
தெருவிளக்கில் படித்த நியாபகங்கள் நெஞ்சில்
இன்னும் பாரமாய் கண்களில் ஈரமாய்.
பிழைப்புக்காக ஊரைவிட்டு சென்ற சொந்தங்கள்
எத்தனை எத்தனை நம் மண்ணில்.
பள்ளிகூட பாடம் முடிக்காமல் அம்மாவிடம்
அடிவாங்கிய நினைவுகள் மறக்குமா.?





# உசுரு....

நௌஷாத் கான் லி, அபுதாபி

**மா**ப்பிள்ளை தணிகாசலம் இத்தனை பேரு பால் ஊத்தியும் அந்த உசுரு போக மாட்டேங்குதுன்னா,உன் அப்பன் மனசுல ஏதோ ஆசை கிடக்குதுய்யா??

இன்னுமாய்யா நான் சொல்லுறது உனக்கு புரியல...??

உன் அப்பன் ஆத்மா சாந்தியோட இந்த பூமியை விட்டு போகணும்னா வீம்பு பார்க்காம பல வருசத்துக்கு முன்னாடி காதலனுடன் ஓடிப்போன உன் தங்கச்சிய வீட்டுக்கு கூப்பிட்டு அவ கையால பால் ஊத்த சொல்லுய்யா, அப்ப அந்த உசுரு அவஸ்தை இல்லாம சீக்கிரம் போய்டும்..

மகளை பார்க்கணும்னு தான் அந்த உசுரு.... இத்தனை அவஸ்தையோட பிடிச்சுக்கிட்டு கிடக்கு..

யோவ் மாமா, என் அப்பன் வேணா அந்த ஓடுகாலி சிறுக்கிய பார்க்கணும்னு நினைக்கலாம் ஆனா அவ மேல எனக்கிருக்குற கோபம் இன்னும் அடங்கலை எவ்வளவு பாசமா வளர்த்தேன் இந்த அண்ணன்,அப்பன் வேணாம்னு தானே கண்ட தெருப்பொறுக்கி நாயோட ஓடி போனா..எவ்வளவு சீரும் சிறப்புமா வளர்த்தோம்..பிடிச்சதை எல்லாம் அளவுக்கு மீறி வாங்கி கொடுத்தோம்,தலை மேல தூக்கி வச்சுதானய்யா ஆடினோம்..அந்த சிறுக்கிக்கு என்ன குறை வச்சோம்??

அவ பொறுமையா இருந்திருந்தா சீமையிலே நல்ல படிச்ச,பணக்கார மாப்பிள்ளையா பார்த்து கட்டி வச்சிருப்போம்ய்யா...

விடு மாப்பிள்ளை,அவ மனசுக்கு அந்த பயலே பிடிச்சு போச்சு,நீங்க பணம்,காசு,கவுரவம் பார்த்து அவ காதல்ல பிரிச்சிடுவீங்கன்னு பிடிச்சவனோட ஓடி போய்ட்டா வருஷம் இருபது ஓடி போச்சு,ஏழை பயல கட்டிக்கிட்டாலும் இந்த இருபது வருசத்துல உங்க முன்னாடி கஷ்டம்னு வந்து இருப்பாளா?? அந்த பயலும் உன் தங்கச்சிய மனசார காதலிச்சதால தான் சொத்து கித்துன்னு கேட்டு உன் தங்கச்சிய கொடுமை பண்ணலை,அவன் கஷ்டப்பட்டாலும் உன் தங்கச்சிய மகாராணி போல தான்யா வச்சு இருக்கான்.. ஒண்ணு தெரியுமா உன் தங்கச்சிக்கே கல்யாண வயசுல ஒரு பொண்ணு இருக்காய்யா...வருஷம் பல போச்சு,புழு பூத்து அழுகி மக்கி சாவ போற மனுஷப் பிறவிய்யா,இருக்குற வரைக்கும் எல்லார்கிட்டயும் அன்போடு,ஆதரவா இருப்போம்ய்யா..நாம்ம செத்தா கூட சுடுகாடு வரை வர்றது சொந்தம்தான்ய்யா,சொந்தம் நம்மள சந்தோஷமும் படுத்தும்,சங்கடமும் படுத்தும்.. திங்குற சோறு செரிக்கிறதை பார்த்தாலே வெறுத்து போற மனுஷப்பிறவியை வரமா பெற்றவங்க,நம்ம உடலோட்டம் நின்னு போனா எல்லாமும் போச்சு அப்படிப்பட்ட நிலையில்லாத வாழ்க்கையை பரிசா வாங்கி வச்சுக்கிட்டு என்னத்துக்குய்யா வீம்போடும்,வீராப்போடும் அலையணும்??

இருக்கிற வரைக்கும் நல்ல உறவுகளோடு இணைந்து வாழ்வோம்..ஒரு வேலை உன் அப்பன் தீரா ஆசையோடு இறந்து போனா அந்த பாவமும்,சாபமும் நம்ம வம்சத்தையே அழிச்சிடும்ய்யா..

சரிங்க மாமா,அவளுக்கு தகவல் சொல்லி அப்பனை பார்க்க வர சொல்லுங்க...

சேதுராமன் மாமா சீதாவுக்கு தகவல் சொல்லியதோடு மட்டுமின்றி கார் வைத்து அவளை தன்னுடைய தாய் வீட்டிற்கு அழைத்து வந்தார்

யய்யா.....எப்படி....ராஜா மாதிரி இருந்த மனுஷன் இப்படி இந்த நிலைமையிலா பார்ப்பேன்??

நான் பாவி,நான் பாவியென அடித்து கொண்டாள்..

அப்போது படுத்த படுக்கையாய் படுத்திருந்த சண்முகமுதலியார் தன்னை தானே அடித்து கொண்டிருந்த தன் மகளின் கைகளை பிடித்து தடுத்தார்..

ஒரு அசைவும் இல்லாத மனுஷன் திடீர்னு மகள் கையை பிடிக்கவும் சுற்றியிருந்த கூட்டம் பிரமிப்பாய் பார்த்தது..

யய்யா என்ன மன்னிச்சிடுய்யா,உன்னோட வலி,வேதனை ஒரு பொண்ணுக்கு அம்மாவானதும் உணர்ந்துட்டேன்ய்யா,என்னை நினைச்சு நீங்க எவ்வளவு வேதனை பட்டு இருப்பீங்க,என்னை எப்படியெல்லாம் வளர்த்தீங்க,எல்லாத்தையும் மறந்திட்டு காதல் கிறக்கத்துல,வயசு திமிர்ல அப்ப போனது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப உணர்ந்திட்டேன்யா...இந்த பாவிய மன்னிப்பீங்களா என்று அழுதாள்...


அவள் அழுவதை பார்த்து இதுவரை வீம்பாய் கத்தி திரிந்த தணிகாசத்தின் கண்களும் அவனையே அறியாமல் கலங்கி இருந்தது...உயிர் போகும் தருவாயில் கூட தன் மகளின் அழுத கண்களை துடைத்து விட்டு தரையில் சாய்ந்தது சண்முகமுதலியாரின் கைகள்..

இளையவன் சிவா, மடத்துக்குளம்

# வண்ணத்துப்பூச்சி

பூவின் இதழ்களுக்குள் வானத்தை அடையாளமிடும். வானவில்லோ, வண்ணங்களின் கலவையில் வானத்தை அளந்து காட்டும். கிளையில் ஊசலாடும் காற்று மூச்சென நுழையும் பொழுதில் வானத்தை வடிக்கும்.

முதுகெல்லாம் சுமையென
பள்ளிக்கு விரையும் மழலையோ இறுதி
மணியோசை எதிரொலியில் வானத்தை அடக்கிக்
காட்டும்.
அருள்தரும் ஆண்டவனின்
ஆலயத்தில் நுழையாமல்
உள் ஒடுங்கிய குரலுக்குள் எல்லோரையும்
சாமியாக்கும்
யாசகன் சில்லறைகளில்
வானத்தை வரைவான்.
வேலையற்றவனின்
நகர்ந்து போக முடியா பகலுக்குள் ஒளிந்து
கொண்டு வானத்தைக் கேட்கையில்
இருளின் உச்ச நடனத்தை
விரித்துக் காட்டுவான்.
மதுவின் பிடிக்குள் எதிர்காலத்தை மறந்து விழுந்து
கிடப்பவனோ தொண்டைக் குழியில் இறங்கும்
திரவத்தில் மின்னும் நட்சத்திரங்களை எண்ணிக்
காட்டுவான்.
நிலையாமை நிலை கொண்ட
நகருதலின் உலகத்தில்
பெருகும் ஆசைகளின் கரங்களில்
வழியும் குருதியில் நிலை கொண்ட அவரவர்
கனவுகளை
அடைகாத்திடல்
விரியும் வானத்தின் வேலையல்ல.



பெ. விஜயலட்சுமி, காஞ்சிபுரம்

# துளிப்பாக்கள்

ஓரங்குலம் நீண்டுள்ளது
நாட்டுப்புறப் பாடலைக் கேட்டு
வளரும் நாற்று

௷

சுட்டெரிக்கும் வெயில்
வற்றிடவில்லை
வறுமையின் கண்ணீர்

௷

வீடெங்கும்
புது வாசம்
மழலையின் வரவு

௷

மேகத்திற்கு அப்பாலுள்ள அமைதியை
கொண்டு வந்துவிடுகிறது
இசை

௷

ஒற்றை இறகு
புரட்சி செய்கிறது
கூண்டுக்குள் பறவைகள்

௷

மரங்களை வெட்டி விதவிதமாய் கதவுகள்
செய்கிறான்
வீடில்லா தச்சன்

௷

தியானிக்கும் புத்தரின் மேல்
அர்ச்சனை செய்கிறன
கொட்டும் மலர்கள்

௷

வற்றும் குளத்தில்
பெருந்திரள் கொண்டாட்டம்
மீன் பிடித்திருவிழா

௷

சருகுகளின் இசை மழையில்
முழுமையாய் நனைந்தது
பூங்கா.

௷

கரையேறிய பின்பும்
மனதில் அலை மோதியது
ஓடம்

௷

காதலனுக்காக காத்திருக்கிறாள்
அவள் மீது விழுந்தன
பார்வைகள் அனைத்தும்

௷

அரை தூக்கத்தில் கதிரவன்
வெண்பாக்களை வாசிக்கிறது
குளிர்காலம்

௷

காற்று தாலாட்ட
உறங்குகிறது வானம்
கிணற்றுக்குள்

௷


சம நிலைக்கு வருவதற்குள்
காலம் கடந்துவிடுகின்றன
நீதியின் தராசு

௷

பூக்கள் வேண்டி
இலைகளோடு தவம் புரிகிறது
வண்ணத்துப்பூச்சி

பா.சிவகுமார்

# வண்ணத்துப் பூச்சி விளைவுகள்



தேர்வறையில் வினாத்தாளை
வாங்கும்வரையிலும்
தேர்வு முடிவுகளன்று
மதிப்பெண்களைக் காண
கண்கள் மேயும் போதும்
வயிற்றில் படபடக்கின்றன
ஆயிரம் பட்டாம்பூச்சிகள்


வஞ்சியவள் கடக்கும்போது
ஓரவிழியால் சிறுபுன்னகை
சிந்திவிட்டு செல்கையில்
தாறுமாறாக எகிறும்
இதயத்துடிப்பில்
பட்டுத் தெறிக்கின்றன
பல நூறு பட்டாம்பூச்சிகள்

இமைக்காமல் விழிவிரியப்
பார்த்துக் கொண்டிருப்பேன்
அவள் இமைகள்
படபடத்து பேசும்போது
பறந்து செல்லும்
வால்நட்சத்திர
வண்ணத்துப்பூச்சிகளை

அவளை நினைத்து
காலை பத்து மணிவரை
கட்டிலில்
புரண்டு கொண்டிருக்கையில்
அறையெங்கும் வியாபித்திருக்கும்
அம்மாவின்
வசவு வண்ணத்துப்பூச்சிகளில் சில
ஒரு செவியில் நுழைந்து
மனதில் உட்காராமல்
மறுசெவியில் வெளியேறும்

ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு
எங்கோ ஓரிடத்தில் புயலை
ஏற்படுத்துவத்துவதெப்படியென
கேயாஸ் தியரியுடன்
அல்லாடுகின்றனர்
ஆராய்ச்சியாளர்கள்

பேசுபொருளாக இருந்தாலும்
இருப்பிடம் இல்லாது
தோட்டத்தைத் தேடி
சுற்றியலைகின்றன
வண்ணத்தை இழந்து கொண்டிருக்கும்
வண்ணத்துப் பூச்சிகள்!



# ஆர்வம்

**கே.எஸ்.சுதாகர்**

ஞாயிற்றுக்கிழமை. காலை பத்துமணி. கோபாலனும் ஈஸ்வரனும் விரைவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

நேற்று பாடசாலையில் சுந்தரம் ஆசிரியர் தமிழ் படிப்பிக்கும்போது, தன்னிடம் நிறைய இலக்கியப்புத்தகங்கள் இருப்பதாகவும், விருப்பமானவர்கள் தன்னுடைய வீட்டிற்கு வந்தால் தர முடியும் என்றும் சொல்லியிருந்தார்.

கோவில்மணி ஓசை கேட்கிறது. கோவிலின் கிழக்குவீதிக்குச் சற்று முன்பாக சுந்தரம் ஆசிரியரின் வீடு இருந்தது. வீட்டிற்கு முன்புறமாக குரோட்டன்ஸ், செவ்வரத்தைச் செடிகளெல்லாம் செழித்து வளர்ந்திருந்தன. பெரியவீடு. வாசலில் 'பெல்' இருந்தது. பெல்லை மெதுவாக அழுத்தினான் கோபாலன். உள்ளேயிருந்து மான்குட்டி போல ஒரு பெண் துள்ளி வந்தாள்.

“அம்மா! ஆரோ வந்து நிக்கினம்.”

சுந்தரம் ஆசிரியர் உள்ளேயிருந்து எட்டிப் பார்த்து, “தம்பி மாத்திரம் உள்ளே வாரும்” என்று ஈஸ்வரனைச் சுட்டிக் கூப்பிட்டார்.

'தம்பி மாத்திரம் உள்ளே வாரும்' – தம்பி ஈஸ்வரன் உள்ளே போனான்.

சற்றுநேரத்தில் ஈஸ்வரன் வெறுங்கையுடன் திரும்பி வந்தான். கதவு உட்புறமாக அடித்துச் சாத்தப்பட்டது.

“சேர் நாளைக்கு ஸ்கூலிலை கொண்டுவந்து தாறாராம்.” என்றான் ஈஸ்வரன்.

அடுத்த நாள் அவர்களுக்குத் தமிழ்பாடம் இருக்கவில்லை. அதனால் அன்று ஆசிரியர் புத்தகங்களை எடுத்து வந்திருக்கமாட்டார் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் 'இன்ரேவலின்' போது ஒரு மாணவன் வந்து, சுந்தரம் மாஸ்டர் கூட்டிவரச்சொன்னதாக ஈஸ்வரனைக் கூட்டிக்கொண்டு போனான்.

ஒரு பிளாஸ்ரிக் பையினுள் கொஞ்சப் புத்தகங்களுடன் ஈஸ்வரன் திரும்பி வந்தான். வகுப்புத் தொடங்கியிருந்தமையால் கோபாலனை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு இருக்கையில் அமர்ந்து கொண்டான் ஈஸ்வரன். கோபாலனுக்கு அது

ஏமாற்றமாக இருந்தது.

பாடசாலை முடிந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

"சுந்தரம் மாஸ்டர் உனக்குப் புத்தகங்கள் தரவில்லையடா கோபாலா" என்றான் தயங்கியபடி ஈஸ்வரன்.

"ஏன் தரவில்லை?"

"நீ தான் வகுப்பிலை முதலாம்பிள்ளையாய் வாறனி. உனக்கும் கொஞ்சப் புத்தகங்கள் தரச்சொல்லி மாஸ்டரைக் கேட்டனான். அதுக்கு மாஸ்டர்,

'கோபாலன் டச்சுறோட்டுக்கு எந்தப்பக்கம் இருக்கிறான்?' எண்டு கேட்டவர்."

"றோட்டுக்கு எந்தப்பக்கம் இருந்தால் தானென்ன? றோட்டுக்கும் படிக்கிறதுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ?" சிந்தனையை ஓடவிட்டான் கோபாலன்.

"அதுதாண்டா எனக்கும் விளங்கேல்லை" என்றபடியே பிளாஸ்ரிக்பையைத் திறந்து இலக்கியப் புத்தகங்களைக் காட்டினான் ஈஸ்வரன்.

கொஞ்சத்தூரம் இரண்டுபேரும் பேசாமல் நடந்தார்கள்.

"டேய்! எனக்கு இந்தப்புத்தகங்களை வாசிக்க விருப்பமில்லையடா. நீ கேட்டனி எண்டபடியாலைதான் நேற்று உன்னோடை மாஸ்டரின்ரை வீட்டுக்கு வந்தனான். இந்தா நீயே இதுகளை வைச்சிரு. நீ கொண்டு போய் வாசி" திடீரென்று புத்தகப்பையை கோபாலனிடன் நீட்டினான் ஈஸ்வரன்.

கோபாலனுக்கு ஒருபுறம் திகைப்பும் மறுபுறம் மகிழ்ச்சியும்.

"ஆனா ஒண்டு. உதுகளை வாசிச்சுப்போட்டு என்ன உதுகளிலை எழுதிக் கிடக்கு எண்டு எனக்கும் கொஞ்சம் சொல்லு. பிறகு அந்த மனிசனோடை காலம் தள்ளேலாது. குறுக்குக் கேள்வியள் எல்லாம் கேக்கும்" என்றான் ஈஸ்வரன்.

கோபாலனின் வீடு வந்ததும் இருவரும் பிரிந்து கொண்டார்கள்.

வீட்டிற்கு வந்ததும் அம்மாவிற்கு புத்தகங்களைக் காட்டி மகிழ்ந்தான் கோபாலன்.

"கோபாலா... அப்பா இன்னும் தோட்டத்தாலை வரேல்லை. நேற்று வீசின காத்துக்கு வாழை மரங்களெல்லாம் முறிஞ்சு போட்டுதெண்டு கவலைப்பட்டவர். தோட்டத்துக்குப் போய் கொஞ்சம் உதவி செய்திட்டு வா."

மறுப்பின்றி வந்ததும் வராததுமாக உடுப்பை மாற்றிக்கொண்டு, தோட்டத்துக்குப் புறப்பட்டான் கோபாலன். தோட்டவேலை முடிந்து, பசு மாட்டினில் பால் கறந்து, இரவு உணவையும் முடித்துக்கொண்டு படிப்பதற்கு ஆரம்பமானபோது நேரம் எட்டு மணியாகிவிட்டது. பள்ளிக்கூட வேலைகளை முடித்துவிட்டு, சுந்தரம் மாஸ்டரிடம் பெற்றுக்கொண்ட புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்கத் தொடங்கினான். 'மாருதப்புரவீக வல்லி', 'பண்டாரவன்னியன்', 'பண்டிதமணி – வரலாறும் தமிழ்ப்பணியும்', 'ராமாயணம் – ராஜாஜி', 'ஏகலைவன்' எனப் பல புத்தகங்கள். எதை முதலில் வாசிப்பது? ஏகலைவன்... ஓமோம்... அதைத்தான் முதலில் படிக்க வேண்டும். அதுதான் சின்னப்புத்தகம். பக்கங்களை விரித்தான் கோபாலன்.

'கோபாலன் டச்சுறோட்டுக்கு எந்தப்பக்கம் இருக்கிறான்?'

சுந்தரம் மாஸ்டரின் கேள்வி விஸ்வரூபம் கொண்டது. அந்தக் கேள்வி அவன் கண்களில் நீர்த்தாரையாகியது. எங்குமே மங்கலாக, புத்தகத்தில் ஒரு எழுத்துக்களையும் அவனால் பார்க்க முடியவில்லை.

"கோபாலா... விளக்கைக் குறைச்சுப்போட்டுப் படு. படிச்சது காணும்." அம்மா புறுபுறுத்தார்.

'ஈஸ்வரனின் அப்பா நீதிமன்றத்தில் உயர் பதவியில் இருக்கின்றார். என்னுடைய அப்பா தோட்டம் செய்கின்றார். நாங்கள் ஏழையள்.... ஏழையள் படிக்கக்கூடாது எண்டுதானே, சுந்தரம் மாஸ்டர் எனக்குப் புத்தகங்கள் தரேல்லை..." கோபாலனின் பிஞ்சு மனம் அப்படி எண்ணிக்கொண்டது. அதற்கும் அப்பால் அவனுக்கு எதுவும் புரியவில்லை. கவலை வர அழுகை அழுகையாக வந்தது. அவனின் அழுகை இருட்டினில் எவருக்கும் தெரியவில்லை. நேரமாக உறங்கிப் போய்விட்டான்.


"கோபாலா.... உதுகளை வாசிச்சுப்போட்டு என்ன உதுகளிலை எழுதிக் கிடக்கு எண்டு எனக்கும் கொஞ்சம் சொல்லு. பிறகு அந்த மனிசனோடை காலம் தள்ளேலாது" ஈஸ்வரனின் குரல் அவனைத் தட்டி எழுப்புகின்றது. திடீரென்று விழித்துக் கொண்டான். விளக்கைத் தூண்டி விட்டுக்கொண்டான்.

'ஏகலைவன் மகாபாரதக் கதாபாத்திரங்களுள் ஒருவன், பிறப்பினால் ஒரு வேடன்.... ஓ...! ஏகலைவனும் றோட்டுக்கு அந்தப் பக்கத்தாலை இருந்திருப்பானோ?' கோபாலனின் சிந்தனை விரிகின்றது. ஏகலைவன் அருச்சுனனைவிட வில் வித்தையில் சிறந்தவனாக வரக் காரணம் என்ன?

ஆர்வம். ஆர்வம் ஒன்றுதான் நம்மை விழிப்படையச் செய்யும் என உறுதி கொள்கின்றான் கோபாலன்.


காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

# இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு



பதினாறாம் நூற்றாண்டின் காலந் தொட்டு
பிறமதத்தார் சிலகாலம் படைப்பின் தேக்கக்
கதிகொண்டார் தொய்வுதனை நிமிர்த்த முஸ்லிம்
கவிப்புலமைச் சான்றோர்கள் தோள்தந் தார்கள்
மதியுடையோர் ஒப்புவரே காழ்ப்பைக் கொன்றால்
முஸ்லிம்கள் காலமது வென்ப தாக
அதிகமவை இஸ்லாத்தின் வழியுண் டான
ஆக்கப்பெரு இலக்கியங்கள் அறியா ருண்டோ
தனிமனிதப் புகழ்பாடும் இலக்கி யங்கள்
சிற்றின்பச் சுவைகூட்டும் விழல்கள் தோன்றி
மனுக்குலத்தை அழிவின்பால் ஈர்க்கக் கண்டு
மாற்றுவழி கண்டார்கள் புலவோர் அந்நாள்
நனியேற்கக் காப்பியங்கள் ஞான நூற்கள்
நற்றமிழ்ச்சிற் றிலக்கியங்கள் படைத்த ளித்தார்
கனஞ்சேர்த்த தவையனைத்தும் தமிழுக் கான
கருவூல மாம்முஸ்லிம் பேர்பங் காகும்

பற்பலவாய் இலக்கியங்கள் செய்தார் எம்மோர்
பழந்தமிழின் மரபுகளைப் போற்றி மேலும்
நற்றமிழின் கோன்மைக்கு முஸ்லி மல்லார்
நல்கியதற் கீடாக அதற்கும் மேலாய்
முற்றுந்தமிழ் இலக்கியத்தின் வடிவம் சேரா
“முனாஜாத்து” “கிஸ்ஸா” “மசாலா” “நாமா”
அற்புமே அவையோடு “படைப்போர்” என்ற
அத்தனையும் நம்மவர்பால் கிடைத்த தாகும்.
“அம்மானை” “அந்தாதி” “பிள்ளைத் தமிழ்”
“ஆற்றுப்படை” “புராணங்கள்” “பாவை”
“கோவை”




செம்மையுற “மாலை”யொடு “கலம்ப கம்”மும்
செய்தார்கள் முஸ்லிம்கள் தமிழுக் கீந்தார்
தம்மொழியின் மரபொடியா வாறு மாற்றுச்
சொந்தமெனக் கொண்டவழி பற்றி மார்க்க
உண்மைகளை புனிதர்தம் வாழ்வு தம்மை
ஒன்றுறவே செய்தார்கள் ஒப்பச் சாலும்.

கதைசொல்லும் பாங்குடைய “கிஸ்ஸா” “நாமா”
கூறுவதோ வரலாற்றைச் சரித்தி ரத்தை
பொதுவாக முஸ்லிம்கள் செய்த யுத்தம்
பற்பலவும் “படைப்போருள்” அடங்க லாகும்
புதிர்விடுத்தல் வினாவிடைகள் “மசாலா” வாகும்
படைத்தவனின் அருள்வேட்டல் “முனாஜாத்”
ஆகும்
புதிதுவிவை தமிழுக்குப் பார சீகப்
பாலைவன மொழியறபு வழித்தோன் றல்கள்
எண்ணிக்கைப் பெருக்கத்தில் மட்டு மன்றி
ஏற்றகரு உருவினிலும் உயர்ந்த தாகும்
மனிதவாழ்வு சிறப்பதற்கு இஸ்லாம் கூறும்
முறையான வழிமுறையை எடுத்துக் கூறும்
தொனிப்பொருளே விஞ்சிநிற்கும் இலக்கி யங்கள்
தாமவைகள் மார்க்கஞானம் மிகுந்த பேர்தம்
புனைவற்ற சத்தியத்தின் வெளிப்பா டாகும்
பண்ணவன்தம் அருட்கொடையின் பொருட்டின்
பேறே.

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# மூர்ச்சை அடைந்த புல்லாங்குழல்...




விறகுச்சுள்ளி நான்
சுடர் நீ எழுதுகிறாய்
என் மீதொரு நேசக்
கவிதை
அற்பத்தனங்களில்
ஆனந்தக் கூத்தாடி
அற்புதங்கள் பல மீட்டி
என்னை
முயங்கித் தள்ளாடச்
செய்கிறாய்
ஆன்மாவுக்குள் புகுந்து
என் துடிப்புகளையாராயும்
உன் வசீகர வித்தை
நான் இன்னும் அறிகிலேன்
நிர்மல வானில் நீ
மின்னல் கொடியாய் ஏறி
சஞ்சரிக்கும் பொழுது
மேகங்களின்றியே
மழைக் கொண்டாட்டம்
எனக்குள்
காதலின் பெருமரமொன்று
உறங்கும் விதையின்
காட்சிப் பிழை போல
உன் விழித்தரிசனத்திற்கான
தவத்துயிலில் உறைகிறேன்
மறைபொருளின் மாய
நந்தவனத்தில் மானாகிறாய்
தூய்மையாய் வழிகின்ற
தேனாகவும் மதுரவாசனை
எனக்குள்
கிறங்கி மடியும் என் காதல்
பூராகவும் நீதான்
வாழ்கிறாய்
யார் சொன்னது
சப்தங்களுக்குத்தான் செவியடையும்
அலைவரிசை உண்டென?
சப்தங்களற்ற தனிமையும்
மௌனமும் முடிவிலியற்ற
சமிக்ஞைகளோடு தீண்டியே
தீரும்
எழுதிய கவிதைகளை
முற்றாக வாசித்து
முக்தி தருவாயா?
தீர்ந்து விடாத விடாயில்
பாலைவன மணலில்
செய்த சிற்பங்கள் அவை
மொழியென்பது ஒரு வழி
மொழியற்ற பேரன்பின் வார்த்தைகள்
பல வழிகளாகிக் கிளைத்துப்
பெருகுவதை உணரமாட்டாயா?
மூர்ச்சை அடைந்த
புல்லாங்குழல் நான்,
உன் இன்னிசையின் இதழ்கள்
ஊதுவது எப்போது?
வெடித்துப் பிளந்த
நிலம் நான், உன்னை
உறிஞ்சிக்கொண்டு
நெகிழ்வதெப்போது?

# பாரதி விஜயம் (கடற்கரய் மத்தவிலாச அங்கதம்)

ஆசிரியர் கடற்கரய் மத்தவிலாச அங்கதம் அவர்கள் தொகுத்த நூலான பாரதி விஜயம், மகாகவி பாரதியார் வாழ்ந்த பொழுது அவருடன் கூடி வாழ்ந்தவர்களிடம் அவர் மறைந்த பிறகு நினைவில் வாழும் பாரதியைப் பற்றிய தகவல்களைப் பெற்று கடந்த நூறு ஆண்டுகளாக இதுவரை பத்திரிக்கைகளில் வெளிவந்திருந்த கட்டுரைகளை திரட்டித் தொகுத்து வெளியிட்ட நூல் இது. மிகப்பழமையான பயணக் கட்டுரைகளையெல்லாம் தொகுத்து அளித்த ஏ.கே. செட்டியார் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு இந்த நூலை ஆசிரியர் தொகுத்திருக்கிறார்.

தன் பணி நிமித்தமாக சென்றிருந்த இடத்தில் தற்செயலாகக் காண நேர்ந்த கோவில் அறங்காவலர் அலுவலகத்தின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படமான எட்டயபுர அரண்மனை வாயிலில் பூண்டிருந்த திருவிழாக் கோலம் அவரை அவ்வரண்மனைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. பராமரிப்பின்றி காணப்பட்ட அரண்மனைக் கட்டிடத்தின் வெடிப்புகளுக்கு இடுக்கில் ஆலமர வேர்களும், தன் மேல்பூச்சினை உதிர்த்த சுவர்களும், கதவின்றி காணப்படும் எட்டயபுர அரண்மனை வாயிலும், இவரை வெகுவாக பாதித்திருக்கிறது. பால்ய வயதில் தேசியக் கவிஞர் பாரதியார், பாரதி என்ற பட்டத்தினைப் பெற்ற தர்பார் மண்டபம் அமைந்திருக்கும் இந்த பழைய அரண்மனை, நூலின் ஆசிரியரை தான் மிகவும் நேசிக்கும் மகாகவி பாரதியாருக்கு தன்னால் இயன்ற பணியைச் செய்ய வேண்டும் எனும் எண்ணத்தில் பல்வேறுபட்ட காலகட்டங்களில் எழுதப்பட்டிருந்த இந்த நூலில் உள்ள அத்தனை கட்டுரைகளையும் பல்வேறு நூலகங்களில் தேடிச்சென்று முயன்று பெற்று தனது பத்து ஆண்டு கால உழைப்பில் நமக்கு வழங்கியிருக்கிறார்.




இந்த நூலில் அடங்கியிருக்கும் அறுபது தொகுப்புகள் பாரதியாருடன் வாழ்ந்திருந்து தற்போது மறைந்து போனவர்களுடையது. பாரதியாரைப் பார்த்திருந்த இறுதியான கண்களான சென்னை திருவல்லிக்கேணியில் வசித்து வந்த பார்த்தசாரதி அவர்களின் கட்டுரையை கடந்த ஆண்டு தனது நேர்காணல் மூலமாகப் பெற்று இத்துடன் கொடுத்திருக்கிறார். கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றில் மறைந்துபோன அவர் இந்தியா பத்திரிகையை நடத்தி வந்த ஸ்ரீனிவாச்சாரியார் அவர்களுடைய கடைசி மகன் ஆவார்.

இந்த நூலில் கொடுத்திருக்கும் அத்தனை கட்டுரைகளும் நாம் பாரதியை எந்த நோக்கில் அறிய விரும்புகிறோமோ அதற்கான விடையை கொடுப்பதாக அமைந்திருக்கிறது. குடும்ப ரீதியாக, சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக என ஆய்வுநோக்கில் தேடலில் இருக்கும் மாணவர்களுக்கும் உதவும் அரிய நூல் இது. நேரடியாக சொல்லப்பட்டிருக்கும் செய்திகளிலிருந்து பாரதி தன்னைப்பற்றி சொல்லாத அவரது மன வலிகளை இந்த தொகுப்பு நூலில் நம்மால் மறைமுகமாக உணர முடிகிறது.

பாரதியாருடன் பழகியிருந்த டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் அனுபவத்தில் பகிர்ந்த கட்டுரையில் அறியப்படும் செய்தியாக, பாரதியார் தனது கவிதை நூலினை அமெரிக்காவில் சித்திரங்களுடன் வெளியிடுவதற்கு அக்காலத்தில் மிகப் பெரிய தொகையான ஒரு லட்சம் ரூபாயை இவரிடம் கடனாகக் கேட்டிருக்கிறார். பத்திரிக்கை அலுவலகத்தில் பணிபுரியும் பிறருக்கு 30 ரூபாய் சம்பளம் எனில் உதவி ஆசிரியராக பணிபுரியும் பாரதியாருக்கு 500 ரூபாய் சம்பளம். அக்காலத்தில் மிகப்பெரிய தொகை இது. ஆனால் தனக்காக சேமிப்பென வைத்துக்கொள்ளாமல் தேவைப்படுபவர்களுக்கு கொடுத்துவிடும் இயல்புடைய பாரதியாரிடம் கையிருப்பாக பணம் ஏதுமின்றி இத்தொகையை கேட்டிருக்கிறார். அத்தொகை கிடைக்காமல் அவரது எண்ணம் நிறைவேறாமல் போயிருந்தாலும், இந்த நிகழ்வினைக் காணும் பொழுது, பாரதியார் அந்நிய நாட்டினரை வெறுக்கவில்லை, அந்நியர் நம்மை அடிமைப்படுத்தியதையே வெறுத்திருக்கிறார் என்பதோடு, தன் நாட்டில் அவர் வாழ்ந்த காலத்தில் அவரது எழுத்துகள் அதற்கு சமமான மதிப்பினை உணராமல் இருந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

தனது குருவாக ஏற்றுக் கொண்ட நிவேதிதையுடனான சந்திப்பில் நடந்த ஒரு நிகழ்வு அடங்கிய கட்டுரையும் இந்த நூலில் அடங்கியிருக்கிறது. ஒரு ஐரோப்பிய பெண்மணியும் நிவேதிதையும் தங்கிருந்த அவரது இல்லத்திற்கு பாரதியார் சென்றிருந்த பொழுது நடந்த உரையாடலில், நிவேதிதை அவர்கள், இந்தியா சுதந்திரமடைய வேண்டுமெனில் போர் என்பது கூடாது என்ற கருத்தினை முன் வைக்கிறார். அதனை பாரதியார் மறுத்து, போர் இல்லாமல் நாடு சுதந்திரம் அடையாது என மறு கருத்தினை உறுதியாகச் சொல்கிறார். உடனிருந்த ஐரோப்பிய பெண்மணியும் போரினை மறுக்க, நிவேதிதை கடுமையாக போர் கூடாது என்பதை வெளிப்படுத்தும் பொழுது, பாரதியார் மறுபேச்சில்லாமல் அடங்கி விடுகிறார். இவ்விடத்தில் குரு சிஷ்யனுக்குமான உறவினை நம்மால் பார்க்க முடிகிறது. போரில் தனது குடும்பத்தினரை இழந்த ஐரோப்பிய பெண்மணியின் முன்னிலையில், போர் வேண்டும் எனும் கருத்து, அவரை மனம் வருந்தச் செய்யும் என்ற காரணத்தை நிவேதிதையிடமிருந்து பின்பே அறிந்து கொள்கிறார்.

மற்றுமொரு கட்டுரையில் பாரதியுடனான வ.வே சுப்பிரமணிய ஐயர் அவர்களின் அனுபவத்திலிருந்து மற்றுமொரு பாரதியையும் நாம் காண்கிறோம். லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற வ.வே. சுப்ரமணிய ஐயர் லண்டன் கடிதங்கள் எனும் தலைப்பில் இந்தியா பத்திரிக்கைக்கு தகவல்களை அனுப்பி வந்தவர். ஒரு முறை பெர்ஷிய மாணவன் மதன்லால் திங்காரா தனது நாடான இந்தியாவில் ஏழை மக்கள் சுரண்டப்பட்டு அவர்களது உழைப்பு உறிஞ்சப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாமல் ஆங்கிலேய அதிகாரியான கர்னல் கர்சன் வைல்லி அவர்களை சுட்டுக் கொன்று விடுகிறார். இதனால் தூக்கிலிடப்பட்ட இம்மாணவன் மறைந்த அடுத்த வாரத்தில் லண்டனில் கிளாஸ்கோ எனும் நகரத்திலிருந்த பஞ்சாலை தீப்பற்றி எரிந்து விடுகிறது. இவ்விரு செய்திகளையும் இணைத்து, மதன்லால் திங்காரா தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதற்கு ஏற்பட்ட நஷ்டமாக அவர்களது பஞ்சாலை எரிந்துவிட்டது என்று வ. வே சுப்பிரமணிய ஐயர் செய்தியை அனுப்புகிறார். இதனைக்கண்ட பாரதியார், "பழிவாங்கும் நோக்கம் நமது அல்ல. இதனால் நாம் அடையப்போகும் லாபம் ஏதும் அல்ல" என்று அறிவித்து அதிகாரி கர்னல் கர்சன் வைல்லி இறந்ததற்கு அஞ்சலியும் செலுத்தி

செய்தியை வெளியிடுகிறார்.

ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் பாரதியுடனான அனுபவத்தில் தனது எழுத்துக்கான சரியான அங்கீகாரம் பெறுவதில் பாரதிக்கு இருந்த ஏக்கத்தினை அறிய முடிகிறது. புதுச்சேரியில் தனது பத்து ஆண்டு கால வாழ்க்கைக்கு பிறகு மீண்டும் தனது சொந்த ஊரான நெல்லைக்கு திரும்பிவந்து பாரதியார் வாழ்ந்து கொண்டிருந்தபொழுது, கால இடைவெளியில் பழைய ஆட்களும் அவரை மறந்த நிலையில், புதிய ஆட்களுக்கு அவரைப் பற்றி அறியாத நிலையில், தொடர்புகள் குறைந்து சில காலம் இருந்திருக்கிறார். இந்த சூழ்நிலையில் அன்னிபெசன்ட் அவர்கள் நடத்தி வந்த ஆங்கிலப் பத்திரிக்கையான நியூ இந்தியா இதழில் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் உலகக் கவி ஷெல்லியுடன் ஒப்பிட்டு பாரதியின் கவிதைகளைப் பாராட்டியும் தாகூரின் கவிதைகளைப் போல பாரதியாரின் கவிதைகள் உலகம் முழுவதும் அறிய வேண்டி பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று எழுதிய ஆங்கில கட்டுரையினை படித்த பாரதியார், இக்கட்டுரையினை படைத்தவர் பத்து மைல் தொலைவில் இருந்தாலும் நடந்து சென்று கூட தான் சென்று பார்க்க விரும்புவதாக தனது நண்பரான தேசியவாதி நெல்லை சாது கணபதி அவர்களிடம் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார். நெகழ்ச்சியான சம்பவமாக இந்த நூலில் இந்நிகழ்ச்சி பதிவாகியிருக்கிறது.

கீழ் ஜாதியினர் என்பதினால் துன்பத்தை அனுபவித்த கனகலிங்கம் அவர்களது வேதனையை காணப் பொறாமல் அவருக்கு பாரதியார் பூணூல் அணிவித்தாரென்பது பெரும்பாலானவர்கள் அறிந்த ஒன்று. அவ்வாறு அவர் குலம் மாறிய பிறகான வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பது பலரும் அறியாதது. ஜாதி வேர்கள் ஆழமாக ஊன்றியிருந்த காலத்தில் நடந்த நிகழ்வுகள் கனகலிங்கம் அவர்கள் பகிர்ந்த கட்டுரையில் அவரது

அனுபவமாக இந்த நூலில் பதிந்திருக்கிறது. பூணூல் அணிந்த அவர், தான் மாமிசம் உண்ணுவதை நிறுத்திவிட்ட பிறகு தன் குலத்தைச் சேர்ந்தவர்களும் தன்னை ஏற்றுக் கொள்ளவில்லை புதிதாக ஒருவன் தன் குலத்திற்கு பூணூல் அணிந்து வந்திருக்கிறான் என அக்குலத்தவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டிற்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் தனக்கு வேலை கூட யாரும் கொடுக்காமல் தத்தளித்துக் கொண்டிருந்திருக்கின்றார். இதனை ஒரு குறையாக அவர் சொல்லாவிட்டாலும் அச்சமூகத்தின் நிலை அப்படியே இருந்திருக்கிறது. இதனையெல்லாம் அறியும்பொழுது, பாரதியார் கீழ் சாதியினர் என சொல்லப்படுபவர்கள் வீட்டில் உணவு அருந்தியும், கழுதைகளை கட்டி அணைத்தும், ஒற்றுமையை விரும்பியும், குழந்தைகளுடன் அன்பாகவும், இருந்த அவரை அவரது குலத்தினர் எப்படியெல்லாம் ஒதுக்கி வைத்திருப்பார்கள், பாரதியின் மனம் எப்படியெல்லாம் துன்பப்பட்டிருக்கும் என்பதையும் உணர வைக்கிறது. அதற்காகவெல்லாம் தன்னை மாற்றிக் கொள்ளாமல் மக்களுக்காக, மக்கள் விடுதலைக்காக, ஜாதி ஒழிப்பிற்காக, தன் வலிகளையும் பொறுத்துக் கொண்டே போராடி இருப்பார் நமது மகாகவி.

இப்படி இன்னும் பல எண்ணங்களை நம்முள் எழுப்பும் படியாக பலரது அனுபவங்களை இந்த நூலில் அடங்கியிருக்கும் கட்டுரைகள், தன்னுள் தாங்கிக் கொண்டிருக்கிறது. நம்முள் எழும் கேள்வியாக பாரதியின் மாறுபட்ட உடை உடுத்தும் வழக்கம், எட்டயபுர அரண்மனையில் பாரதியின் வாழ்வு, கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டு நிகழ்வு, மகாத்மா காந்தியடிகளுடனான சந்திப்பு, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அவ்வாறு பெயர் பெற்ற தருணம், பாண்டிச்சேரி அரவிந்தர் அவர்களுடனான உறவு, ஶ்ரீனிவாச்சாரியார் அவர்களது குடும்பத்துடனான பாரதியின் நெருங்கிய உறவு, பார்த்தசாரதி கோவிலில் மதம் கொண்ட யானைக்கு பாரதி உணவு வழங்கிய போது நடந்த சம்பவத்தை நேரில் கண்ட குவளைக்கண்ணன் அவரது கட்டுரை என இன்னும் பல தகவல்கள் அடங்கிய பாரதியைப் பற்றிய ஆய்வில் ஈடுபடும் மாணவர்களுக்கு பயன்படும்படியான தொகுப்பு நூலாக அமைந்து வரலாற்றில் இடம் பெறுகிறது பாரதி விஜயம்.

*புத்தகத்தின் பெயர்: பாரதி விஜயம்*

*ஆசிரியர்: கடற்கரய் மத்தவிலாச அங்கதம்*

*பதிப்பகம்: சந்தியா பதிப்பகம்*

*பக்கங்கள்: 1039*

*விலை. : ₹1000*

*பிரேமா இரவிச்சந்திரன் சென்னை.*

மலர்மகள்

## குறும் பாக்கள்

*எல்லா ராசிகளுக்கும்*
*ஒரே பலன்*
*வாகன விபத்து!!*

❁

*விளையாட ஏங்கும்*
*பொம்மைகள்*
*நர்சரியில் குழந்தைகள்!!*

❁

*சமத்துவக் கோட்பாட்டில்*
*இளமையும் முதுமையும்*
*மதுக்கடை!!*

❁

*திருமண விழாவில் விருந்து*
*அழைப்பாரில்லை*
*சாட்சிப் படுத்தும் காட்சிக்காரனை!!*

❁

*ஒன்று கூட மலர வில்லை*
*பூக்களுக்கும்*
*விடுமுறையோ??*

❁

*புன்னகைக்கும் கடவுள்*
*அறியவில்லை வயிற்றுப் பசி*
*சாலை ஓவியம்!!*

❁

*குற்றம் ஏதும் செய்யாமல்*
*தண்டனை அனுபவிப்பு*
*அறுகா ஒற்றை செருப்பு!!!*

# கம்பிகளுக்குப் பின்னால்

கண்ணன் விஸ்வகாந்தி

அது ஒரு நீண்ட விடுமுறை வாரம்.

அடுத்து வரும் திங்கள் கிழமை சுதந்திர தினமோ, ஞாபகம் இல்லை.

பஷீரின் நண்பர்கள் வந்திருந்தனர்.

என்ன செய்யலாம் என்ற பேச்சு முடிவின்றி நீண்டு கொண்டே போனது.

நயாகரா நீர்வீழ்ச்சிக்கு செல்ல அதிக வோட்டு.

‘பாஸ்டனிலியே ஏதேனும் ஒரு தீவுக்குப்போலாமே’ இது நான்.



இப்போது வரை 30 தீவுகளில் ஒரு பத்து தீவுகளையாவது பார்த்திருக்கிறேன்.

இந்த 10 வருட அமெரிக்க வாசத்தில் நான் கொஞ்சமேனும் சந்தோஷமாக இருந்தது என்றால் இங்கு தான்.

பாலாறு தேனாறாய் ஓடும் என நண்பன் சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வந்து தொலைக்கிறது.

தடம் மாறுகிறது, கதைக்கு வருவோம்.

'மலை ஏறலாம்' என்றான் பஷீர்.

'இங்க பக்கத்தில் மலை ஏதும் இருக்கிறதா?' முகமதின் சந்தேகம்.

''இங்க இடாகோவுல மலை ஏறலாம்' என்றான் அசீம்.

'பாஸ்டனிலிருந்து எத்தனை மணி டிரைவ்?' நான்.

'நான்கு ஐந்து மணி நேரம் ஆகும்' அசீம்.

எல்லோருக்கும் இந்த பிளான் பிடித்திருந்தது.

பேசிக்கொண்டே தூங்கிப் போனோம்.

விடிகாலையில் இரண்டு கார்களில் பயணம் துவங்கியது.

காலையில் ஆறுமணிக்கு இடாகோ. உருளைக்கிழங்கிற்கு பேர் போன இடம்.

மலையடிவாரத்தில் பல்துலக்கியபின் ஏறத்துவங்கினோம்.

நான் தான் கடைசியாக.

ஆபரேசன் செய்து சில ஆண்டுகளே ஆகின்றதால்,

மூச்சு விட முடியாமல் திணறினேன்.

நுரையீரல் வாய் வழியாக வெளியே வந்துவிடும் போல் இருந்தது.

இறந்து விடுவேனா எனப்பயம்.

பஷூர் கைகொடுக்க ஒரு வழியாக ஏறிவிட்டேன்.

ஆயிரம் மீட்டர் உயரத்தில் நாங்கள். அற்புதமான நிகழ்வு.

அனைவருக்கும் ஏதோ சாதித்து விட்டோம் என்ற சந்தோஷம்.

தன்னந்தனியாக ஒரு கம்யூனிகேஷன் கோபுரம் நின்று கொண்டு இருந்தது.

அனைவரும் அதன் கீழே நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம்.

ஏதோ ஒரு டிரக் வண்டி எங்களைக் கடந்து சென்றது.

கீழிறங்கும் போது சற்றே ஆசுவாசமாக இருந்தது.

காலை உணவுக்கு ஒரு சிறிய ஹோட்டலுக்குச் சென்றோம்.

உருளைக்கிழங்கு வறுவல், சாண்ட்விச், காபியுடன் அருமையான உணவு.

பக்கத்து ஐஸ்கிரீம் கடையில் அருமையான ஐஸ்கிரீம்.

அப்படி ஒரு சுவையான ஐஸ்கிரீமைச் சாப்பிட்டதே இல்லை.

இன்னமும் நாக்கில் ஊறுகிறது சுவை இத்தனை வருடங்கள் கழித்தும்.

'இங்க பக்கத்தில் உள்ள ஒரு தோட்டத்தில்தான் அமெரிக்க கனடா எல்லை இருக்கிறதாம் பார்க்கலாம்' என்றான் பஷீர்.

ஆச்சரியமாக மற்றவர்களுக்கும் இதில் ஆர்வம். எனக்கோ மிகவும் பயம்.

இந்த இமிக்ரேஷன் விஷயங்களில் அடி வாங்கியதால் என்னிடம்

எப்போதும் ஒரு ஜாக்கிரதை உணர்வு இருந்து கொண்டே இருக்கும்.

பக்கத்து தோட்டத்திற்குச் சென்றோம்.

நான் வண்டியிலேயே அமர்ந்து விட்டேன்.

இவர்கள் மூவரும் காலிங் பெல் அடித்ததும் ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க

அமெரிக்கர் கதவைத் திறந்து வெளியே வந்தார்.

பார்டரைப் பார்க்க அனுமதி கிடைத்தபின், நானும் அவர்களுடன் இணைந்து கொண்டேன்.

வயலில் ஒரு இடத்தில் பிரிவினைக் கோடு போன்ற

மரம் செடிகளுடன் சற்றே மேடான இடத்தில் சாலைக் கல் போல் நடப்பட்டு இருந்தது.

பஷீரும், அனைவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.

திரும்பக் காருக்கு வந்து அவருக்கு நன்றி தெரிவித்து அங்கிருந்து கிளம்பினோம்.

அடுத்த இடம் குறித்து பேசிய படி வண்டி கிராமத்து சாலையில் சென்று கொண்டு இருந்தது.

திடீரென போலீஸ் வேனின் சைரன் சத்தம் கேட்டது. அச்சத்தம் வரவர மிகவும் அருகில்.

அனைவருக்கும் மிகவும் படபடப்பு. கிராம சாலை என்பதால் வண்டிகள் மெதுவாகவே நகர்ந்தன. ஏன் இந்த போலீஸ் வேன் நம்மைப் பின்தொடர்ந்தது வருகிறது?

அருகில் வந்தவுடன் சைரன் அதிகரிக்க இரண்டு வண்டிகளையும் ஓரம் கட்டி நிறுத்தினோம்.

அதிகாரி ஒருவர் முதல் காரில் உள்ளவர்களை விசாரித்த பின்னர் எங்களிடம் வந்தார். எங்கிருந்து வருகிறோம், எதற்காக இங்கு வந்தோம் என எல்லா விவரங்களையும் கேட்டார். நாங்கள் பயத்துடன் பதிலளித்தோம்.

எங்களின் டாக்குமெண்ட் அனைத்தையும் வாங்கிப் பார்த்த பிறகு யாருடனோ கைப்பேசியில் பேசினார்.

பிறகு எங்களிடம் வந்து, ‘எனது மேலதிகாரி தங்கள் அனைவரையும் அழைத்து வரச்சொன்னார், வண்டியில் ஏறுங்கள்’ என்றார்.

அவரே வண்டியை இயக்கி, அவருக்கு அருகில் நான்.

காலை நீட்ட இயலவில்லை. அவ்வளவு அசௌகரியம் மிகுந்த பயணத்தை எப்போதும் செய்ததில்லை. சொன்ன போது அவரிடம் எந்த எதிர்வினையும் இல்லை. அவர் கொலம்பிய நாடு என்றார். சுமுகமான உரையாடல்.

நாங்கள் இந்தியா என்றேன். முப்பது நிமிடங்களுக்குப் பிறகு, ஒரு போலீஸ் அலுவலகத்தில் இறக்கி விடப்பட்டோம். கால்கள் விரத்துப் போய், தள்ளாடியது எனக்கு.

உள்ளறையில் அமர வைக்கப்பட்டோம். ‘நாங்கள் எப்போது வெளியே செல்லுவோம்?’ என சற்றே குரல் உயர்த்திக் கேட்டேன். உடனே, கொலம்பியாவிலிருந்து வந்த போலீஸ், வேறு ஒருவரை அழைத்தார்.

அங்கு வந்த ஆப்பிரிக்க அமெரிக்க போலீஸ், பாதுகாப்பு கருதி, உங்களை

செல்லில் அமரவைக்க வேண்டும் என்றார்.

இரண்டு செல்களில் அடைக்கப்பட்டோம்.

பஷீர் முதல் செல்லில் இருந்தான். எனக்கு அவன் மீது, கொலை வெறியே வந்தது. வேண்டாம் எனப் பல முறை சொல்லியும் இப்படி நம்மை அசிங்கப் படவைத்து விட்டானே என்று அடங்காத ஆத்திரம். எனது செல்லில் பஷீர் இருந்திருந்தால், கன்னத்தில் அறைந்திருப்பேன்.

இனி அவனது அறையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்தது. வீட்டிற்குத் தெரிந்தால், எவ்வளவு அசிங்கம். இங்கிருந்து வெளியே செல்ல முடியுமா? ஏதோதோ யோசனைகள்.

அதிகாரி வந்து, எங்களின் டாக்குமெண்ட் அனைத்தையும் சரிபார்ப்பதாகவும், சர்வர் இணைப்பு சரியாக இல்லாததால், தாமதமாகிறது என்றார்.

நான்கு மணி நேரம் நரகமாகக் கழிந்தது. எந்த மாற்றமும் இல்லை.

நான் நம்பிக்கை இழக்க ஆரம்பித்தேன்.

அசீம் கோபத்தின் உச்சியில் இருந்த வாறு, அதிகாரியிடம் பேச வேண்டும் என்றான்.

அதிகாரி வந்ததும், ‘நாங்களனைவரும் கணினி வேலை செய்பவர்கள், லீகலாக விசாவில் வேலை செய்கிறோம். நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை. பார்டரைப்பார்க்க ஆர்வத்தில் சென்றோம். எங்களை சீக்கிரம் வெளியே அனுப்புங்கள்’ என கணீரென்ற குரலில், சுத்தமான ஆங்கிலத்தில், விவரித்தான். கத்தினான் என்றே சொல்லலாம்.

அதிகாரி வெளியே சென்ற பின், மற்றவர்களுடன் விவாதித்தார்.

பிறகு, செல்லில் இருந்து எங்களை வெளியே திறந்து விட்டனர்.

டாக்குமெண்ட் அனைத்தையும் மீண்டும் அதிகாரி சரிபார்த்தார்.

என்னைப் பார்த்து, ‘நீங்கள் குடியுரிமை பெறப் போகிறீர்கள், இனி இப்படி செய்யாதீர்கள்’ என்றார். எனக்கு சற்றே பெருமிதம்.

பொருட்களனைத்தையும் சரிபார்த்த பின் ஒப்படைத்தனர்.

நான் மண்டியிட்டு லேசைக்கட்டும்போதும் துப்பாக்கி என்னைப் பார்ப்பதை உணர்ந்து சில்லிட்டுப்போனேன்.


அதிகாரி எங்கள் அனைவரிடமும் கைகுலுக்கி, ‘இன்று எங்களை எண்டர்டெயின் செய்ததற்காக நன்றி’ என்றார்.

அவருக்குத் தெரியாது, அந்த நாள், எங்கள் வாழ்நாளில் ஒரு கறுப்பு நாள் என்று.

நன்றாகப் பேசிய பின், போலீசிற்குப் போன் செய்த அமெரிக்கப் பெரியவரை

இன்றும் நினைத்திருக்கிறேன் தப்பான காரணத்திற்காக.

வெளியே இருள் கல்வி ஆரம்பித்தது. நாங்கள் எங்களுடைய வண்டிகளைக் கிளப்பினோம்.



# சஞ்சலம் ஏன் சஞ்சனா???

தி.வள்ளி, திருநெல்வேலி

கணேசன் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். கமலம் இரவு சமையலுக்கு வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தாள். காலிங் பெல் அடிக்க... கமலம் வாசலுக்கு விரைந்தாள். வெளியே மகள் சஞ்சனா... கையில் பெரிய பெட்டியுடன்.

கமலம் ஒருகணம் திகைத்து, " என்னங்க! நம்ம சஞ்சு வந்திருக்கா.." என்று குரல் கொடுத்தாள். ஹாலுக்கு வந்தார் கணேசன்.

"வாம்மா! உன் மாப்பிள்ளை வரலையா?" என்றார் எதார்த்தமாக.

"ஏது மாப்பிள்ளை வரலைனா உள்ள விடமாட்டீங்க போல..." என்றாள் குத்தலாக. கணேசன் அவசரமாய்...

"என்னடா! இப்படி சொல்லிட்ட! இது உன் வீடு எப்ப வேணும்னாலும் நீ வரலாம்.. போகலாம்.. உனக்கில்லாத உரிமையாடா?" என்றார் வாஞ்சையாக.

மாடிக்குப் போய் பெட்டியை வைத்துவிட்டு, முகம், கை, கால் கழுவிட்டு வா! சப்பாத்தி, குருமா பண்ணிடறேன். அப்பா கூட சாப்பிடு!" என்றாள் கமலம்.

அவள் மாடிக்குப் போக... கமலம் கணவனைப் பார்த்தாள். "என்னங்க இவளப் பாத்தா சரியாப் படல... ஏதாவது சண்டை போட்டுட்டு வந்துட்டாளா?" கவலை மனதை கவ்வியது. திருமணமாகி 3 மாதமே முடிந்த நிலையில், மகள் தனியாக வந்து நின்றால் மனம் சஞ்சலப்படத்தானே செய்யும்.

"ஏண்டி! நீயே கற்பனை பண்ணிக்கிறே.." என்று சமாதானம் சொன்னாலும், அவருக்கும் உள்ளூற பதறவே செய்தது.

சாப்பாடு முடிந்ததும் ஹாலில் வந்து அமர்ந்தனர். மகள் பேசட்டும் என்று காத்திருந்தார் கணேசன்.

" அப்பா! ராஜேஷ் ஃபேமிலி சுத்த போர். என்னால அங்க அட்ஜஸ்ட் பண்ண முடியாது. அதான் ராஜேஷ் கிட்ட சொல்லிட்டு வந்துட்டேன். என்கூட மேற்கொண்டு வாழணும்னு ஆசைப்பட்டா, தனிக்குடித்தனம் போகணும், இல்லேன்னா பிரேக் அப் பண்ணிக்கலாம்னு " என்று வெடிகுண்டை வீச ஆடித்தான் போனார்கள் கமலமும், கணேசனும்.

"கூட்டுக்குடும்பம் பரவாயில்லை.. எனக்கு சௌரியம்தான்னு நீ தானே சொன்னம்மா"

" ஆமாம்பா காலையில அடிச்சு புடிச்சு எழுந்திருக்க வேண்டாம். கிச்சன் வேலையெல்லாம் மாமியார் பாத்துக்குவாங்க. லஞ்ச் பேக் பண்ணி கொடுத்துடுவாங்க. நைட் டிபன் வேலையெல்லாம் ஆபீஸ் முடிஞ்சு வந்து நானே பண்ணணும்ங்கிறதில்ல அவங்களே பண்ணிடுவாங்க"

"அப்புறம் என்னடி ஆச்சு? மாமியார் தான் ரொம்ப நல்ல மாதிரியா இருக்குறாங்களே... வேறு ஏதேனும் பிரச்சனையா?"

"அம்மா எனக்குன்னு சில தனிப்பட்ட விருப்பு வெறுப்பு இருக்கு. அதை அவங்க மதிக்க கத்துக்கணும். காலையில டிபன் ராஜேஷ் கூட சாப்பிட உட்கார்ந்தால் அவன் அண்ணனோடு சாப்பிடுறேன்னு சொல்றான். வீக்கெண்ட் ல சினிமா போகலாம்ன்னு சொன்னா நான் சொன்ன படத்துக்கு டிக்கெட் வாங்கிட்டு வந்தான்... எட்டு டிக்கெட்...மொத்த குடும்பமும் சேர்ந்து போனாங்க... என்னைத் தவிர.. நான் தலைவலி வரலைன்னு சொல்லிட்டேன். எனக்கு அது பிடிக்கலைன்னு கூட ராஜேஷுக்குப் புரியல... அவங்க அம்மா மட்டும் என்கூட இருக்குறேன்னு சொன்னாங்க. அதுக்கு இவன்,'அவ என்ன சின்னக் குழந்தையா தலைவலி தானே படுத்து தூங்கினா சரியா போயிடும்'னு சொல்றான்".

"பீச்சுக்கு போகலாம்ன்னு கிளம்பினால் கூட அவன் அண்ணன் பசங்களும் ஒட்டிக்கிறாங்க. ஈவினிங் ஆபீஸ்ல இருந்து வந்தா கொஞ்ச நேரம் கூட அவனுடன் தனியா பேச முடியல. 'கெமிஸ்ட்ரி சொல்லிக்கொடு சித்தப்பா... பிசிக்ஸ் சொல்லிக் கொடு சித்தப்பா'ன்னு சொல்லி உயிரை எடுக்குறாங்கப்பா. ஒரு நாள் லீவு விட்டால் உடனே 'அம்மாவை டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போறேன்' ' அப்பாவுக்கு பேங்க் ஒர்க் முடிக்கணும்ன்னு' கிளம்பிவிடுவான். குடும்பத்துக்கு எடுபிடி பண்ணத்தான் இவனுக்கு நேரம் சரியாயிருக்கு. அவன் என் ஹஸ்பண்ட்ப்பா. எனக்கு மட்டும்தான் உரிமையுள்ளவன். என் கூட டைம் ஸ்பெண்ட் பண்ணணும்னு அவனுக்கு புரியலப்பா. அவங்க குடும்பத்துக்கும் அது புரிய மாட்டேங்குது."

கமலம் பதில் சொல்லுமுன் காலிங் பெல்லை அடிக்க..." அந்த நேரத்தில் யாராக இருக்கும்" என்றபடி,கதவைத் திறக்க வெளியே கணேசனின் தம்பி ராகவன்.

" சித்தப்ப்பா..." ஓடிப்போய் அவரைக் கட்டிக்கொண்டாள் சஞ்சனா.

"அடேடே சஞ்சு... நீ எப்ப வந்த? உங்கப்பாவை பாத்துட்டு, நாளைக்கு உன்னை பாக்க உன் வீட்டுக்கு வரலாம்னு இருந்தேன். பிளஸண்ட் சர்ப்ரைஸ் உனக்கு கொடுக்கணும்னு நினைச்சேன். உன்னை இங்கேயே பாத்துட்டேன்."

“தம்பி வாடா! நல்லா இருக்கியா? என்றார் கணேசன்.

கமலமும்,” தம்பி! போன வாரம் கொஞ்சம் உடம்பு சரியில்லைன்னு பர்வதம் சொல்லிச்சு... இப்ப பரவாயில்லையா? பர்வதம், பிள்ளைங்க நல்லா இருக்காங்களா? லக்ஷனாவுக்கு வரன் எதுவும் வந்ததா? தினேஷ் கேம்பஸ்ல செலக்ட்டாகி இருக்கிறதா பர்வதம் சொன்னா.. ரொம்ப சந்தோஷம் தம்பி...” பேசிக்கொண்டே போனவளே இடைமறித்தார் கணேசன்.

“கமலம் அவன் உள்ள நுழையறதுக்குள்ள இத்தனைக் கேள்வியா... முதல்ல சாப்பிடுறதுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணு...பசியோடு இருப்பான்” என்றார்.

“ வேண்டாம் அண்ணி! வர்ற வழியில லெட்சுவைப் பார்த்தேன். ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் பேசலாம்னு ஹோட்டல்கு போயிட்டோம்”

“சஞ்சு என்னடா...எப்படி இருக்க.. உன் குரல் வாசல் வரை கேட்டதே”

“போங்க சித்தப்பா! உங்களுக்கு எப்ப பாரு கேலிதான். நான் உங்களை எவ்வளவு மிஸ் பண்ணுவேன் தெரியுமா?” என்றவள், அவர் அருகில் வந்து அமர்ந்துகொண்டாள். கடந்த கால நினைவுகள் மனதில் நிழலாடின.

“சித்தப்பா...என் குழந்தை பருவ நினைவுகள் எல்லாம் எவ்வளவு இனிமையானவை. கோல்டன் டேஸ்! நம்ம ரெண்டு பேரும் சித்திக்கு தெரியாம ராத்திரி வாக் போறோம்னு பொய் சொல்லிட்டு போய் குல்பி ஐஸ் சாப்பிடுவோமே நினைவிருக்கா?”

“ ஆமாண்டா சஞ்சு! சண்டே ஆனா பீச்சுக்கு எல்லா பிள்ளைகளும் கிளம்பிடுவீங்க”

“ஆமாம் சித்தப்பா! செம ஜாலியான ஈவினிங் ஆ இருக்கும் நல்ல ஆட்டம் போடுவோம்.. மிளகாய் பஜ்ஜி, டெல்லி அப்பளம், சுண்டல், பஞ்சுமிட்டாய் எல்லாம் வாங்கி கொடுப்பீங்க.. அப்பா பொறுமையா இருக்க மாட்டாரு.. நீங்கதான் எங்கள அலையில கையை பிடிச்சுகிட்டு விளையாட விடுவீங்க”

“உனக்கு உன் சித்தப்பா கூட ஜாலியா ஸ்பெண்ட் பண்ணுன டைம் எல்லாம் பிடிச்சிருக்கு. இன்னைக்கு அவர் கூட உட்கார்ந்து இதை பேசி சிரிக்கிற...ஆனா உன் ஹஸ்பண்ட் அவரோட அண்ணன் குழந்தைகளுக்கு சித்தப்பா. இப்ப அவர் உன்னை உன் சித்தப்பா கூட பேச கூடாதுன்னு சொன்னா ஒத்துக்குவியா?”

“அது எப்படி சித்தப்பா? நம்ம உறவு குழந்தையிலிருந்து வருவது.உங்களால தான் என் இளமைப்பருவம் சந்தோசமாயிருந்தது. உங்களை எப்படி மறக்க முடியும் சித்தப்பா? எப்படி பேசாம இருக்க முடியும்?”

சஞ்சு! நீ கூட்டுக் குடும்பத்தில் தான் 15 வயசு வரைக்கும் வளர்ந்த.. தாத்தா, ஆச்சி போன பிறகு உன் சித்தி படுத்தற பாட்டுல நான் தனிக்குடித்தனம் போனேன். நாம சேர்ந்து இருந்தப்ப இருந்த நினைவுகள் இன்னைக்கும் எனக்கும் பசுமையானவை. லக்ஷணா, தினேஷும் கூட இப்பவும் பெரியம்மான்னா கண்கலங்கிடுவாங்க. அண்ணிதான் அவங்கள வளர்த்தாங்க. பெரியம்மா சின்ன வயசுல சொன்ன நீதிக்கதைகள் அவங்களுக்கு நல்ல பண்புகளை கொடுத்திருக்குன்னு சொல்லுவாங்க. அவங்க அம்மா பொறுமையா சாப்பாடு கொடுக்க மாட்டா.. ஆனா அண்ணி கதை சொல்லி பொறுமையா சாப்பாடு கொடுப்பாங்க."

“அந்த சந்தோஷத்தை தான் மாப்பிள்ளையோட அண்ணன் குழந்தைங்க அனுபவிக்கிறாங்க. சின்ன வயசுல கிடைக்கற அன்பு மனசுல பசுமரத்தாணி போல பதிஞ்சிடும்... நாளைக்கு உனக்கும் ஒரு குழந்தை பிறக்கும். அது தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா என எல்லா உறவுகளோடயும் வளரும். தனி வீட்ல அதை போட்டு அடைச்சு வளர்க்காதீங்க.அதோட வளர்ச்சி எலக்ட்ரானிக் சாமான்களோடதான் இருக்கும். பாட்டிகிட்டயும், பெரியம்மா கிட்டயும் கேட்க வேண்டிய கதையை டிவி, யூ டியூப் பாத்துத்தான் தெரிஞ்சுக்கும். அது ஆரோக்கியமான்னு நீயே யோசிச்சு பாரு.. உன் சித்தியப் போல நீ இல்லாம, உன் மச்சினர் குழந்தைகளுக்கு நல்ல சித்தியா இருந்தீன்னா அவர்கள் வளர்ந்தபிறகு உன்ன பாசமா நினைச்சுக்குவாங்க.. பாடம் சொல்லிக் கொடுக்கிற வேலையை மாப்பிள்ளை ஏன் செய்யணும். நீ படிச்சவ தானே! அவங்களுக்கு பாடம் சொல்லிக் கொடு.. பாசமா பழகு...”

“அம்மா சஞ்சு! ஒரு செடியை ஓரிடத்திலிருந்து பிடுங்கி வேறு இடத்தில் நட்டால் அது அந்த மண்ணோட தன்மையை கிரகித்து வளர கொஞ்ச நாள் எடுத்துக்கத்தான் செய்யும். அது போலத் தான் நீயும் இன்னொரு குடும்பத்தில் போய் அவங்கள உறவாய் ஏத்துக்க கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். அவங்களையும் உறவாய் நினைத்து அன்பைக் காட்டினால் அவங்களும் உன்னை நேசிக்க ஆரம்பிச்சுடுவாங்க. குடும்பமே உன்னைக் கொண்டாடும். உன் வாழ்க்கையும் சந்தோஷமாகிவிடும்”

சித்தப்பா சொல்வதன் உண்மையை விளங்க, சஞ்சனா யோசிக்க ஆரம்பித்தாள். இனி மகள் நல்ல மாற்றத்துடன் தன் வீடு திரும்புவாள் என்ற திருப்தியுடன் கமலமும் கணேசனும் ராகவனை நன்றியுடன் பார்த்தனர்,மனதில் ஒரு நிம்மதி பிறக்க...


சங்கர சுப்பிரமணியன்.


# எப்போது எழத்தாளன்?

நான் எழுதினேன்
நான் தினமும் எழுதினேன்
நல்ல கருத்துக்களை எழுதினேன்
நல்லதா கெட்டதா என்பதை
நாநிலத்தார் இங்கு அறிவரே
நான் எழுதினேன்
நயமானவற்றறையே எழுதினேன்
நலமாகவே எழுதினேன்
அதிலும் நல்லதாவே எழுதினேன்
நிற்பதும் நிலைப்பதும் அதன்வழி
நான் எழுதினேன்
நான்கு வரிகளே எழுதினேன்
நான்கு வரிகளும் நல்லதனாதால்
நான்குபேர் தூக்கிவிட்டனர்
நல்லதென தொடர்ந்து எழுதினேன்
நான் எழுதினேன்
நான்குபேர் தூக்கிவிட்டனர்
தூக்கிவிட்ட அந்நால்வரும்
தூக்கிலிடவில்லை என்பதால்
துவண்டிடாது தொடர்ந்து எழுதினேன்
நான் எழுதினேன்
நான்குபேர் தூக்கிவிட்டதால்
நாளும் பொழுதும் எழுதினேன்
நாடறியாது போனாலும்
நாற்பதுபேர் வாசித்தனரே
நான் எழுதினேன்



நாற்பதுபேர் வாசித்ததை விடாமலே
நாற்பதுபேர் வாசித்ததை
நானூறுபேரிடம் பரப்பினர்
நாநூறுபேரென மகிழ்ந்தே எழுதினேன்
நான் எழுதினேன்
நானூறுபேர் எழுத்தை பரப்பவே
நாலயிரம் பேரிடம் சென்றடைந்தது
நாலாயிரம் திவ்யபிபந்தமா எழுதினேன்
நாற்பதாயிரம் பேரிடம் சென்றடைந்தது
நான் எழுதினேன்
நாற்பதாயிரம் கண்ட நான்
நான்கு லட்சம்பேர் அடைய விரும்பினேன்
நான்கு லட்சம்பேரை பெறுவேனோ
நல்லதல்ல புகழ் போதையென விடுவேனோ
நான் எழுதினேன்
நான்கு லட்சம் வந்தபின்
நானும் வீணாய் இருப்பேனா
நான்கு கோடிபேரையும் எட்டுவேன்
அப்போது சொல்வர் எழுத்தாளன் என்று!







# புதுக்கவிதையில் கோட்பாடுகள்

மைத்திரி அன்பு, காஞ்சிபுரம்

பொதுவாகப் புதுக்கவிதைகள் சில தனித்தன்மைகளையும் பொதுமைகளையும் கொண்டமைந்துள்ளன. அத்தகைய தன்மைகள் 1960 களுக்கும் 1970 களுக்கும் இடையே நிறைய மாற்றங்களைச் சந்திருக்கின்றன. 1970 களுக்குப் பிறகு புதுக்கவிதை பல்வேறு இலக்கிய இயக்கங்களோடு தொடர்புகொண்டு, பண்பாட்டுத் தளத்தில் மாற்றங்களை உருகொள்ளச் செய்யும் கருவாகச் செயல்பட்டுள்ளது. அதற்கு உரைநடை என்ற பொது ஊடகத்தன்மை, தற்கால வாழ்வியல்களை மையப்படுத்தி, அதன் வெளிப்பாடுகளைப் பேச்சுத்தன்மையில் வெளியிட்ட வெளிப்பாடுமுறை பெரும் உதவியாக இருந்ததுள்ளது. அதன் தொடர்ச்சியாக இக்காலக் கட்டத்தில் புதுக்கவிதை சமுதாய மறுப்பு, சமுதாய ஏற்பு உள்ளிட்ட இருவேறுபட்ட தளங்களைக் பெற்றது. அதன்கீழ் தற்போதைய புதுக்கவிதை பல கோட்பாடுகளைத் தனக்கான பொதுத்தன்மைகளாக கொண்டுள்ளது.

காலந்தோறும் இலக்கிய வளர்ச்சியில் பல்வேறு கோட்பாடுகள் தோன்றியுள்ளன. அவ்வாறு தோற்றம் கண்ட ஒவ்வொரு கோட்பாடுகளும் ஒவ்வொரு தனித்தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக,

"வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்பது காரல் மார்க்ஸின் கூற்று; ஒவ்வொரு எழுத்துக்குப் பின்னாலும் ஒரு வர்க்கத்தின் நலன் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பது மாவோ கூற்று; 1853 வாக்கில் இந்தியாவைப் பற்றிய தனது குறிப்புகளில் மார்க்ஸ் வர்ணாசிரமத்தையும், அதை அடியொற்றிய சாதிய அமைப்பையும் குறிப்பிடும் போது, இது இம்மண்ணின் தனித்தன்மை என்று கூறிச் சென்றார். அப்படியானால் வர்க்க அடிப்படையில் பிற நாடுகளின் வரலாற்றைப் புரிந்து கொண்டது போல இங்கும் புரிதலை நடத்துவது சரியல்ல என்றாகிறது. இங்கு ஏடறிந்த காலத்திலிருந்து நாம் புரிந்துகொண்ட வரலாறெல்லாம் சாதியப் போராட்டத்தின் வரலாறாகவும், இருப்பதைப் புரிந்துகொண்டு வெளிப்படுத்தியவர்கள் மகாத்மா புலே, பெரியார், நாராயணகுரு மற்றும் அம்பேத்கார் போன்றோர் தமிழகத்திலும் மராட்டியத்திலும் ஆதிக்கச் சாதிஎதிர்ப்பு என்பதற்கு நீண்ட வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. இலக்கியத்திலும் இதன் சுவடுகள் ஆழ்ந்த வடுக்களாகப் பதிவாகியுள்ளன. எனவே இங்கு ஒவ்வொரு எழுத்திலும் ஒரு சாதியின் நலன் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பது ஒரு சமுதாய உண்மையாகும்" (சு.அரங்கராசு., தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு., மூன்றாம் உலகப்பதிப்பகம்., கோவை., 1989.,ப.303)

என்கின்ற சு.அரங்கராசுவின் கூற்றைக் கூறலாம்.

தமிழிலக்கியத்தின் கோட்பாடுகளுக்கான தன்மைகள்

காலந்தோறும் வளர்ந்த கோட்பாட்டியல், மரபு இலக்கியங்களிலும் தமக்கேற்ற பங்கைப் பெற்றிருக்கின்றன. அவ்வழியில் தமிழ்ச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வை கற்பித்துவந்த பார்ப்பனீயத்திற்கு எதிராக, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள்.எ.972) என்று வள்ளுவர் தொடங்கி, வள்ளலார், பாரதியார், பாரதிதாசன் என ஆதிக்கச் சாதியத்தையும் அதன் கற்பிதங்கள் தொடர்பான சகல மதிப்பீடுகளையும் எதிர்த்த எதிர்மரபு இலக்கியம் தோன்றியதற்கான வரலாறு கிடைக்கிறது. உண்மையில் பல்வேறு சாதிய அடக்குமுறைகள் தொடர்பான போராட்டக் காலத்தில்தான், சிறுபத்திரிகை மரபு உருவாகியிருக்கிறது. இருந்தும் அப்போராட்டப் பதிவுகள் அப்போதைய பத்திரிகைகளிலும் எழுத்துகளிலும் வெளிவரவில்லை. எனவே இலக்கியம், வரலாறு என்கிற இருபெரும் கோட்பாடுகள் இங்கு மிக இயல்பாக வேறுபடுகின்றன. இதன்கீழ் கவிதை இலக்கியத்தின் இக்காலக் கோட்பாடுகளை ஆதிக்க மரபுக் கோட்பாடு, எதிர்மரபுக் கோட்பாடு என்ற இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

## ஆதிக்க மரபுக் கோட்பாடு

பொதுத்தன்மையிலிருந்து மேல்சாதிய மரபை ஏற்று, அந்நியப்பட்டவர்கள் ஆதிக்க மேல் சாதியினர்கள். அவர்கள் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்து வெளியான கோட்பாடு ஆதிக்கமரபுக் கோட்பாடாகும். அதன்கீழ் தொடக்ககால இலக்கியம் குறிப்பாக, கவிதைத்துறையில், ஏகாதிபத்திய இலக்கியக் கோட்பாடு வளர்ந்தது முதல், தனிமனிதவாதம், அரசியல் அற்ற சுத்த இலக்கியப் புலப்பாடு, மொழி ஒருகருவி, மொழியின் நுட்பத்தைத் தேடுவதன் அவசியம், நிகழ்காலப் பதிவுகளுக்கு முக்கியத்துவம் தராதசூழல், மரபை இலக்கிய யாப்பாகப் பார்க்கும் தன்மை, சுய இன்பத்துக்கானதாக இலக்கியத்தை உருவாக்குதல், உள்ளடக்கத்தைக் காட்டிலும் அழகியலுக்கு முக்கியத்துவம் தருதல் என்பன போன்ற புறத்தோற்றப் புகழுக்கானதாக இலக்கியங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னணியைக் குறிப்பிடலாம்.

## எதிர்மரபுக் கோட்பாடு

ஆதிக்க மரபு சார்பாளர்களின் கருத்துக்களுக்கு எதிராக எழுந்த கோட்பாடு எதிர்மரபுக் கோட்பாடாகும். இது பார்ப்பன அல்லாதார் இயக்கத்தின் கீழ் இயங்கும் தன்மைகொண்டது. அதன்கீழ் இக்கோட்பாட்டில்,

"இன்றைய பண்பாட்டுத் தொடர்ச்சியாய் விளங்கும் இடதுசாரி கலை இலக்கியப் படைப்பாளிகளின் படைப்பில் கீழையச்சார்பு, மரபுத்தொடர்ச்சி, சமூகச்சார்பு, வரலாற்றுச் சார்பு, அரசியல் தேர்வு, வருங்கால நம்பிக்கை, தொலைநோக்கு அடையாளங்களைப் பேணுதல், தீர்வு பற்றிய தெளிவு, ஆதிக்க எதிர்ப்பு, மொழியைத் தேசிய விழுமியமாகக் காணுதல், உள்ளடக்கத்திற்கு முதன்மை தரல், உள்ளடக்கம் சார்ந்த அழகியல், மூன்றாம் உலகச் சார்பு." *(சு.அரங்கராசு., தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு., மூன்றாம் உலகப்பதிப்பகம்., கோவை., 1989.,ப.306)*

போன்ற எதிர்நிலை மரபுகளைக் காணமுடியும். இதன் தொடர்ச்சியாக, இயந்திர மயமான உலகியலில் சிக்கி, மனம்கோணிப்போகும் மக்களுக்கான பிரச்சனைகளுக்கும், நீடித்த நிலவுடைமைச் சமூகத்தின் பண்பாட்டு இருக்கங்களுக்கும் இடையே வளர்ந்து வரும் முதலாளித்துவ கட்டுப்பாடுகளை ஒதுக்கிவிட முடியாமல் சுதந்திரம் இழந்த நடுத்தரவர்க்கப் பிரச்சனைகளையும் எழுத்து மற்றும் எழுத்துக்குப் பிறகு வந்த கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. இம்முயற்சி மேலும் வளர்ந்து (1970 களுக்குப் பிறகு) சமூக அடிப்படையில் படைப்புக் கோட்பாட்டிற்கான புதிய மாற்றங்களாக உருவாயின. அதன் விளைவாகவே, மரபுத்தொடர்ச்சி, சமூக மாற்றம், எதிர்கால நோக்கு ஆகிய முப்பரிணாமங்களை வானம்பாடி இயக்கம் உருவாக்குகிறது. இதன்விளைவால் இலக்கியம், "மனித விடுதலை" *(சமயவாதிகளின் விளக்கங்களின் செயல்படுபவனாகவும், சூழலை மாற்றி அமைப்பதில் தன் பங்கை உணர்பவனாகவும் மனிதன் மாறினான். பழைய கிராமிய அமைப்பில் முடங்கி கிடந்த மனிதன், முதலாளிய சமூக அமைப்பின்கீழ், வாழ நேரிட்டபோது சிந்தனைக்கு எட்டாத அளவு வளரும் வாய்ப்பைப் பெற்றான். – எஸ்.எஸ்.,நாகராசன்., கம்யூனிசம் விடுதலையின் இலக்கணம்., பரிணாமம்., கோவை., 1982., ப.108)*


"சமூக அவலத்திற்கு எதிரான வெளிப்பாடுகள்" *(அறிவியல், கலை ஆகிய சமூக நடவடிக்கைகளின் இறுதிக் குறிக்கோள் விடுதலைதான். அவ்விடுதலைக்காகத் தொடர்ந்து மனிதன் புற உலகிலும் அக உலகிலும் மாற்றங்களை விளைவித்து, மேலும் மேலும் விடுதலை அடைகிறான். - அ.மார்க்ஸ்., எது கவிதை., இராதா பதிப்பகம்., புதுக்கோட்டை., 1984., ப.15)*

"சமூகத்தின் அங்கமான தனிமனித சுதந்திரமும் விடுதலையும்" *(எண்ணத்தை அதன் பிறப்பிடத்திலே பிடித்து விடுவது, மொழியின் உள் சக்தி முழுவதையும் கண்டறிந்து வெளிப்படுத்துவதும், அவைகளின் விபரீதமான அபூர்வமான சேர்க்கையில் மொழியின் இயல்புக்கு மீறிய அர்த்த சாத்தியங்களை இறுக்கமாக எழுப்பிக் காட்டுவது, பொருளைப் பொருளாகக் கவிதை பண்ணுவதன் மூலம்தான் உண்மையைச் சிதறாமல் காணமுடியும். மரபு இலக்கணங்களில் இது சாத்தியமில்லை, நான் இலக்கணம் படித்தவன் என்பதால் நான் கலைஞன் அல்லவென்று உங்கள் சட்டத்தால் முடிவு கட்டுவிட முடியாது. கலைப் பிரக்ஞையுடன் என் மனம் உணரும் இனமறியா ஆழ்ந்த உணர்வுகளுக்கு மொழியும் மௌனமும் கலந்த உருவம் கொடுக்க முயல்கிறேன் நான். இதனால் எனக்கு விடுதலையும் உயர்வான ஆனந்தமும் நேர்கிறது. இந்தச் சுந்திரம்தான் புதுக்கவிதை - சு.அரங்கராசு., தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு., மூன்றாம் உலகப்பதிப்பகம்., கோவை.,1989.,பக்.110 – 111)* - என்ற முக்கிய அம்சங்களைப் பாடுபொருளாக்கிக் கொண்டு வெளிப்படுத்திய நிகழ்வு வானம்பாடி இயக்கக் காலத்தில் நிகழ்ந்திருக்கிறது.

வானம்பாடி இலக்கிய இயக்கத்திற்குப் பிறகும் புதுக்கவிதை சிறுபத்திரிகைகளால் தொடர்ந்து பல்வேறு இலக்கிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு இருந்தது. அதனால் புதிய விமர்சன செயல்பாடுகளும், பிரச்சாரத் தன்மையும், புதுக்கவிதை வெளிப்பாட்டுத் தளத்திற்குள் வந்தன. அதன்மூலமாகவே புதுக்கவிதை இன்று தலித்தியம், பெண்ணியம், முதலான தீவிரமான பண்புகளுக்கு இடம் தரும் இலக்கியவகையாக மாற்றம் பெற்றுள்ளது.

தங்கேஸ்

# தங்கேஸ் கவிதைகள்



மொழியின் சிறகேறி
பறந்து போகிறது
கனத்த மவுனம்

௭

ஒலிக் கூட்டைப் பிரிந்து போவது
உயிர் நீத்துப் போவது
போலத் தான் என்றாலும்
பிரியும் நேரம் வந்தால்
பிரிந்து தானே ஆக வேண்டும்

௭

சின்னஞ்சிறு அல்கு தாங்குமா
பூமியின் பாரத்தை
எல்லையற்ற பயணத்தில்
எங்கே நழுவ விடுகிறதோ
யாருக்குத் தெரியும்?

௭

பெரும் வெடிப்பு நிகழலாம்
அல்லது பிரளயமே வரலாம்
பித்தனின் சடையில் விழுந்தாலும் சரி பெரும் கடலின்
மடியில் விழுந்தாலும் சரி
ஆயிரம் ஆண்டுகள்
அங்கேயே தான் கிடக்க வேண்டும்

௭


காலம் நம்மை வந்து தீண்டாது
கடவுளின் மோனம் நம்மை
விட்டு அகலாது

௭

கடைசியில்
ஒரு பெரிய மீனுக்கு
இல்லையென்றாலும்
சிறிய மீனுக்கு கூட அற்புதமானஉணவாகலாம்

௭

கிடத்தலின் பெரும் சுகத்தை
சித்தன் அனுபவிக்கிறான்
நொண்டி அடித்துப் போகும்
இலைக் குருவி அனுபவிக்கிறது
நடமாடிக் கொண்டிருக்கும்
நம்மால் தானே
அனுபவிக்கவே முடியவில்லை



# பொஸ்போனத்தம்மா

அ.முத்துவிஜயன்

பொஸ்போனம் பாட்டிக்கு அவுக வீட்டுல வைச்ச பேரு புஸ்பவனம் தமிழ்ல பூக்காடு. ஆனா எந்த நேரத்துல அப்படி அவளுக்குப்பெயர் வைச்சாங்களோ அவ தலையில கல்யாணம் பண்ணி ஒருவருசத்துல தலையில பூவே வைக்க முடியாமப்போச்சு.

ஏன்னா அவளைக் கட்டிக்கொடுத்ததே ரெண்டாந்தாரமாத்தான். அதுக்கே அவங்க வீட்டுல ஒன்னுமில்ல. தன்னோட மொதல் சம்சாரம் ரெண்டு பிள்ளைகளை விட்டுட்டு 45 வயசுல செத்துப்போனதால பிள்ளைகளை கவனிக்கவும் அவரது தேவைகளுக்கு மாத்தான் இவளோட புருசன் இவளை இரு செலவும் போட்டு சீர்செனத்தி ஒன்னும் வேணாமுன்னு சொல்லி கலியாணம் பண்ணுனான்.

அதுலயும் கண்டிசன் வேற பிள்ளை கிள்ள பெறக்கூடாது பெத்தா சொத்துப்பிரச்சனை வந்துரும்னு சொல்லி கல்யாணம் பண்ணவன்ன கூட்டிட்டுப்போய் குடும்பக்கட்டுப்பாடு ஆப்பரேசன் இவளுக்கு பண்ணிவிட்டான் புருசன். அதுலயும் அவன் உசாரா தனக்குப் பண்ணிக்கல ஏன்னா சுயநலம். சொத்துக்கள் எல்லாம் அவன் எழுதிவைச்சபடி அவனோட பிள்ளைகளுக்குப் போய்ச்சேர இவளுக்கு ஒரு ஓட்டுவீடு மாத்திரம் கொடுத்தாங்க. அதுவும் உசிறு இருக்குறவரைக்கும் அனுபவச்சிக்கிலாம் விக்கவோ கொள்ளவோ அனுமதியில்ல.

இவளுக்கு அப்புறம் அது அவரோட பிள்ளைகளுக்கே போய்சேந்துரும்.

இப்ப முட்டுச்சந்தில நிக்கிற நெலமைக்கு பொஸ்போனம் வந்துட்டா. தனி ஆளு வருமானமில்ல. தனக்குத்தானே எல்லாம் செஞ்சிக்கனும். என்ன பண்ணுறதுன்னு தெரியல கண்ணக்கட்டிக் காத்துல விட்டமாதிரி

ஆயிருச்சு அவளுக்கு. அப்ப அவளுக்குள்ள ஒரு வெறி வாழந்துகாட்டனும் நாம்ன்னு வந்துச்சு ஏன்னா எல்லாரும் கைவிட்ட நிலை பெத்தவனும் சரியில்ல. வாக்கப்பட்டு வந்த எடமும் சரியில்ல. யாரும் தொணைக்கில்ல என்ன பண்ணலாம்னு யோசனை பண்ணுனா.

அப்ப அந்த ஊரில எல்லா ஊரையும் போலவே கங்காணி கொத்துக்கூலிக்கு ஆள் கூப்புட்டு இருந்தாக.

களை எடுக்க கருதருக்க நடவு நடன்னு கூப்புட்டுப்போவாக. அவங்க குடுக்குற கூலில கமிசன் கொத்துக்குக் குடுக்கனும். சின்ன வயசுல பாத்த வேலைதான் அதுனால தைரியமாப் போனா. அவங்களும் கூப்புட்டுப் போனாக. காலைல ஏழுமணிக்கி எந்திரிச்சிப் போகனும் வேலையப்பொறுத்துத் தான் கூலி.

செல எடங்கள்ல சாப்பாடும் கெடைக்கும். மொதல்ல கொஞ்சம் கஸ்டமா இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமா வேலை பழகிப்போச்சு. அது அவளோட வாழ்க்கைய ஓட்ட போதுமானதா இருந்துச்சு.

அதுனால களையெடுக்க கதிரருக்க தினக்கூலியாப் போய்ட்டு இருந்தா.ஆனா இதப்பாத்துட்டு அவளோட புருசன் பிள்ளைக கடுப்பாயிட்டாங்க. அதுக்கும் வைச்சாங்க ஆப்பு. அவரோட பொஞ்சாதி கூலிவேலைக்கிப்போனா அவருக்குள்ள அவமானம் அதுனால அவளை ஆரும் அந்த வேலைகளுக்குக் கூப்புடக் கூடாதுன்னு மெரட்டி வைச்சிருந்தாங்க அந்தப் பொழப்பும் போச்சு.

ஊர்பெரிய மனுசங்க அதிகாரம் படைச்சவங்க சொன்னா அத மீறி எதுவும் செய்ய முடியாது. அவள யாரும் கொத்துக்கூலிக்குக் கூப்புடல. பரமபதம் விளையாட்டுல பாம்பு கடிச்சமாதிரி வாழ்க்கை வந்து திரும்ப பொறப்பட்ட எடத்துல நின்னுச்சு. என்னா பண்ணுறதுன்னு தெரியல. செத்துப்போயிடலாம்னு தோணிச்சி.

கெணத்துல குதிச்சி சாகமுடியாது ரெண்டு காரணம் ஒன்னு நீச்சல் நல்லாத்தெரியும். ரெண்டு கெணறு பலருக்குப் பயன் படுறது அது வீணாப்போகும். அதுனால வேற வழி யோசிச்சா

அவங்க கொடுத்தவீட்டுல நாண்டுக்கிட்டுச் சாவலாம்னு யோசனை பண்ணி உத்தரத்துல சேலைய தொங்கப்போட்டு கழுத்துலசுருக்கு மாட்டிக் கிட்டு சாமிகிட்ட வேண்டினா.

என்னய நல்ல படியாக் கொண்டுபோய் சேத்துரு என்னால முடியல நிம்மதியா வாழ விடமாட்டேன்

றானுக சாகவாவது அனுகூலம் செய் சாமின்னு வேண்டிக்கிட்டு தொங்குனா. ஆனா இவளோட நேரம் இத்துப்போன உத்திரக்கட்டை இவளோட பாரம் தாங்காம முறிஞ்சி விழுந்தது

அப்ப ஒக்காந்து யோசனை பண்ணுனா. இம்புட்டு முயற்ச்சி பண்ணியும் சாமி நம்மளச் சாகவிடலயே. அதுக்கு ஏதாவது காரணம் இருக்கும். என்னமாவது செஞ்சி நம்மள வாழவிடாமப் பண்ணுனவங்க முன்னாடி வாழ்ந்து காட்டனும்ன்ற வெறி அவளுக்கு வந்துச்சு.

அப்ப நமக்கு என்ன பலம்னு ஒக்காந்து யோசனை பண்ணுனா. சின்னவயசில இருந்தே அவளுக்கு நல்லாப்பாடவரும் அதுனால அவளைகளையெடுக்கும் போதும் கதிரருக்கும்போதும் கூப்புட்டுப் போவாங்க இவ பாடுனா கேட்டுக்கிட்டே இருக்கலாம் அதுல சினிமா பாட்டு ஒப்பாறி தாலாட்டு எல்லாம் வரும்.

இப்ப கொத்துக்கூலி வேலைக்கிப் போக முடியாதது னால ஒப்பாறி பாடலாம்னு தோணிச்சி.

அவ எழவுவீடுகள்ல ஒப்பாறி வைக்கப் போனா. அங்க நல்லாக் காசு குடுப்பாங்க. அதுல செத்தவங்களோட அரும பெரும எல்லாம் சொல்லிப்பாடுவா. ஆனா ஒரு ஊரில தெனமா எழவு விழும் அதுனால பக்கத்து ஊர்களுக்கும் போக ஆரம்பிச்சா.

அடுத்த கட்டமா கோயில்கள்ல மொளைப்பாறி உற்சவம் நடக்கும்போது அங்கபோய் கும்மிப்பாட்டு பாட ஆரம்பிச்சா.

அங்க பாடுவா நடுவில நின்னு அப்ப பொண்கலெல்லாம் சுத்தி கும்மி அடிச்சி சேந்து பாடுவாங்க

" எங்க ஊரு அம்மன் இவ ஏழு ஊரு காப்பா

ஏழு ஊரு காக்கும்போது எங்க ஊரத்தான் பாப்பா

அவ எங்க ஊரத்தான் பாப்பா

தானான தானான தானான தான, தன தானான தான்"

நு அவ பாட எல்லாரும்,, கும்மி அடிச்சபடி தானானயைத் திரும்பச்சொல்லுவாங்க.

ராத்திரி ஏழுமணிக்கு ஆரம்பிச்சு 10-- 11 ந்னு போகும் ஊரே கூடி தானானான கொட்டும்

பங்குனி ஆடி சித்திரை மாதங்கள்ல அதுக்கு நல்ல கிராக்கி வந்துச்சு அங்க நல்லாக்காசு குடுப்பாங்க. அதுக்குத்தடை போட அவங்களால முடியல ஏன்னா ஊரில இருக்குறவங்களே அவளுக்குச் சப்போர்ட் பண்ண ஆரம்பிச்சாக. அவளோட பாட்டு அக்கம் பக்கம் இருந்த ஊருகள்ல பிரபலம் ஆச்சு.

அப்ப பல்கலைகழகங்கள்ல படிக்கிற பசங்க கொஞ்சப்பேரு இவ பாட்டைப் பத்திக் கேள்விப்பட்டு

இவகிட்ட வந்தாங்க.இவளைப் பாடச்சொல்லி இவ பாடுற பாட்ட ரெக்கார்டு பண்ணி அதுல டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி பண்ணி பட்டம் எல்லாம் வாங்குனாக. அது புஸ்த்தகமா வெளிவந்துச்சு. கொஞ்சநாள்ல அந்த வரிகளை பிரபல பாடகரை வைச்சி கேசட் போட்டு வித்தாங்க.

அப்ப இவகிட்ட சனங்க வந்து சொன்னாங்க ''ஒம்பாட்டை வேற யாரோ ரேடியா செட்டுல பாடுற மாதிரி இருக்கு வந்து கேட்டுப்பாருன்னு ''சொன்னாங்க

இவளும் போய் கேட்டா. '' ஆமா என் பாட்டுத்தேன் ரெக்கர்டு போடுறாகபோல. அவுக பாடுறதும் நல்லாத்தேன் இருக்கு''

ந்னு சொன்னா. அப்ப அவங்க சொன்னாங்க ஒன் பாட்ட அவங்க பாட ஒனக்கு காசு குடுத்தாங்களான்னு கேட்டாங்க அவங்க இவளுக்கு எதுவும் குடுக்கல

ஆனா அது பத்தி இவ கவலைப்படல.''

எனக்கு வர வேண்டியது தானா வரும் என்னய நாண்டுக்கிட்டுசாக முயற்சி பண்ணுனப்ப காப்பாத்துன சாமி வழி காட்டும் 'நு சொன்னா

அதுக்கப்புறமும் தொடர்ந்து பாட்டுப் பாடப் போனா அப்ப சாவு வீட்டுக்கும் போனா சாமிக்குப்பாடவும் போனா. அதுல ஓரளவு வயிறு ரொம்புச்சு.

அப்புடிப்போகும் போதுதான் அவளுக்கும் நல்ல நேரம் பொறந்துச்சு. மொளப்பாறிக்கு கும்மிப் பாடிக்கிட்டு இருக்குறப்ப திருவிழாவுக்கு பாட்டுக்கச்சேரி நடத்த வந்தவங்க இவ பாட்டக் கேட்டுச் சொக்கிப்போய் அவளைக்கூப்புட்டு சினிமாப் பாட்டுப்பாடத்தெரியுமானு கேட்டு இவ பாடுறதைக்கேட்டு மேடையில மொதல்ல வாய்ப்புக்குடுத்தாங்க.

அவ பாடுனதக்கேட்டு ரசிகர்கள் கிராமியப்பாட்டு பாடச்சொல்ல அதுல அவ பாடுன பாட்டு அதுவும் இசைக்கருவிகளோட கேட்டவங்களை சொக்க வைச்சிருச்சு. அதுல சந்தோசமான அந்த அந்த குரூப்பு அவகிட்ட நிரந்தரமா பாட ஒப்பந்தம் பண்ணிக்கிட்டாங்க. நெறையாக் கச்சேரி நல்ல வருமானம்னு வாழ்க்கை மாறிப்போச்சு.

ஊரு ஊரா அவங்களோட பாடப்போனா.

அப்ப திரும்பவும் வந்து இவளைத்தொந்தரவு பண்ணுனாங்க இவளோட புருசன் வீட்டு ஆளுக. கண்டவங்களோட சுத்துறீயே மானம் என்ன ஆகுறதுன்னு திட்டுனாங்க. ஆனா அந்த குரூப்பு பசங்க சொன்னாங்க

'' இவங்க என் அம்மா மாதிரி அம்மா பிள்ளைககூட போறதுல என்ன தப்பிருக்கு. அவங்களுக்கு நல்ல குரல் வளமிருக்கு அதைக்கேட்டு எல்லாரும் சந்தோசப்படுறாங்க. உண்மையச்சொன்னா இவங்களாலதான் எங்க குரூப்பு பேமஸ் ஆகிக்கிட்டு இருக்கு. அவங்கதான் எங்க பலம்னு சொன்னாங்க

அதுக்கு மேல எதுவும் பேசமுடியாம அவங்க போய்ட்டாங்க.

ஆனா அப்பையும் எளவு வீட்டுல வந்து கையோட கூப்புட்டுப்[போயிருவாக

அப்ப குரூப்புல சொல்வாங்க '' ஏம்மா அதுக்குப்போற உனக்கு வேண்டிய பணத்தை நாங்க தாறோம் அதை விட்டுறலாமே'' நு

அதுக்கு அவ சொல்லுவா

'' அது ஒரு பெரிய சேவை எப்படி உசிறோட இருக்குறவங்களைப் பாடி சந்தோசப்படுத்துறமோ அதே மாதிரி செத்தவங்க ஆன்மாவையும் பாடிச்சந்தோசப்படுத்தினா

அவங்க நம்மள ஆசீர்வாதம் பண்ணுவாங்க. அது ஒரு புண்ணிய காரியம். காசு பணம் இன்னிக்கி வரும் போகும். ஆனா அந்த ஆசி எல்லாருக்கும் கெடைக்காது எனக்குக்கெடைக்கும்'' நு சொல்லுவாங்க

அவ சொன்னமாதிரியே அவளுக்கு நல்ல ஒரு வாய்ப்பு வந்துச்ச்சு. அந்த ஊருக்குப் பக்கத்துல ஒரு சேனலோட ஆடிசன் நடந்துச்சு. அங்க அந்த குரூப்புக்காரங்க கூப்புட்டுப்போய் பங்கெடுக்கச்சொன்னாங்க.

இவளும் அங்கபோனா.

அங்க சின்னச் சின்னபசங்கள் எல்லாம் வந்திருந்தாங்க. அவங்க இவளைப்பாத்து கிண்டலும் பண்ணுனாங்க. '' வயசான காலத்துல சுடுகாட்டுக்குப்போற வயசுல சூட்டிங் வந்துருக்குது கெளவி'' நு கிண்டல் பண்ணுனாங்க. அப்ப அவளுக்கு அதே உறுதி வந்துச்சு. இங்க நாம ஜெயிச்சுக்கட்டனும்ற வெறி. அது அவ வாழக்கையப் பொறட்டிப்பொட்டுருச்சு. அவளோட குரல் வளத்தைப்பாத்து டி,வி போட்டிகள்ல சேத்துக்கிட்டாங்க.

அப்ப கிராமியப்பாடல்கள் ல இவளோட சொந்தப்பாட்டப் பாட அதை ஏற்கனவே பிரபலப்பாடகர் பாடினதுக்கும் இவ பாடினதுக்கும் எங்கயோ இருந்துச்சு. இவளோட குரல் உச்சரிப்புல தான் அது மண்வாசத்தோட மனசக் கெறங்க வைக்கிறதா இருந்துச்சு. எல்லாரையும் எழுந்து கைதட்ட வைச்சிச்சி.

அதுக்கப்புறம் கச்சேரிகள்ல அந்தப்பாடல்களைப் பாடச்சொல்லி விரும்பிக்கேட்டாங்க. அது பலபேர் உசிற உருக்குச்சு. அதுக்கப்புறம் இவளோட குரல்ல பாடவைச்சி அந்தப்பாடல்கள் வெளிவந்து சக்கப்போடு போட்டுச்சு. அதுல ஜீவன் இருந்துச்சு.

அவபேர் பட்டி தொட்டியெல்லாம் பரவுச்சு. அப்பையும் அவள சாவு வீட்டுக்குக் கூப்புட்டா தட்டாமப்போயிருவா. அதுக்கு அவ சொல்லுவா அதுதான் பாக்கியம் ஒரு உசிறு போனப்புன்னாடி அந்த ஆத்மா அமைதியடையனும்னா ஒப்பாறி பாடனும். அதுலதான் அது அமைதிஅடையும்னு சொல்லுவா.

ஒரு நா அவங்க ஊரில இருந்து ஒரு எளவுக்கு வந்து கார்ல கூப்புட்டுப்போனாங்க. இன்னாருன்னு கேக்காமலே போனா. ஏன்னா எப்பையும் அதெல்லாம் அவ பாக்குறதில்ல. ஆர் கூப்புட்டாலும் போய்டுவா.

ஆனா அவங்க கூப்புட்டுப்போன எடம் அவளோட புருசன் வீடு. அங்க யார் செத்ததுன்னு கேட்டா அவளோட மூத்தாரோட மகன். அவந்தான் இவளுக்குச்சொத்துபத்து குடுக்காம வெரட்டிவிட்டது. எல்லாரும் என்னா நெனச்சாங்கன்னா இவ அவனுக்குன்னா வரமாட்டான்னு. ஆனா அவ அவனைப்பாத்ததும் நெஞ்சு வெடிச்ச மாதிரி அழுதா. கண்ணீரும் கம்பலையுமா ஒப்பாறி வைச்சா

. அந்த ஒப்பாறில அவ

"நான் வயசுக்கு வந்து வந்து வாக்கப்படாமக் கெடந்தேனே கெடந்தேனே

மவராசன் வந்து எனக்குத்தாலிப்பிச்ச போட்டானே போட்டானேஎனக்குன்னு பிள்ளைக இல்லன்னு போனப்ப ஒன்னத்தானடா பிள்ளையா நெனச்சிருந்தேன்

எனக்குகொள்ளிவைக்க நீ இருக்கன்னு நெனச்சிருந்தேனே நெனச்சிருந்தேனே

இப்ப ஒனக்கு ஒப்பாறி வைக்க வைச்சிட்டீயேடா நான்பெத்த மகனே ராசான்னு "

அப்ப அந்த வீட்டுக்காரவங்க இவகிட்ட செஞ்சதப்புக்கு மன்னிப்புக் கேட்டாங்க. அப்ப இவ சொன்னா " என் பிள்ளையே போய்ட்டான் யாரு யார மன்னிக்கிறது உண்மையச்சொன்னா என்னோட இத்தன வெற்றிக்கும் காரணம் அவன் தான். அவன் என்னை தொறத்துனதுனாலதான் எனக்கு ஜெயிக்கனும் ற வெறி வந்துச்சு அவன் நல்லா வைச்சிருந்தான்னா இந்த குரல் ஒலகத்துக்குக் கேக்காமலே போயிருக்கும் எல்லாம் அவன் செயல்"னா


ஓங்கிக்கொரலெடுத்து ஒப்பாறி வைச்சி அழுகும்போது சுத்தி இருந்தவங்க எல்லாருமே கண்ணீர் அடக்கமுடியாம அழுதாங்க

அவளை யாராலும் தேத்த முடியல... அவ வைச்ச ஒப்பாறி பதினெட்டுப்பட்டிலயும் கேட்டவங்களெல்லாத்தையும் கண்ணீர் விடவைச்சிருச்சு.

வளவ. துரையன்

## புதுவெள்ளம்

பம்பரமும் கோலியும்
பறந்து போய்விட
மூன்று குச்சிகளும்
தென்னைமட்டையும்
ஒரு துணிப்பந்தும் கிரிக்கெட்டாக
கிராமத்துத் தெருக்களில்
கிறுக்கு பிடித்தாடுகின்றன.
கண்ணாமூச்சியும்
கட்டம்போட்டுத் தாண்டலும்
நொண்டி ஆட்டமும்
மறந்த சிறுமிகள்
கைப்பேசியை நோண்டிக்
காணாமல் போகிறார்கள்.
பூம்பூம் மாட்டுக்காரன்
வாசலில் வெகுநேரமாய்
உறுமிக் கொண்டிருப்பது
தெரியாமல் திரைப்பாடலைச்
சத்தமாக அலறவிடும்
கூடத்தில் ஒரு பெட்டி.
கொடுக்காப்புளியும் புளியம்பிஞ்சும்
மரங்களில் வாட ஆப்பிள்
வாசலில் வந்து கூவுகிறது.
என்ன செய்வது?
ஓடிவரும் புதுவெள்ளம்
கவர்ச்சி தந்தால்
ஏற்கத்தானே வேண்டும்?



# பெரியோர்களே தாய்மார்களே

**யாழ்ராகவன்**

நள்ளிரவைத் தாண்டி வேன் அந்த ஊருக்குள் வந்தது.வண்டிக்குள்எல்லோரும் போதை மயக்கத்தில் கிடக்க மாசானம் தான் ஓட்டுநரிடம் இடத்தைத் தேர்வு செய்து இந்த இடத்தில் வண்டியை நிப்பாட்டுங்க என்று சொன்னார்.அந்த வேனில் இருந்த இளைஞர்கள் எல்லோரும் இரவு அருந்திய மது போதையிலும் கஞ்சா போதையிலும்அரை மயக்கத்தில் கிடந்தனர்.

மாசானம் மட்டும் எப்பொழுதும்உள்ளுக்குள் நெருப்பு பிடித்தவனாக பணம் சம்பாதிக்க வேண்டும் என்றவெறி கொண்டவனாக இருந்தான்.

கண்கள் எப்போதும்ஏதோ ஒரு தேடலில் இருப்பதைப் போலவே இருக்கும்.இவர்கள் அந்த ஊருக்குள் வந்த பொழுது பௌர்ணமி அவர்களை வரவேற்றது.வேலையை தவிர அவனை எதுவும் போதையேற்றியது இல்லை.

பசி,தூக்கம், பயணம் எல்லாம் அவனுக்கு பொருட்டே இல்லை.

அதனால் தானோ என்னவே 13வயதில் தூரிகை பிடித்தவனை அது 53 வயதிலும் அவனை ஓட வைத்து கொண்டிருக்கிறது. அவன் மூலம் எத்தனை பேருக்கு வருவாய் எத்தனை பேருக்கு பதவிகிடைத்துள்ளது

சுற்றியிருந்த தெரு நாய்கள் வாஞ்சையோடு ஓடி வந்து எட்டிப் பார்த்து வணக்கம் சொல்லிவிட்டு சென்றது.கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டுதன் கையில் உள்ள அலைபேசியில் அந்த கான்ட்ராக்டருக்குப் போன் பண்ணினான் மாசானம்.

அண்ணே ஊருக்குள்ள வந்துட்டோம் என சன்னமான குரலில் அவன் சொன்னான். எதிர் முனையில் ஹலோ மாசானம் வேலை சுத்தமா இருக்கணும்யா வழக்கம்போல.சரிங்கண்ணேஅந்த ஊரில் வேலை மொத்தம் மூணு வீட்ல. மெயின் ரோட்டில் உள்ளது வேட்டி சட்டவிளம்பரம்ஊர் கடைசியாக தோப்பு வீடுவந்து நகைக்கடை விளம்பரம்

ஊருக்கு நடுவுல உரக்கடைவிளம்பரம் என்ன புரிஞ்சுதா பொருளைப் பார்த்து அளவாய் செலவு செஞ்சு வேலைய முடிச்சு விடுங்க. உன் கூட இருக்கற இளவட்டங்களை கவனித்து வேலைய முடிச்சிட்டு எனக்கு கூப்பிடு. செலவுக்கு காசு இருக்குள்ள என்னப்பா மாசானம் என்று கான்ராக்டர் சொன்னபோதுமாசானம் கான்க்ட்ரை கடவுளாய் ப்பார்த்தான்.

அடுத்த மாதம் முதல்வாரம் வரை தொடுத்து வேலை இருக்குப்பா

கான்ட்ராக்டர் ஒவ்வொரு கடையாக இவர்களுக்கு ஆடர் எடுத்துக் கொடுப்பார் நகை கடை, பெரிய ஜவுளி கடைகள்

பெரிய துணி கம்பெனிகளின் விளம்பரங்கள்

போன்ற நிறுவனங்களின்எல்லாம் எடுத்து மாசானம் வசம் ஒப்படைக்கப்படும்.மாசனம் அவற்றுக்கு வண்ணம் எல்லாம் கலந்துபுதுப்பொலிவோடு ஓவியம் திட்டுவார்.

எழுத்துக்கள் ஆகட்டும் படங்கள் ஆட்டும் ஓவியங்களாகடும்கண் முன்னே நிற்பது போல அற்புதமாக வரைகலை. எல்லாவற்றையும் அழகாக்குவது அவன் கைவண்ணம்சொல்லில் அடங்காத மாய ரூபம். அரை மணி நேரத்தில் வண்டியில் உள்ள பொருள்கள் எல்லாம் இறக்கி வைக்கப்பட்டது.எல்லோரையும் சுறுசுறுப்பாக்கினார் மாசானம்.

ராசு சங்கர்-கணேஷ் மணிகண்டன் விஜய் அட்டாக் குமார் கடா பாண்டி ஆகியோர்மாசானம் கூட இருக்கும் உதவியாளர்கள்.

அவர்களுக்கு வேலையும் வண்ணமும் ஒரு பொருட்டே இல்லை.அன்றைய பொழுதை கடத்த வேண்டும் பணத்தை வாங்க வேண்டும் போதைஅடிக்க வேண்டும்.அதில் ராசு மட்டும் விதிவிலக்கு எப்படிமாசானம் தனது குருநாதரிடம் தொழில் கற்று சிறந்து உயர்ந்து வந்தானோஅந்த நெருப்பில் பாதி ராசுவிடம் இருந்தது.அவன் தான் கண்ணும் கருத்துமாக வேன் செலவு சாப்பாடு ஆட்கள் கூலி வேலை பிரித்தல் எல்லாவற்றையும் சிறப்பாக பார்த்து கொண்டான்.

ராசு டீ கடைக்கு போய் பலகாரமும் காப்பியும்வாங்கிட்டு வந்து வைத்தான்.எல்லோரும்வண்டியில் இருக்கும் கோபால் பல்பொடியில்பல் துலக்கிவிட்டுபலகாரத்தை கடித்துக் கொண்டே காப்பியைக் குடித்துக் கொண்டும்மாசானம் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மூணு பேரும்இந்த இடத்துல செவத்த கரெக்ட் பண்ணி, வச்சிருக்கிற மூன்று கலவை மிக்ஸ் பண்ணி அவுட் பார்டர் போட்டு வைங்க

நான் அந்த இடத்தை பார்த்துட்டு அவங்களுக்கு வேலை சொல்லிட்டு இங்கே வந்துடறேன். தண்ணிய இளக்கமாக விடு பிரச நல்ல எண்ணெய்ல்ல ஊற வைத்து எடு சொல்லிக்கொண்டே வந்தான் ராசுநீ என்கூட வா.ஏல ராசு மச்சக்காரன்டா நீ சாவி உனக்குத்தான் அவரு மகளும் உனக்குத்தான் என்று கேலி பேசுவதை ராசு ரசிக்கவே செய்தான் ஆனால் காட்டிக்க மாட்டான்.சரக்க எடு சரக்க எடு என மாசானம் சொல்வது பெயிண்ட் வாளியை

உங்க மாமா சரக்கு சரக்கு என்று சொல்லும் போதெல்லாம் எனக்குஞாபகம் வேற எங்கேயோ போகுதய்யா என

கடா குமார் சொன்னதற்கு எனக்கு செருப்பு செருப்பு கேக்குது நைட்ல போட்டது இன்னும் தெரியவில்லையா வேலைய பாருயாகடா இது ராசு

ராசுவும் மாகானமும் வேனில் ஏற்றிக்கொண்டு மற்றொரு இடத்தை பார்க்கச் சென்றார்கள்.இப்பொழுது ராசு தயங்கித் தயங்கி மாமாஎப்போ பாத்தாலும் வேலை வேலைனு இருக்கீங்களே உள்ளுக்குள்ள சோகமாகவே நீங்க ஏன் மாமா.ஆனா இந்த வயசுலயும் ஜீன்ஸ் டிசர்ட் போட்டு இளவட்டம் போல எப்படி மாமா. அதுவா பழையகதைய எல்லாம் எதுக்கு கிளறுற இருந்தாலும் இப்ப இருக்கிற இளசுகள மாறி நீ இல்ல அதனால உனக்கு சொல்ல வேண்டி இருக்கு.கமல்ஹாசன் நற்பணி மன்ற தலைவராக இருந்ததெல்லாம் ஒரு காலம் சத்யா படம் வந்தபோது இந்த கெட்அப். அப்படியே அமஞ்ச்சு போச்சு.

ஆறாப்பு வரைக்கும் படிச்சிட்டு அதுக்கு மேல படிக்கிறதுக்கு விருப்பமல்லாமல் வீட்டை விட்டு ஓடி வந்தவன் நான்.ஓவியமா எல்லா நோட்டு பேப்பரிலும்நல்லா வரைவேன்.

வீட்டைவிட்டு ஓடிப்போய் மதுரைக்கு வந்தபோதுஎங்க போறதுன்னு தெரியலை சரவணா ஆர்ட்ஸ் கிளப்இப்படி ஒரு இடத்தில் வந்து நின்றேன் ராஜசேகரன் ஒருத்தரு நல்லா படம் வரைந்து கொண்டிருப்பார்.

அங்க போய் சின்ன ப்பையனா டவுசரை போட்டுட்டு போய் நின்னேன்.

என்னை ஏற இறங்க பார்த்துவிட்டு உனக்கு வரைய தெரியுமா என கேட்டு என் கையில் புரசை கொடுத்தார்ஆரம்பிச்சது இன்னி வரைக்கும் ஓடிக்கொண்டிருக்கிறேன்.வீட்டில் ஒருவனாகவே நான் வளர்ந்தேன்ஆட்களைக் கூட்டி செல்வது கணக்கு பார்ப்பதுமீதமுள்ள பொருட்களை ஒழுங்காக கட்டி வைப்பது என்று நான் பார்த்த வேலைகளைப் பார்த்துஅவர் மகள் என் மேல் காதல் கொண்டாள்.

நான் பலமுறை மறுத்தேன்.இதுல சேகர் அண்ணனுக்கு விருப்பம் தான்ஆனால் அவர் மனைவி என் சாதியை மற்ற விஷயங்களை யோசித்து காட்டு பயலே நம்பி நம்ம பொண்ண க்கொடுக்கலாமா எனக் கடிந்து கொண்டாள் இருந்தாலும் துணிந்து எனக்கு அவர்திருமணம் முடித்து வைத்தார். தலைவர்முன்னிலையில் பிரம்மாண்டமாக திருமணம் நடந்தேறியது. இதுவரைக்கும் மாமியார் மனசுல இருந்து அது மாறவே இல்ல எப்ப பார்த்தால் என்ன சாடை மாடையா கரித்துக் கொட்டிக் கொண்டே இருப்பது வேலையா போச்சு.

வீட்டை விட்டு ஓடி வந்தேன் ஊர்ல சொந்தக்காரங்க யாரும் இல்ல அதனால அந்த அம்மா பேசும்போதெல்லாம் நெஞ்சுக்குள்ள வலித்துக் கொண்டே இருக்கும்.

அப்போதெல்லாம் எனக்கு ஆறுதல் சொன்ன பொண்டாட்டி பிள்ளைகள் பெருசான போது அம்மா பேச்சை கேட்டுக்கிட்டு அவளும்பேய் பிடித்து ராங்கி காரி ஆட்டம் மாறிட்டா.

ரோட்டில் சண்டை போட்டு இருக்கா. பேசி பல வருஷமாகுது வெளியில தான் சாப்பிட்டுகிட்டு இருக்கேன். இருந்தாலும் இரண்டும் பொம்பள பிள்ளை ஆச்சு வாழ்க்கை நிம்மதியில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறதே என சொல்லி மாசானம் பெருமூச்சு விட்டார்.

சேகர் மாமா ஊருக்குள்ள பலபேரிடம் என்னை நல்ல விதமாக அறிமுகம் செய்தார்.அதுவரை இருந்த உறவு மேலும் வலுப்பெற்றது ஓவியம் வரைவது என்வேலை. என்னிடம் ஆர்ட்ஸ் கிளப் பொறுப்புகளை ஒப்படைத்த பின்னர்அவர் அரசியலில் தீவிரமாக இறங்கலானார்.நிறைய ஆடர் பிடித்து வரைந்தேன் வருமானம் கூடியது.

தேர்தல் காலங்களில் உணவு தூக்கம் இல்லாமல் நிறைய அலைந்தோம்.வரைந்தோம்.

அரசியல் தலைவர் படம் என்றால்எனக்கு மிகவும்பிடிக்கும்.அதுவும் கொள்கையின் படி வாழும் தலைவனுக்கு மட்டும் மற்றவருக்கு அல்ல மற்றவர்கள் அழைத்தால் போக மாட்டேன். தலைவர் கட்சி ஆட்கள்மாசானம் வரைந்தால் மிக பொருத்தமாக இருக்கும் என எல்லோரும் சொல்லி என்னை பலவிதமான மாநாடு,பொதுக்கூட்டம், உண்ணாவிரதம்,ஊர்வலம் என்று எது நடந்தாலும் அழைத்துச் சென்று வரைய வைப்பார்கள்.

அந்த காலத்துல எல்லாம் பிளக்ஸ் பேனர் போட்டோ இதெல்லாம் இல்லாத காலம்கையில் வரைந்த ஓவியங்களுக்கு அவ்வளவு மவுசுசினிமா நடிகை நடிகர் படங்கள் ஊர் முழுக்க ஜொலிக்கும்

அரசியல்வாதிகள் படங்கள் அப்படியே அச்சு அசலாக தத்ரூபமாகவரைந்து அதன் மூலமா சம்பாதிச்சுபெரிய அளவில் அரசியல் செல்வாக்கு பெற்றிருந்தார் ராஜசேகர் மாமா..ஒரு குறிப்பிட்ட தலைவரின் படத்தை மட்டும்தான் அவர் அடிக்கடி வரைவார்முகம் பிடிப்பதால் மட்டுமல்ல அவர் கொள்கையும்அவர் பேசுகின்ற பேச்சு வார்த்தை வேறு வாழ்க்கை வேறு என்று நினைக்காத மனம் கொண்ட அவரை பார்த்து தான்வரைந்து வரைந்து தன் வாழ்க்கையை க்கரைந்து கொண்டவர்.

அவர் பெயரைச் சொன்னால் எந்த கட்சி என்று அடையாளம் கண்டுபிடித்து விடுவார்கள் அதனால் பெயர் வேண்டாம்இப்போதைக்கு தலைவர் என்று வைத்துக்கொள்ளலாம்.

நகர்மன்றத் தலைவர்பதவியிலிருந்து வட்டம் மாவட்டம் சதுரம் செவ்வகம் எனபடிப்படியாக வளர்ந்து இரண்டு முறை மந்திரியாகவும் 4 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

ஏதாவது ஊரில் பொதுக்கூட்டம் பேசி முடித்துவிட்டுதலைவர் காரில் செல்லும் போது நாங்கள் நடுரோட்டில் ஓவியம் வரைந்து கொண்டு இருப்போம் மட்ட மத்தியானத்தில் இறங்கி எங்களைப் பார்த்துநலம் விசாரித்து கையில் சில ஆயிரம் கொடுத்து விட்டுச் செல்லும்போது ராஜசேகர் மாமாவுக்கு வானத்தில் பறப்பது போல இருக்கும்.பல மாநாட்டு வேலை செய்வதற்கு தலைவன் பின்னாடியே சென்ற காலங்கள் என் பேரையும் தலைவர் தெரிந்து வைத்திருந்தார்.

எனக்கு ஓவியத்தின் மேலதான் கிறுக்கு மாமனுக்கு தலைவன் பேச்சில் மயக்கம்" பெரியோர்களே தாய்மார்களே ரத்தமே சதையை கொழுப்பே குடலே வயிறு மூளையே" என அடுக்கடுக்காக வசனம் பேசும்போது பேச்சின் மயக்கத்தில் மக்களையெல்லாம் கட்டிப்போடும் வித்தகத்தை கண்டு மாமா சொக்கித் தான் போனார்.

இப்படியாக சிறந்த ஓவியர் சேகர் மாமா தொழிலை விட்டுவிட்டு அரசியல்ஆர்வத்தில் தொண்டர்ளுடன் சேர்ந்துபல்வேறு கூட்டங்களுக்கு ஆள் சேர்ப்பது தண்ணி வாங்கி கொடுப்பதுஎங்கு கூட்டம் நடந்தாலும் சேர் எடுத்து போடுவது என கட்சியாளகவே மாறிவிட்டார். அவரின் நடை உடை பாவனை மாறி விட்டது கட்சி வேட்டிதான் கட்டுவார்.

எதுக்குமாமா நமக்கு இதெல்லாம் என்று ஒருமுறை நான் கேட்டுவிட்டேன்.

நம்மல நாலு பேரு மதிக்கணும்னா நாமகட்சி அரசியலில் இருக்கணும் ஆள்பலம் பண பலம் செல்வாக்கு எல்லாமே இதுல கிடைக்கும்எப்பவுமே நமக்கு கட்சிதேவைப்படும்.மற்ற விஷயங்களை தலைவர் பார்த்து கொள்வார்.

ஒருமுறை தலைவனுக்கு தெரியாமல்அவர் வெளியூர் சென்ற பொழுதுமாற்றுக் கட்சிக்கு படம் வரைய அவர்கள்காலில் விழுந்து கெஞ்சாத குறையாக கேட்டுக்கொண்டதால் இரவு முழுவதும் யாருக்கும் தெரியாமல் படத்தை வரைந்து முடித்தேன் ஆனால் யாரோ மாமாவிடமும் தலைவன் காதிலும்போட்டுவிட்டார்கள்.

தலைவர் மாமாவை தனியா தோட்டத்து வீட்டுக்கு அழைத்து மிரட்டியும் ஆசை வார்த்தை காட்டி கட்சியில் முக்கியமான பொறுப்பை குடுக்கலாம்னு இருக்கேன் இப்ப போய் எதிர்க்கட்சி காரனுக்கு படம் வரையலாமா சேகரு.உன் மாப்பிள்ளை பார்த்து நடந்துக்க சொல்லு என சொல்லி விட்டதும் மாமா என்னை அடித்து துவைத்து விட்டார்.

இனி எதிர்க்கட்சிக்கு படம் போடபோனா நடக்கிறது வேற என சொல்லி ஒருமாதம் என்னிடம் அவர் பேசவில்லை. அப்படியெல்லாம் இருந்த மாமாவை என மாசானம் சொல்ல முடியாமல் கண்ணீர் பொங்க அந்த சம்பவத்தை நினைத்து அழுது விட்டார். வேன் ஊரில் நடுவே நின்றது

சுத்தி முத்தி பார்த்து விட்டு தேர்வு செய்த வீட்டை அடைந்து

அதில் இருந்த தலைவன் படத்தை பார்த்து மீண்டும் அழத்தொடங்கிய

மாசானத்தை கட்டுபடுத்த முடியாமல் ராசு கைத்தாங்கலாக அழைத்து

சென்றான்.

ராசு வேனை மீண்டும் எடுக்கச் சொல்லி வேற இடங்களில் ஒரு முறை பார்த்துவிட்டு பின்னர் இந்த இடத்துக்கு வருவோம்.வேனில் ஏறிய மாசானம் அந்த படத்தை ப்பார்த்து கொண்டே திரும்பினான்.

அன்று மட்டும் அந்த பொதுக்கூட்டத்தில் ஒரு கலவரம் ஏற்படாமல் இருந்தால்தலைவன் பேசியபோது யாரோ ஒருவன் பெட்ரோல் குண்டு வீசாமல் இருந்தால் என்று யோசித்துக் கொண்டே வந்தான் மாசானம்.

எங்கள் தெருவில் நல்ல பேர் எடுக்க வேண்டும் தலைவனின்அன்புக்கு பாத்திரமாக வேண்டும் எனமாமா ஒரு பெரிய பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். நாங்கள்எல்லோரும் சேர்ந்து அதற்கு ராப்பகலாக ஒரு மாத காலம் வேலை பார்த்து படம் வரைந்து தட்டி ஒட்டி பந்தல் போட்டு எல்லா வேலைகளையும் ஓடியாடி செய்தோம்.

தலைவர் காரில் வந்து இறங்கினார் மாநாட்டு பந்தலை பார்வையிட்டு இன்னும் பல விஷயங்களை கூடுதலாக சேர்க்கச் சொல்லிச்சென்றார்.

மாமா இந்த மாநாட்டுக்காக ஏற்கனவே பல இடங்களில் கடன் வாங்கி வைத்திருந்தார்செலவு அதிகமாகவே யோசிக்காமல் நகைகளை விற்று எப்படியும் கட்சிகள் நமக்கு ஒரு இடம் கிடைத்துவிடும் அதற்கானஅச்சாரம் தான் இந்த விழா என்று சொல்லி ஓடி ஆடி வேலை செய்தார்.ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்க்கட்சிகள் இந்த கூட்டத்தை கலைப்பதற்கு பல வேலைகளை செய்து வைத்திருந்தார்கள்.

விழா நாளும் வந்தது தலைவர் பிரமாண்டமாக உரையாற்றினார் அவர் பேச்சு அனல் கக்கும் வீச்சாக இருந்தது. கொள்கையை குவளையில்கரைத்து உடன்பிறப்பின் குடலில் ஏற்றிவிடும் அற்புதத்தை அவர் தனது பேச்சினூடே காட்டினார்.

தேன் மழை பொழிந்தார். யாரோ எரிந்த பெட்ரோல் குண்டு மாமாவின் முதுகில் பட்டு கணநேரத்தில் அது கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது நாங்கள் எல்லோரும் எவ்வளவோ முயன்றும் ஓடியாடி பார்த்தும் அந்த தீயை அணைக்க முடியாமல் தடுமாறினோம். நெருப்பு யாவற்றையும் மிச்சமின்றி எரித்து அழித்து விடும் என்று எங்கோ படித்தது ஞாபகம் அதை கண்முன்னே பார்க்கும் நிலை ஏற்பட்டது.

ஏற்கனவே கடன் அதிகமானதால் குடும்பம் சின்னாபின்னமானது.தலைவன் தான் தன்னைக் காப்பாற்றுவான் என்று நம்பிய மாமாவின் மேல் கட்சிக்கொடி போட்டு மூடி அவரது இறுதி யாத்திரை நடந்தது.

எந்த தலைவனுக்காக உடல் பொருள் ஆவி அத்தனையும் இழந்தாரோ அவன் பேச்சைக் கேட்டு அத்தனையும் தொலைத்தாரோ அந்த

தலைவன் பெரியோர்களே தாய்மார்களே என்ற என்ற குரல் வேறொரு கட்சி மாறி இருந்தது.எப்படித்தான் வேட்டி மாற்றுவது போல கட்சி மாறுவார்கள் தெரியாது. ஒருவனை புகழ்ந்த வாயால் இகழ்வதும் இகழ்ந்த வாயால் புகழ்வதும்அரசியல்சாகசம் போல.

அவன் வீட்டில் சென்று ஏதாவது காசு கேட்கலாம் என்று எல்லோரும் சொன்ன பொழுது என் மனம் ஏனோ அதை ஏற்க மறுத்து விட்டது.

கொள்கையை குழி தோண்டிப் புதைத்த இடத்தில் என்ன நியாயம் கிடைக்கும்பதவிபளபளப்பில்வெல்வெட்டு வாழ்க்கையில் இருக்கும் அவனுக்கு தொண்டனின் நிலைஎன்ன புரிந்து விடப் போகும்அப்போதே முடிவு எடுத்தேன்.

இனி எந்தத் தலைவன் படத்தையும் போடக்கூடாது. பிறகு நாங்கள் அந்த ஊரை விட்டு வந்து விட்டோம்விளம்பரப் படங்களைமட்டும் தான் வரைந்து கொண்டிருக்கிறேன். இனி யாராவது பெரியோர்களே தாய்மார்களே என்று பேசினால் என் மாமாவின் ஞாபகம்தான் வரும் என்னை க்குழி தோண்டி புதைத்து விட்டார்கள்

என மாசானம் சொன்ன பொழுது அந்த வேன் அந்த ஊரின் வேலையை முடித்துவிட்டு அடுத்த ஊருக்கு சென்றது.

கோழி கூவியதும்குஞ்சுகள் பின்னாடி ஓடி வருவது போல அவன் கட்டளைக்கு பம்பரமாகஇளவட்டங்கள் பல பேர் கடமையாற்றினர்.மானசானம் கையில் தூரிகை எடுத்து விட்டான் உணவு,பொழுது,ஓய்வு சோகம் என எதுவுமே தெரியாது.தூரத்தில் ஒலிபெருக்கி முழங்கியது பெரியோர்களே தாய்மார்களே...

# கடல்

சொக்கன் (க.சொக்கலிங்கம்)

கடல் கரையை முத்தமிடுசின்ற இடத்திலே,

கீரிமலைச் சுடலையிலே அந்தச் சடலம் எரிந்து கொண்டிருக்கிறது……

எரிகிறது…… தீக்கொழுந்துகள் வடவைக் கனலாய்க்,

காற்றின் பிடியிலே இருந்து திணறிக்கொண்டு வெளிப்பட்டுக் கடலையே குடித்துவிட முயல்வதுபோல அந்தத் திசையிலே திரும்பிச் சுவாலை கக்குகின்றன.

நீரின் எல்லையிலே நெருப்பு…… நெருப்பின் எல்லை

யிலே நீர்……… மனிதத்துவம் கடலைப்போலப் பொங்கி

ஆர்ப்பரித்துக் கரையிலே மோதி மோதி அடங்கி

அழிந்துபோய்ப் பிணக்கோலத்திலே சிதை ஏறி எரிந்து

போகிறது என்பதற்கு நிதர்சன விளக்கம்!

தொடுவானத்திலே நெருப்புக்கோளம் ஒன்று தண்ணீரினுள்ளே அமுங்கிக்கொண்டிருக்கிறது. சிதறிப்போன சிறுச்சிறு சுடர்கள் நீலவானத்தை எரித்து, ஜுவாலை கிளப்பிக் கடலிலே பிரதிவிம்பித்துப் பொன் வண்ணம் காட்டுகின்றன.

சனசந்தடி அடங்கிப்போன ஏகாந்தப் பெருவெளியிலே,. சுடலைக்கு நூறுயார் தூரத்திலே தென்னந்தோப்புக்குள் நின்றுகொண்டு சிதையை வைத்தகண் வாங்காது பார்க்கிறேன்.

அவன் எரிகிறான்…… அவனா? அதுவா? அவனாக

இருந்த அதுவா? அல்லது அவனும், 'அவன்'

என்று சுட்டுதற்குக் காரணமான அதுவும்

இரண்டுமே நெருப்போடு நெருப்பாய், சாம்பரோடு சாம்பராய்………

சிரிக்கிறேன்……… முன்பொருகால் எரிகின்ற சிதையின் முன்னால் நின்றுகொண்டு அவன் செய்த தத்துவ

விசாரத்தைத்தான் நானும் செய்வதாகப் பாவனை

பண்ணுகிறேனோ?



அவன் பேசுகிறான்......

"ஆழம் நிறைந்த இந்தக் கடலிலே ஒரு குமிழியாக மிதத்து எட்டமுடியாத கனவுலோகங்களையெல்லாம் நான் கண்டுவரப் போகிறேன். அலைகளிலே ஊஞ்சல் ஆடுவதுபோல அங்கும், இங்கும் ஆடிக்

சொண்டு முடிவேயில்லாமல் மேலே மேலே சென்று கொண்டிருக்கப் போகிறேன். அஹா! அது எவ்வளவு

நல்ல காட்சியாய் இருக்கும்!!"

ஆ...அதோ.... அந்த நெருப்பிலேயிருந்து ஓர்

அம்பு போலக் கிளம்பி, கடலுக்குள்ளே பாய்ந்து

நீரைக் கிழித்துக்கொண்டு அவன் போகிறான்...... நீத்துகிறான்

..... சுழி ஓடுகிறான்......

என்ன? மனப்பிராந்தியா? அல்லது உண்மையாகவே அவன்...

கிள்ளிப் பார்த்துக்கொண்டு நிமிர்கிறேன். கால்கள்

தள்ளாடுகின்றன. பீதி கண்களில் சுழல்கிறது. உடம்பே

குடங்கிப்போய் இல்லை என்று ஆகி விடுவதுபோல...

நிற்கிறேன். காற்றிலே சரிந்து தள்ளாடுவது

போலச் சரிந்து வெடவெடவென்று நடுங்கியபடி தடுமாறிக்கொண்டு நிற்கிறேன்.

மனக்கடலிலே நினைவுகள் குமிழியிடுகின்றன.

நெஞ்சை நிமிர்த்தியபடி போர்வீரன் ஒருவனுடைய

கம்பீரத்துடன் அவன் முன்னால் சென்று கொண்டிருக்கறான். சதை கொழுவிய அவனது கால்கள் மணலினுள்ளே சதக், சதக்கென்று ஆழ்ந்து, பிறகு வெளியேறுவது பார்க்க வேடிக்கையாக இருக்கிறது. சிரித்துக்

கொண்டே பின்தொடர்கிறேன்.

அவனுடைய பிடரி மயிர் சிங்கத்தினது போலச்

சிலிர்த்துக் கொண்டு நிற்கிறது. கருங்காலியிலே செதுக்கிய உடலும், உடுக்குப்போன்று சிறுத்த இடையும்,

இராஜநாகத்தின் படத்தைப் போல அகன்ற மார்பும்,

ஆடுகின்ற குதிரைச் சதையும்.......

"கணேசா! நீ அபூர்வப் பிறவியடா "?" என்று

அந்தச் சிறிய வயதிலே என்னைச் சொல்ல வைக்கவில்லை

என்பது உண்மையே, ஆனால் அவனிலே பயம், மதிப்பு,

பாசம் என்ற அத்தனையும் கலந்த ஒருவகை அன்பைச்

செலுத்தினேன் என்பதை மறுக்கமுடியாது

இரண்டு பேருக்கும் கிட்டத்தட்ட ஒரேவயது,. பத்துக்

கும், பதினொன்றிற்கும் இடையிலே இருக்கலாம்.

★ சதக்... சதக்" அவன் மணலைக் ஒழித்துக் கொண்டு

போகிறான்... நான் பின் தொடர்கிறேன்?

திடீரென்று நின்றவன் கையிலே வைத்திருந்த புத்தகத்தைச் சுழற்றிக் கடலிலே வீசுகிறான். அது காற்றிலே

இதழ்விரித்து ஒரு வெள்ளைத் தாமரைப் பூப்போல

மிதக்கிறது.

கலகலவென்று சிரிக்கிறான். நான் நடுங்குகிறேன்.

"டேய்! கணேசா! பள்ளிப் புத்தகமடா. எறிந்து

விட்டாயே! உன் ஐயா அடிப்பாரேயடா!""? பயந்து

பயந்துதான் இப்படிச் சொல்கிறேன்.

"அப்படியா? அடிக்கட்டுமே! எனக்குப் பயமா?

இன்று பள்ளிக்கூடம் போகாமல் கடற்கரைக்கு வந்தேன்.

அடித்தாரோ? அவ்வளவுதான்! ஒவ்வொருநாளும்

ஒளித்தொளித்து இங்கே வருவேன். மிஞ்சினால் கடலுக்கே

என்னைக் கொடுது விடுவேன். அதுதான் என் அம்மா!"

கடைசி வார்த்தைகளைச் சொல்லும்போது உலகத்தின் பாசம், கனிவெல்லாம் அவனது கண்களிலே தேங்கி

நிற்க அவன் கடலையே வெறித்து நோக்குகிறான். அத்த

விழிகளிலே வெட்டி வெட்டி ஒளிவீசும் மின்னற்கீற்று

என் கண்களைக் கூச வைக்கிறது. குத்தி இழுக்கன்ற

அந்தக் குத்தீட்டி நாசியையும், தடித்துப் பருத்த உதடு

களையும் உற்றுநோக்குகையில், எனக்கு வாய் அடைத்துப் போகிறது.

அவன் வழி நடத்தவும், நான் மறுபேச்சின்றி அவனைப் பின்பற்றவும் என்றே கடவுளால் படைக்கப்பட்டிருகிறன், என்று நினைக்காதிருக்க என்னால் கூடவில்லை,

இத்த உணர்ச்சி உண்டானதும், எனது புத்தகங்களை

மணலிலே புதைத்து அதற்கு மேல் கல் ஒன்றை அடையாளம் வைத்துவிட்டு அவனுக்குப் பின்னால் போகிறேன்... போய்க்கொண்டே இருக்கிறேன்.

"சதக், சதக்?" கால்கள் மணலிலே தாழ்ந்து

மிதந்து செல்கின்றன. சிறிது நேரத்தில் கரை ஒடுங்கிப்

போகத் தண்ணீரில் இறங்கி நடக்கிறோம். தண்ணீர்

பட்டுப்பட்டுத் தேய்ந்துபோய் வழுக்கை பற்றிய கற்களிலே இலாவகமாக அவன் நடந்து சென்றபொழுது,அவனைத் தொடர்ந்து செல்வது சற்றுக் கடினமாகவே இருக்கிறது.

"கடத்த இரவு ஒரு கனவு கண்டேன். கதாகால

ஷேபத்தில், விஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றிப்

பாகவதர் சொன்னாரே? அந்த அவதாரங்களைப்

போலவே நானும் பல பிறவிகளை எடுப்பது போல

இருந்தது. எனக்கு முன்னால் எல்லையில்லாத கடல்

விரித்து கிடப்பது போலவும், நான் திடீர் என்று மீனாகவும், நண்டாகவும், சுறாவாகவும், திமிங்கிலமாகவும்

மாறி மாறி அதிலே மிதந்து செல்வது போலவும்,

தோற்றங்கள் உண்டாயின."

"இதிலே ஒரு விசேடத்தைப் பார்த்தாயா? வேறு

வேறான எனது பிறவிகளெல்லாம் கடலிலேயே

உண்டாகின்றன. இதிலிருந்து என்ன தெரிகிறது? நான்

இந்த மண்ணிற்கு உரியவன் அல்லவென்றும், கடல்தான்

எனக்கு உரியதென்றும் தோற்றவில்லையா? "

சில மணித்தியாலங்களுக்கு முன்னால் வரும் வழியிலே அவன் சொன்னவை எல்லாம் என் மனத்திலே எதிரொலிக்கின்றன. இதெல்லாம் என்ன? இப்படி

யெல்லாம் இவன் ஏன் பேசுகின்றான்?

என்னுடைய சின்னஞ்சிறிய மூளைக்கு ஒன்றுமே

விளங்கவில்லை; விளங்கவேயில்லை. கண்ணைக்கட்டிக்

காட்டிலே விட்டதுபோல இருக்கிறது. ஆனால்,.....

வழிநடத்துவது அவன் பொறுப்பு. பின் செல்வது

என் கடமை.

நெளிந்தும் வளைந்தும் சுழியிட்டுப் புதுப்புதுக்

கோலங்களைக் காட்டி, உடனுக்குடன் அழித்து...

தண்ணீர் விலகி வழி விடுகிறது.

போய்க்கொண்டே இருக்கிறோம்.

சுடலை வந்துவிட்டது. நேரம் மத்தியானம் பன்னிரண்டுமணி. எனக்குத் திக்கென்றது. நெஞ்சின் அடிப்பே நின்றுவிட்டதுபோல இருக்கிறது.

மத்தியான வேளையிலே சுடலையில் பேய் உலாவுமாமே? பயத்திலே காலும் ஓடவில்லை! கையும் ஓடவில்லை!

"டேய்!" கணேசன் வந்து தோளிலே தட்டி ஆதரவோடு கூட்டிக்கொண்டு போய்ச் சுடலை மத்தியிலே இருத்துகிறான்,

அப்பொழுதுதான் சுடலையிலே பிணம் ஒன்று எரிந்து

முடிந்து நீறுபூத்துக் கடக்கிறது. அவன் ஓடிச்சென்று,

தன் மாமாவின் கடையிலே களவெடுத்து வத்த சுருட்

டொன்றை அதிலே பற்றிக்கொண்டு வருகிறான். சுருட்டுக்கும் வாய்க்குமாகப் புகை முக்குளிக்கறது.

"அடப் பாவிப் பயலே! என்னடா செய்கிறாய்?

நீ பேயா பிசாசா?" என்று கத்தவேண்டும் என்று

நினைக்கிறேன். வாயையுந் திறந்துவிட்டேன். சப்தம்

வெளிப்பட்டால்தானே? நாக்கு அண்ணத்தில் ஒட்டிக்

கொள்கிறது.

சுடலைப் பக்கத்திலே சிதறிக் கடத்த எலும்புகளைச்

சேகரித்தும், கீழே கடந்த இளநீர்க் குரும்பைகளை

எடுத்

துப் பக்கத்திலே உள்ள கிணற்றிலே எறிந்தும் அவன்

தன்னை மறந்த லயத்திலே ஆடிக் களிக்கையில்......

நான் விக்கித்துப்போய் பிணத்தோடு பிணமாய்க்

கிறங்கிய நிலையில் சுடலை மடத்திலே அமர்ந்திருக்கிறேன்,

"டேய்! கோழை! ஏனடா பயப்படுகிறாய்? ஒரு

நாளைக்கு நாங்களும் இப்படித்தானே? வாடா,"

சுருட்டை வீசிவிட்டுக் காறி உமிழ்ந்த வண்ணம்

அவன் என்னை அழைக்கிறான். நான் எழுத்து அவனைத்

தொடர்கிறேன்.

தண்ணீரிலும் கரையிலுமாக மாறிமாறி நடந்து

செல்கிறோம்.

பாறைகள் தெரிகின்றன. முடவனைப்போலும்,

நொண்டியைப்போலும் முண்டு, மூடிச்சுக்களோடு அவை

சர்வ அவலட்சணங்களாய்க் காட்சி தருகின்றன. கன்னங் கரிய பேய்க் கூட்டங்கள் தங்கள் விழிக்குகைகளின் மூலம் என்னை முறைத்துப் பார்ப்பதுபோல இருக்கறது.

ஆங்காங்கு மணலிலே பாம்புகளும், நண்டுகளும்

ஊர்ந்தூர்ந்து சென்ற சுவடுகள்,,....

"இனி என்றைக்குமே இவனோடு வரக்கூடாது;

பள்ளிக்கூடத்துக்குக் கள்ளம் போடக்கூடாது. கடவுளே! இத்த ஒரு முறை மாத்திரம் என்னைக் காப்பாற்றிவிடு''' என்று பயத்தினால் பேரிகைபோல அதிர்த்துகொண்டிருக்கும் நெஞ்சு, கடவுளை நினைத்து ஓலமிட்டுக்

கதறுகையில்......

கணேசன், கயிற்றை அறுத்துவிட்ட கன்றுக்குட்டி

போலப் பாறையிலும், கற்களிலும் குதித்துக் குதித்து

ஓடுகிறான்; மேலே மேலே ஏறிக் குன்றின் உச்சிக்கே

போய்விடுகிறான்.

இனிப் பயப்படக்கூட இயக்கம் இல்லாதவனாய்

அவனை நோக்குகிறேன்.

" எடேய்! மூர்த்தி! பாரடா. இந்தப் பாறையிலிருந்து குதித்துத் தண்ணீரிலே நீந்திக்கொண்டேபோய்,அதோ அந்த ஆகாயத்தை எட்டிப் பிடிக்க வேண்டும்

என்று ஆசையாய் இருக்கிறதடா. பின்னேரங்களில்

அங்கே சூரியன் வந்தால் அதைத் தொட்டுப் பார்த்து

ஆனந்தப்படவேண்டும்போல இருக்கிறதடா. ஆகாயம்

நான் கட்டியிருக்கும் வேட்டிபோல இருந்தால் அதைக் கிழித்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்து

வந்து உனக்குச் சொல்லுவேன்.""

ஒரு கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, மறு

கையைத் தொடுவானத்திற்கு எதிராக நீட்டி அவன்

அந்தப் பாறையின் உச்சியிலே நிற்கையில், பயத்தால்

அடைபட்டுப்போன என் காதுகள் கூடத் திறந்து கொள்கின்றன. அந்த வயதிலே, அந்தச் சூழ்நிலையிலே, அவன்

சொன்னதை நம்பத்தான் வேண்டும் போல எனக்குத்

தோற்றுகிறது. திறத்த வாய் மூடாது அவசமாகி

அவனையே பார்த்து நிற்கிறேன்.

ஆ. இது என்ன? கால்களினூடாக ஏதோ

நொளு நொளுவென்று...... ★★ஐயோ பாம்...."★

கணேசன் பாறை உச்சியிலேயிருந்து பட பட

வென்று குதித்து ஓடி வருகிறான். கல்லைத் தூக்கி ஒடுகிற பாம்பின் தலையிலே ஒரே போடு.....! பாம்பு வாயைப் பிளந்து விடுகிறது.

அதைத் தூக்கிச் சுழற்றியபடி அவன் என்னைத்

துரத்திக் கொண்டு ஓடிவந்தபொழுது...... அதற்கு உயிர்

இல்லை என்று தெரிந்துகொண்டும், உயிரைக் கையிலே

பிடித்துக்கொண்டு ஒடுகிறேன்...... அப்படி ஓடுகிறேன்

நான் களைத்துச் சோர்ந்துபோய்க் கீழே சரிகையில்,

அவனுக்கு அநுதாபம் ஏற்பட்டுவிடுகறதுபோலும்!

பாம்பை எறிந்துவிட்டு எனக்கருகிலே வந்து என்னை

அணைத்துக் கொள்கிறான். "பயப்படாதே" என்று

ஆறுதல் சொல்கிறான்.

திரும்பி நடக்கிறோம்.

வழியிலே கடந்த பலவர்ண இறால் ஓடுகள், கிளிஞ்சல்கள், இராவணன்மீசை என்று பலதும் பத்தும் அவனுடைய மடித்துக்கட்டிய வேட்டியைச் சரண் அடைகின்றன.

"பைத்தியக்காரா! ஏன்டா இந்தக் குப்பைகளை

யெல்லாம் சேகரிக்கிறாய்?" என்று அவனைக் கேட்கலாமா என்று ஒருகணம் யோசித்துப் பிறகு மௌனமாகிறேன். கேட்டுத்தான் என்ன பயன்? தன் முட்டாள் தனத்தை விட்டுவிடப் போகிறானா?

"இவை கடல் அன்னை எனக்குத் தந்த அன்புப் பரிசில்களடா" என்று

சொல்லிப் பெருமைப்பட்டு இன்னும் இன்னும் பொறுக்கிச் சேகரிப்பான்.

என்ன பந்தமோ? என்ன பாசமோ?

அவனைப் பின் தொடர்கிறேன்.

கடலிலே கணேசன் இறங்குகிறான் என்றால், அவனுக்குக் குஷி பிறந்துவிட்டது என்பதுதான் அதற்குஅர்த்தம்.

வேட்டியை அவிழ்த்து வைத்துவிட்டு முழு நிர்வாண

மாகச் கடலிலே குதித்துக் குதித்துச் செல்கிறான்,

கருமீனைப்போல, யந்திரப் படகைப்போல நீரைக்

கிழித்துக் கொண்டு......

குரும்பையாகத் தெரிந்த தலை பனங்காய் அளவாக

விளாங்காய்ப் பரிமாணத்திற்குச் சிறுத்து எலுமிச்சம்

காயளவு குறுகி......

கண்ணிற்கு மறைந்து விடுறது.

வருவானா? மாட்டானா?

தனிமையின் பயங்கரத்திலேலே அமிழ்த்துபோய்க்

குழந்தைபோல விக்கி விக்கக் குமுறிக் குமுறி அழுகிறேன்.

கடல்போல நெஞ்சு குமுறுகிறது, ஆர்ப்பரிக்கிறது.

அழுகிறது, விம்முகிறது.

என்ன செய்வேன்?

"என்னடா பயம்? மடையா! கடல் எனக்குத்தாயடா. அவள் ஒரு போதும் என்னை அழிக்க மாட்டாள். அழாதே வா, போவோம்."'.

அவசரம், அவசரமாக வேட்டியைக் கட்டியபடி

அவன் இவ்வாறு சொல்கிறான். துடைக்கப்படாத அவ

னுடைய பிடரியிலிருந்து முத்து முத்தாக நீர்சிந்துகிறது.

நடக்கிறோம்;

கணேசன் தன் பேச்சைத் தொடர்கிறான்.

"வாத்தியார், நீரரமகளிரின் கதையைச் சொன்னதிலிருந்து,

நானும் அந்தச் சாதியார்போல இந்தக் கடலினுள்ளேயே

வாழவேண்டும் என்று நினைக்கிறேன். அதற்காக என்

உயிரையும் இழக்கத் தயங்க மாட்டேன். மண்ணிலே

இருப்பதில் எனக்கு மகிழ்ச்சியில்லை,"

சில சமயங்களில் அரைகுறையாகக் கண்ணை மூடிக்

கொண்டு "நான் கனவு காணும்பொழுது கடல் தாய்

"மகனே! வா" என்று அழைப்பது போல எனக்குத்

தோற்றுவதுண்டு. இது எதில் போய் முடியுமோ?

நான் அறியேன். "

அறுபது வயதுக் கிழவனைப் போலக் கண்கள் கிறங்க

நடுங்க, நடுங்கி அவன் இப்படியெல்லாம் சொன்ன

பொழுது...

எனக்கு அவனைப் புரிவது போலவும் இருக்கறது,

புரியாதது போலவும் இருக்கறது.

கடற்கரையிலே ஓவென்று இரைந்து கொண்டு

சுழன்றடிக்கும் காற்றை வாயைத் திறந்து நிரப்பியபின்,

வாயை மூடினால் ஒன்றுமே வாய்க்குள் இல்லாத உணர்ச்சி

ஏற்படுகிறதல்லவா அதுபோலத்தான் இந்தச் சந்தேகமும், தெளிவும் என் நெஞ்சை நிரப்பியும் வெறுமையாக்கியும் விளையாடுகின்றன.

நாள்கள் உருண்டோடுகின்றன.

இது நாள் வரை ஓலையால் வேயப்பட்டிருந்த

சுடலை

மடம் ஓடுகள் பெற்றுப் புதுமையிலே மினுமினுச்கிறது.;

அதற்குச் சிறிது தூரத்திலே இருந்த வீரசைவரது சமாதி

களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து ஐந்தாகக் கூடுகின்றன? மண்ணைத் தழுவிவிட்டு மீண்டு செல்லும் அலைகளைப் போலப் பிறப்பும், மரணமும் ஒன்றை ஒன்று தழுவி முயங்குகின்றன.

ஏகாந்த நிசாசரப் பெருவெளியாய் இருந்த கடற்

கரையிலே அந்தியேட்டி மடமும், சில புதுக் கட்டடங்

களும் புதுமையின் மெருகு குறையாது கம்பீரமாக

நிமிர்ந்து நிற்கின்றன.

பன்னிரண்டு வருடங்கள்

நானும், கணேசனும் வளர்ந்து வாலிபராகிவிடுகிறோம். சௌந்தர்ய மூர்த்தியாக, புருஷத்துவத்தின் உன்னத இலட்சியமாக நிமிர்ந்து நின்ற கணேச விருட்சத்தின் பக்கத்திலே, ஒரு சிறு முருங்கை மரமாக

நானும் நிற்கிறேன். இன்னமும் என் வரையிலே அவன்

ஒரு வழிகாட்டிதான்.

அவனை நான் நேசிக்கிறேன். அவனுடைய ஏளனங்கள், பரிகாசங்கள் என்ற அனைத்தையுந் தாண்டி, எனது பாசக்கொடி அவனைச் சுற்றிப் படர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

எந்தக் கூட்டத்திலும் அவனுக்குத்தான் தலைமை,

யாரும் அவனை மதிக்காமல் இருக்க முடியாது,

அவனுடைய கிண்டல்களும், கேலிகளும் சந்திரக்

கதிர்கள் போலத் தண்மையாக இருப்பதில்லை. அவை

காய்கதிர்ச் செல்வனின் கதிர்களுக்கு எவ்வகையிலும்

குறையாத வெம்மை பொருந்தியவை,

அவனுடைய கேலிகள் ஈட்டிகளாய் வந்து பாயும்

பொழுதும், அசடுவழியச் சிரிக்கலாமேயொழிய எதிர்த்துப் போர்க்கொடி தூக்க என்றைக்குமே முடியாது;

அத்துணை சக்தி பொருந்தியவை அவை.

சில வேளைகளில் நண்பர்களோடு வம்பளந்தபடி.

கடற்கரையிலே இருப்பான், நான் சிறிது தாமதித்து

அங்குப் போனாலோ தொலைந்தது. மற்றவர்களைத்

தூண்டிவிட்டு, என்னை அலட்சியம் பண்ணச் செய்து,

சம்பாஷணையிலே கலக்கவிடாமலே அலைக்கழிப்பான்,

அவனும் நண்பர்களும் தங்கள் பாட்டிலே பேசிக்

கொண்டிருப்பார்கள். நான் என்ன சொன்னாலும் யாரிட

மிருத்தும் பதில்வராது. இப்படிச் சில நிமிஷங்களல்ல,

பல மணித்தியாலங்களுக்குக்கூட நான் அலட்சியப்படுத்

குப்படுவதும் உண்டு.

ஆனால், அதற்காக அவனை வெறுப்பது மாத்திரம்

என்னால் முடிவதில்லை. அவ்வளவு ஆழமாக அவன் தனது

புருஷத்துவத்தை என் நெஞ்சிலே ஆழப் பதித்திருந்தான்.

கடல்மீது அவன் கொண்டிருந்ந அன்பு வெறியோ

காலப்போக்கில் அவன் அளவையும் கடந்து விசுவரூப

மெடுத்து அவனைத் தன்னுள் ஆக்கரமிக்கலாயிற்று.

பல்கலைக் கழகக் கல்வியும், தத்துவ சாஸ்திரத்திலே

பெற்ற சிறப்புப்பட்டமும் நெய்யாக அவனது பாசாக்

கினியைக் கொழுந்துவிட்டெரியத்தான் வைக்கின்றன.

கடற்கரைக் கிளிஞ்சல்கள் நிறைந்திருந்த அவன்

அறையிலே, அலமாரிகள் பொங்கி வழியுமளவுக்குக்

கடல்பற்றிய ஆராய்ச்சி நூல்களும், கட்டுரைகளும்,

துண்டுப் பிரசுரங்களும் அடைந்து கிடக்கின்றன.

கல்லூரி விட்டதும் ஓடோடி வருவான். மீதிப்

பொழுதெல்லாம் சமுத்திர ஸ்நானத்திலும், கடலையே

பார்த்திருக்கும் சிந்தனையிலும் கழியும். அது ஒரு

யோகம்! எந்தச் சக்தியாலும் கலைக்க முடியாத ஏகாக்

கிர சித்தயோகம்!

அடிவானமும், செங்கதிரும் பின்னிப்பிணைந்து

கலந்து

உறவாடும். கடலிலே குருதிச் செம்மையை நிழலாக

விழுத்தி, அதைத் தழுவிச் சிலிர்ப்பான் வெய்யோன்.

சிறிது பொழுதில் வானத்திலே நட்சத்திரப்பூக்கள்

பூத்துக் குலுங்கும். சந்திரப் பாற்குடம் கவிழ்க்கப்பட்டு

அதிலிருந்து ஒளியமுதத்துளிகள் உலகின்மீது தெளிக்கப்

பட்டிருக்கும், கடலே வெள்ளியாய் உருகி வழியும்;

இந்தக் காட்சிகளிலே அத்துவிதமாகி, மெய்ம் மறந்துபோய் அவன் கடற்கரையிலேயே வீழ்ந்து கிடப்பான். கனவுகள் செறிந்த விழியும், கற்பனை பொதிந்த நெஞ்சும், கவித்துவம் நிறைந்த சிந்தையும் அவனிலிருந்து

அவனைத்தட்டி எழுப்பி விழிப்பு நிலையில் வைக்கையில்......

அவன் என்னவெல்லாமோ புலம்புவான். " உலகின்

தோற்றமூலம் தண்ணீர் தான்" என்று கிரேக்க தத்துவ

ஞானத் தந்தையாகிய தேல்ஸ் கூறியிருக்கிறார். உலகின்

சராசரப் பொருளெல்லாம் நீரிலேயிருந்ததே தோன்றி

யிருக்குமாயின் நானும் நீரின் ஓர் அம்சந்தானே? உங்

கள் எல்லாரிலும் அதிக அளவிலே நீரின் தன்மை என்

னில் அமைத்திருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தச்

கடலிலே எனக்கு இத்தனை பாசம் ஏன்? எந்தவோ

ஒரு காலத்தில் சமுத்திர புத்திரனாக நான் வாழ்த்திருக்

கிறேன் என்று சொன்னால் அது உனக்குப் பைத்திய

காரத் தனமாகத் தெரியலாம். ஆனால், அதுதான்

உண்மை,"

"நான் விஞ்ஞானம் படித்தவன். குருட்டுத்தனமான

எண்ணங்களில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும்

கடலோடு எனக்குள்ள சம்பந்தத்தைக் குருட்டு நம்பிக்கை

என்று என்னால் தள்ளமுடியவில்லை.'' -

"இந்த வெள்ளலைக் கரங்கள் எனது உடலை வளைத்துகொண்டே இருக்க என் கடைசி மூச்சு என்னை விட்டு

நீங்குமானால்...... நான் உண்மையிலே பெரும் பாக்கிய

சாலிதான்."

" எப்படிப்பட்ட பிள்ள? எத்தகைய அறிவாளி!

இவனுக்கா இந்த நிலை? கணேசனுக்குப் பைத்தியம்

பிடித்து விட்டதாமே! 'என் தாயிடம் போகிறேன்

விடுங்கள், விடுங்கள்' என்று கத்திக்கொண்டு கடலை தோக்கி ஓடுகிறானாமே?" ஊரெல்லாம் அவனைப் பற்றி அநுதாபத்தோடு பேசிக்கொள்கிறது.

பெற்ற வயிற்றைப் பிசைந்துகொண்டு அவனுடைய

விதவைத் தாய் செய்யாத வைத்தியமே இல்லை.

பைத்தியம் என்றாலல்லவா தெளிவதற்கு?

அது ஒரு வெறி. தாயின் முலையிலே பாலைக் குடித்தபடி, அவளின் மடியிலேயே சயவனிக்கத் துடிக்கும் குழந்தையின் வெறி.

அது அடங்கவே மாட்டாது!

விலங்கு அறுகிறது: அவன் ஒடுகிறான். கையை விரித்த

படி, கடல் அன்னையை அணைத்துக் கொண்டு அவன் மேலே மேலே போகிறான்.....

குரும்பையாய்த் தெரிந்த தலை, பனங்காய் அளவாக,

விளாங்காய் பரிமாணத்திற்குச் சிறுத்து, எலுமிச்சங்காய்

அளவிற்குக் குறுக......

கண்ணீர்க்குள் மறைந்து விடுகிறது.....

நிரந்தரமாக.....

நெருப்பு அணைகிறது.

அவனில் அது செத்து அவன் எஞ்சி,.....


கடல் கோஷிக்கிறது]

கொலை வெறியா?

இல்லை......

குழந்தையைத் தழுவி அணைத்த ஆனந்த வெறி.

*நன்றி: தினகரன் 1962-9-23*



# ஈழத்துச் சிறுகதைகளில் சமுதாயச் சித்தரிப்பும் பேச்சுமொழி வழக்கும்

முனைவர் சு.சோமசுந்தரி, ஆய்வறிஞர், மதுரை

ஈழத்துச் சிறுகதைகள் பலவும் சமுதாயச் சீர்கேடுகளைத் தோலுரித்துக் காட்டுவனவாகவும் புனைகதை வரலாற்றில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைப் பேசுவதாகவும் அமைந்துள்ளன. இலங்கையின் பேச்சுமொழியை வெளிப்படுத்தும் இலக்கியங்களாகச் சிறுகதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் ஈழத்துச் சிறுகதைகளின் பொருண்மையை ஆய்வதும் மொழிநடையின் சிறப்பினை ஆய்வதும் இங்கு தேவையாகிறது.

## சமுதாயச் சித்தரிப்பு

தமிழ்ச் சமுதாயத்திலுள்ள பண்பாட்டுச் சிதைவு, இனக்கலவரம் ஈழத்துச் சிறுகதைகளில் மிகுதியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. மாத்தளை செல்வராஜாவின் 'ஒரு உயிர் பாதுகாக்கப்படுகின்றது' என்ற சிறுகதையில் இனக்கலவரத்தால் தமிழர்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் பதிவு செய்துள்ளார். 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தால் மாத்தளையில் வாழும் மலையக மக்கள் தங்குவதற்கு இடமில்லாமல் முதியோர்கள், தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் படும் அவலநிலையைப் பதிவு செய்கிறார்.

"அப்பா இவன்கள் ரவுடிப்பசங்க. இனத்துவேசம் புடிச்சவனுங்க. பாவம் புண்ணியமெல்லாம் பாக்கமாட்டானுங்க. சின்னப் புள்ளைங்களோட என்னால் இங்க இருக்கமுடியாது. கலாவதியும் வயித்துப்புள்ளக்காரி. இன்னைக்கு நாளைக்குன்னு இருக்கு" (கீற்று:இணையதளம்)

என்று மலையக மக்களின் துயரங்கள் இக்கதையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. நீர்கொழும்பு முத்துலிங்கம் அவர்களின் 'ஒரு மகன் தன் தாயைத் தேடுகிறான்' என்ற சிறுகதை இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது தங்களது உடமைகள், உறவினர்கள் எல்லாவற்றையும் இழந்த ஐம்பது வயது தாயும் மனநோயால் பாதிக்கப்பட்ட மகனும் படும் அவலங்களைச் சுட்டுகிறது. தாய் தோட்டத்து வேலைக்கோ, பங்களாவில் வேலைக்கோ சென்று ஏழு மணிக்கு வீட்டுக்கு வருகிறாள். மகன் வீதிகளில் அலைந்து எங்கட அம்மாவக் கண்டீங்களா? என எல்லோரையும் கேட்டுக்கொண்டு திரிகிறான். இரவு வீட்டிற்கு வந்து சோகத்துடன் இருக்கும் அவள்s, ஒரு நாள் மகன் புகையிரத வண்டியில் சிக்கி இறந்துபோக, தாய் மனம் பேதலித்து எங்கட மகனக் கண்டீங்களா? என்று கேட்டுக்கொண்டு வீதிகளில் திரிவதாகக் கதை முடிகிறது.

இப்படியாக இலங்கைச் சிறுகதைகள் பலவும் தமிழர்கள் இனக்கலவரத்தால் தங்களது உடமைகள் இழந்து, உறவினர்கள் இழந்து, பெண்கள் பாதுகாப்பின்றி இருந்ததையும் அவர்களது வாழ்வின் பல்வேறு துயரங்களையும் வெளிக்காட்டுகிறது. இவ்வாறாக சமுதாயச் சித்தரிப்புகள் ஈழத்துச் சிறுகதைகளில் பேசப்பட்டு உலகளவில் இலங்கைத் தமிழர்களின் நிலையை அறிய வழிவகுத்தன.

## பண்பாட்டுச் சிதைவு

ஈழத்துச் சிறுகதைகள் பலவும் தமிழ்ப் பண்பாட்டுச் சிதைவுகளையும் வெளிப்படையாகச் சாட்டையால் அடிப்பதுபோல் சமுதாயத்திற்குக் காட்டுகின்றன. அந்த வகையில் அமரர் செம்பியன்செல்வன் அவர்களுடைய 'இதயக்குமுறல்' என்ற சிறுகதையில் ஒரு வீட்டில் அம்மாவும் திருமணமாகாத மகளும் ஒரே நேரத்தில் கர்ப்பம் தரிக்கின்றனர். பிரசவத்தில் அம்மாவின் குழந்தை இறந்துபோகிறது. மகளுக்குக் குழந்தை பிறந்ததைச் சமுதாயத்தினர் சாடினால் தங்களது மானம் போய்விடும் என்பதால், தந்தை மகளுக்குப் பிறந்த ஆண்குழந்தையை தனது குழந்தையாக ஆக்கி, மகளிடமும் சத்தியம் பெறுகிறார். எப்பொழுதும் இவனின் தாய் என்று சொல்லக்கூடாது என்று எனவே வழிவழியாக உறவுமுறை மாறுவதால் மகளுக்கு ஏற்படும் மனக்குமுறலை இக்கதையில் பதிவுசெய்கிறார். இக்கதையில் தனது பிள்ளைக்குத் தாயாக வேண்டிய பெண் அக்காவாகவும் மாமியாராக இருக்கவேண்டிய இடத்தில் நாத்தனாராகவும் குடும்ப உறவில் ஏற்படும் பண்பாட்டுச் சிதைவுகளை அமரர் செம்பியன் செல்வன் மிகயதார்த்தமாகப் பதிவு செய்துள்ளார்.

## பேச்சு வழக்கு

ஈழத்துச் சிறுகதைகளின் பேச்சு வழக்கு என்பது தனித்துவமானது. வடமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் கலந்து பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. ஈழத்துச் சிறுகதைகள் தூய்மையான தமிழ்ச் சொற்களிலும் எழுதப்பட்டுள்ளன. சான்றாக,

"மாடுகள் கழுத்துமணிகள் கிணுகிணுக்க புல்லை அரைக்கின்ற சத்தம் கேட்கும்.கூடவே மாடுகள் பலத்து மூசி மூச்சுவிடுவதும் வாலைத் தூக்கி விளாசி ஈக்களை விரட்டுவதும், கேட்கும் சாணியின் மணத்துடன் பசும்புல்லின் வாசனை நாசியில் உறைக்கும். கோழிகள் எல்லாம் ஏற்கனவே கூடுகளில் அடைக்கப்பட்டிருக்கும். குறுகுறுவெனக் கொக்காக்கும். 'படபட'வெனச் சிறகுகளை உல்லாசமாக அடிப்பது கேட்கும்"

என கோசலை என்ற சிறுகதையில் ஆசிரியர் ரஞ்சகுமார் அவர்கள் பேச்சுவழக்கில் வர்ணனை நடையை மிக நேர்த்தியாகப் பதிவு செய்கிறார்.

ஈழத்துச் சிறுகதைகள் தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும் ஏற்பட்ட இனக்கலவரத்தைப் பின்புலமாகக் கொண்டும் சமுதாயப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டும் அமைகின்றன. அமரர் செம்பியன் செல்வன், மாத்தளை செல்வராஜா, ரஞ்சகுமார் ஆகியோரின் சிறுகதைகள் மட்டுமே இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சமுதாயச் சித்தரிப்பில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையும் குடும்ப உறவுகளில் காணப்படும் பண்பாட்டுச் சிதைவுகளையும் இக்கட்டுரை ஆய்வு செய்தது. இதில் ஆய்வு செய்யப்படாத பல பொருண்மைகளும் உள்ளன. பேச்சுமொழி வழக்கு சிறுகதைகளில் எளிய நடையில் அமைந்துள்ளமையும் காணமுடிகிறது.

ஜனனி வேணுகானன்

# எழுதலின் விதிகள்


அந்தகாரத்து இருள் கவிந்த வானம்
திசையறியாப் பறவையொன்றின்
புயல் திசைப் பயணம்
மாய வாழ்வில் மதர்ப்பின் நாணேற
சிதைக்க முனையும் கூர் அம்பு விழிகள்

ஒவ்வொரு நாள்களும்
ஒவ்வொரு இறகுகளென உதிர
தொடரும் பறத்தலின் வேட்கை

மலைகள் கடல்கள் தாண்டி
மின்னும் நினைவின் சுடர்
உயிர் மூட்டும் கூட்டின் கதகதப்பு
உடையும் கடைசி பற்றுதல்

ஓய்ந்து ஒடுங்குகையில்
பரந்த மார்பாய் பாய் விரிக்கும் புற்றரை
ஒளிந்திருந்த பெருஞ்சுழியில்
தப்பிப் பிழைக்கச் செய்யும்
பெருங்கருணை

விழுதல் எழுதல் பறத்தலென
சுழல்கிறது வாழ்வு



# புறக்கணிப்பின் மீதான பாடல்

கடலோர மணற் படிவில்
இரு ஜோடிப் பாதச்சுவடுகள்
என் முற்றம் நெடுகிலும் சிதறுகின்றன
நினைவுக் கிழிஞ்சல்கள்
நேசிப்பின் ஆத்மார்த்தமான துடிப்பில்
ஈரச் சுவர்களில் இன்னமும் அதிர்வு
நீர்ப்பாசியாய் எண்ணிப் பதறி விலகிய
உன் பாதங்களின் கவனம்
நசுக்கிப்போனது ஒரு குயிலின் குரலை
கடதாசிப் பூ என்றாய்
அதன் ஒவ்வொரு இதழ்களும் உரமாகின
உருவாகியிருக்கின்றது
உயிருள்ள ரோஜாச்செடி
நாளை பூக்கும் முதற் பூவின் உரிமை
நிச்சயமாய் உனக்கில்லை
மௌனத்தின் கூச்சலின் பின் எழும்
நெட்டுயிர்ப்பில் மெல்ல விலகுகிறது
புறக்கணிப்பின் பெரு நிழல்

# சலித்துப் போன பகலும் சில நினைவுகளும்

எரிக்கும் பகல்
வெற்றுக் கால்களுடன்
உனைத் தேடிய பயணம்
கூத்தாடும் நினைவுகளில்
சில நெருஞ்சி முட்கள்
பாதக் குளுமைக்கு
நீர் தேடி மூர்ச்சையாகும் முன்
கண் முன் வரும் ஒற்றைத் தோணி
கானலில் துடுப்பு வலித்து
கரை சேருமாப் போல் ஓர் கனவு
இப்போது உள்ளங்கால் பரவும்
குளிர் மெல்ல மேலேற
முறுக்கிடும் நரம்புகள்
குளிரை உதறி
மீள வெயில் தேடி ஏங்கும் பாதங்கள்
நீ என் வெயில் கூடவே நிழலும்


# முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022



சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்